
# எரிமலை

ஜனவரி 1995

350
2675
5350
8025



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# அக்கறைப்பூக்கள்

**ஐயா! வணக்கம்.**

நான் தமிழ்நாட்டில் வசிக்கும் ஒரு தமிழன். கிட்டண்ணாவின் மறைவால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து இன்னும் மீளவில்லை. அவர் நினைவு வந்தாலே என் இரத்தம் சூடேறி கொலைகார இந்தியாவைப் பழிவாங்கத் துடிக்கும். ஆனால் நாங்கள் இன்னும் ஆயுதம் பிடிக்க ஆயத்தமாகவில்லை. இருந்திருந்தால் எதிரிகளின் தலையை சூறையாடியிருப்பேன். மாறாக என் உணர்வின் கொதிப்புக்களை கவிதையாக மாற்றியிருக்கிறேன். தமிழ்நாட்டின், தமிழ் மக்களின் கொதிப்பையும், உணர்வையும் உலகத் தமிழர்களுக்கு அறியச்செய்யவேண்டும்.



### அக்கினிப் பிழம்பு

அக்கினிப் பிழம்பாய் இருந்ததால்
மூழ்கடிக்கப்பட்டாய்
ஆனால்
ஆயிரமாய், லட்சமாய், கோடியாய்
வரலாற்றின் வரிகளாய்
எங்களுள் மூழ்கியுள்ளாய்
அநீதியை எதிர்த்தாய்
எதிரிகள் உன் கால் பற்றினர்
நீதியைத் தேடி நிமிர்ந்தாய்
உன்னை இந்தியச் சட்டப் புத்தகங்கள்
சாப்பிட்டுவிட்டு சனநாயகம் பேசின.
கிட்டண்ணா!
நாங்கள் உன்னும் உப்பிலும்
உனது இரத்தம்
எங்கள் ஒவ்வொரு இரத்தத்துளியிலும்
ஒவ்வொரு நீ....!
அக்கினி விதைகள் முளைத்து
இதோ! இன்று
ஆயுதக் கரங்களை உயர்த்தி
அணிவகுத்து நிற்கின்றோம்!

என்றும் உங்கள் நினைவாக
செல்லை பாலன்
செங்கை மாவட்டம், தமிழ்நாடு.

### அரிய பயணம்

அன்புடன்,

கடந்த ஜூலையில் நானும் மனைவியும் தமிழ் ஈழம் சென்றிருந்தோம். புலிகளின்

## சுதந்திரப் போரையும் எங்களின் அடிமை நிலையையும் நினைத்து அழத்தோன்றுகிறது

இலட்சிய வேட்கையும், வீரமும், தியாகமும் ஏற்கனவே நான் அறிந்தவையே. ஆனால் அவர்களின் பெருந்தன்மையையும், பண்புகளையும் நேரில் அனுபவிப்பதற்கும், மக்களின் மனதில் அவர்கள் பெற்றுள்ள இடத்தை அறிவதற்கும் இந்தப் பயணம் மிகவும் உதவிற்று.

இந்தப் பயணம் எனது கடைமைகளை எனக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளது.

பணிவன்புடன்
அ. பாலமனோகரன்

### கண்ணுற்றேன்

**கனம் ஆசிரியர் அவர்கட்கு,**

நான் புதிதாக ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தவன். தற்செயலாக என் நண்பர் மூலம் எரிமலையை கண்ணுற்றேன். எமது சொந்த மண்ணின் நிகழ்வுகளையும் கலை கலாச்சார இலக்கிய விழுமியங்களால் அவை பின்னப் பட்டிருப்பதையும் பார்த்து இவ்வளவு சிறப்புடைய அம்சங்களுடன் எரிமலை பவனி வருவதை அறிந்து பேரானந்தம் அடைந்தேன்; கவிதை ஒன்றினையும் நான் எழுதியுள்ளேன். மேன்மேலும் தொடர்வதுடன் மாதாமாதம் இவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான விவரங்களையும் அறிய ஆவலாயுள்ளேன். அத்துடன் எமது ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன். எமது ஆக்கங்கள் எவ்வகையில் அமையவேண்டும் என்ற வரைமுறையையும் தாருங்கள்.

நன்றி
அ. வேணுகோபாலன்

### முட்கள் நிறைந்த சமாதானப் பாதை

**எரிமலை ஆசிரியருக்கு,**

நவம்பர் மாத அட்டைப்படம் (மாவீரர் துயிலும் இல்லம்) கண்கலங்க வைத்துவிட்டது. முட்கள் நிறைந்த சமாதானப் பாதையில் சந்திரிகா மீண்டும் பேச்சுவார்த்தையை தொடரவேண்டும். அதற்காகவே மக்கள் அவருக்கு அங்கீகாரம் (இனவாதத்தை எதிர்த்து) வழங்கியுள்ளனர். இதுவே உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஏ. மகீந்தன்
பாரிஸ், பிரான்ஸ்

### விடியலை நோக்கி தமிழீழம்

**அன்புள்ள எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,**

தங்களின் இனிய மாசிலாமணி எழுதும் மடல்.

ஐயா! எனக்கு ஐப்பசி மாத இதழ் அனுப்பியமைக்கு நன்றி. அதில் பின்புறம் தமிழீழக் கொடி பறப்பதைக் கண்டவுடன் தமிழீழம் விடியலை நோக்கி விரைவாகப் போவதையும், விடுதலை கைக்கெட்டும் தூரத்தில் இருப்பதையும் பறைசாற்றுவதை உணர்ந்தேன். இதழைப் பிரித்த பின் அதிர்ச்சி. அடிமை என் மடலையும் அக்கறைப் பூக்களில் வெளியிட்டமைக்கு என் தலைதாழ்த்தி வணக்கங்கள் பலகோடி.

இரு கப்பல்களை தகர்த்து ஆணுக்கு பெண் எதிலும் குறைந்தவள் இல்லை என்பதை நிரூபித்த சகோதரி அங்கயற்கண்ணிக்கு என் வணக்கங்கள்.

ஒப்பரேசன் உணர்விற்காகவும், சகோதரி பாமாவின் வீரவரலாறும் என்னைப் போல உள்ளவர்கள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டியது.

30.9.94 இதழில் வெளிவந்துள்ள அராலி கன்னி வெடி, ஆனையிறவு சமர் படித்தவுடன் சுதந்திரப் போரையும், எங்களின் அடிமை நிலைமையையும் நினைத்துப் பார்த்து அழுவதைத் தவிர எனக்கு அதிகம் எதுவும் தெரியவில்லை. தலைவரின் முகம் கண்டவுடன் வணங்கத் தோன்றுகின்றது.

ஐப்பசி மாத எரிமலை இதழில் இலங்கை இனப்பிரச்சினையில் மகாவம்சத்தின் பங்கு பற்றி படித்தவுடன் எப்போதோ யாரோ எழுதிய வார்த்தைகள் எவ்வளவு தூரம் நம்மை இப்போது பாதிக்கின்றது என்பதை மிகவும் உணர்ந்துகொண்டேன்.

பாய்வதற்காகப் பதுங்கிய புலிகள் படித்தவுடன் இந்திய நாட்டு படைகள் செய்த கொடுமைகளை எண்ணி அழுவதைவிட அவர்களை அடித்து விரட்டி சுதந்திரத்திற்காகப் போராடுபவர்கள் எல்லோரையும் விட பெரிய மாவீரர்கள் என்பதை உலகத்திற்கு உணர்த்திய எம்மின தலைவரை நினைத்துப் பெருமிதம் கொள்கிறேன்.

திரைப்படவியல் எவ்வளவு உயர்வானது. நமது வளர்ச்சிக்கு திரைப்படங்கள் எவ்வளவு தேவையானது என்பதை உணர்ந்து கொண்டேன். ஆனால் எனது அடிமை நாட்டில் திரைப்படங்கள் இப்போது பார்க்கும் படியாக இல்லை. எமது கலாச்சாரத்தினையும், மக்களையும் இப்போது எல்லோரையும் விட அதிகம் கெடுப்பது திரைப்படங்களே. என்னால் கொஞ்ச நேரங்கூட படங்களைப் பார்க்கமுடியவில்லை. பல படங்களைப் பார்க்கும் பொழுது எமது இன, கலாச்சார, மொழியை கெடுப்பதைப் பார்க்கும் பொழுது அதன் இயக்குனர்களை எம் மண்ணைவிட்டே விரட்டவேண்டும் என்ற எண்ணம் என் மனதில் மிக அதிகமாக எழுகின்றது.

தொடர்ச்சி 41ம் பக்கம்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*தேசமெல்லாம் அகதி முகத்தோடா திரிவது*
*வெட்கமாய் இருக்கிறது*
*கைதி நிலையில் வாழ்க்கை*
*பிடிப்பற்றுப் போகிறது*
*இந்தத் தெருக்களில்*
*எல்லோரும்தான்*
*ஏதோ சோகங்களை மூட்டையாக*
*சுமந்தபடி போகிறார்கள்*
*நின்று கதைப்பதற்கும் நேரமில்லாமல்*
*கைகளை மட்டும் காட்டிவிட்டு*
*உதடுகளை மெல்லத் திறந்து*
*பற்களைக் காட்டி*
*நல்லாத்தான் சிரித்தேன்*
*எனச் சிரித்து*
*நடக்கின்ற பொல்லாத வாழ்வு.*

*தூரத்தே இருந்து கடலை,*
*முற்றத்தை, மணல்தெருவை, மண்ணைத்*
*தொட்டழைந்து செய்த காதலை*
*சுமந்த கனவுலக மனிதர்.*

*இதயம் கனிந்து விழிகள் சிவந்து*
*இந்த புதுயுக மனிதரென எழுவோம்*
*வழிகள் திறக்கும் வாழ்வு சிறக்கும்*

## இதழின் உள்ளே


★ மரணத்தின் பின்பும் ஒரு வாழ்வு (கேணல் கிட்டு நினைவுக் குறிப்பு) - 05
★ கடலின் மடியில் (மேஜர் வித்தி பற்றிய குறிப்பு) - 09
★ அநாதரவான சிறுவர்களை தலைவர்களாக்குவதே இலக்கு - 12
★ கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா - 13
★ வனவாசத்தில் (சிறுகதை) - 16
★ நேர்காணல் - செம்பியன் செல்வன் - 21
★ காட்டு அன்னங்கள் - 28
★ தமிழீழ தேசியக்கொடி - 37
★ தென்திசையைப் பார்க்கிறேன் என் சிந்தையெல்லாம்.... - 39
★ எங்கள் தேசம் நிமிர்வுற நிமிர்ந்தவன் (லெப். கேணல் மல்லி பற்றிய குறிப்பு) - 42
★ இங்கேயும் அகலிகைகள் - 44


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

பதின்நான்காம் ஆண்டு
ஜனவரி 1995


ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு


**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42


www.tamilarangam.net

# சந்திரிகாவின் தடுமாற்றமும் சமாதானத்தின் தள்ளாட்டமும்

சிறீலங்காவின் ஜனாதிபதி, சந்திரிகா குமாரத்துங்க பல்வேறு சங்கடங்களுக்குள் அகப்பட்டுள்ளது அப்பட்டமாகத் தெரிகிறது. விலைவாசி உயர்வு, வாழ்க்கைத்தரம் மோசமடைவு, வேலைநிறுத்தங்கள், தொழில் தகராறுகள், எதிர்க்கட்சியினரின் இனவாதத்தூண்டுதல்கள், இராணுவத்தின் கெடுபிடி, பத்திரிகைகளின் நெருக்குதல்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை அவர் எதிர்கொண்டுள்ளதும், தடுமாறுவதும் தெரிகிறது.

இத்தடுமாற்றங்கள், சமாதான முயற்சியிலும் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. அவர் பிரதமராய் இருந்தபோது, சமாதான முயற்சிகளில் காட்டிய ஆர்வம் வெகுவாய் குறைந்துள்ளது போல் தெரிகிறது. விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசி, இனப்பிரச்சினையைச் சமாதான ரீதியாகத் தீர்த்தல் என்ற நிலையிலிருந்து பிறழ்வது போல் உள்ளது. பல்வேறு வழிகளை, தடங்களை, இலக்குகளை அவர் நாடுவது போலவும் காணப்படுகின்றது. 2ம் கட்டப் பேச்சுவார்த்தையைத் தொடங்காது இழுத்தடிப்பது இதனையே குறிக்கின்றது. நத்தார் தினத்தின் முன்னர் பேச்சுவார்த்தை நடைபெறும் என்பது இடம்பெறவில்லை. இது குறித்து தலைவர் பிரபாகரன், "சந்திரிகா காலங்கடத்துவது குறித்து குற்றம் சாட்டவில்லை. சமாதானத்தீர்வில், அவருக்கு அக்கறை குறைந்துகொண்டு போவதையை சுட்டிக்காட்டுகிறோம்." என்று TIME சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

தீர்வுத்திட்டம் எதனையும் தயாரிக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் உள்ளதா என்பது குறித்தே சந்தேகப்படவேண்டியுள்ளது. பல்வேறு சமாதானத் திட்டங்களை (?) தமிழரிடையே உள்ள காட்டிக்கொடுப்பு அமைப்புகளிடமிருந்தும், வெளிநாட்டு சில அரச நிறுவனங்களிடமிருந்தும் பிறப்பித்து, உலாவிட அரசாங்கமே முயற்சிப்பது அறியவந்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்ற அதேவேளை, ஏனைய தமிழ் கட்சிகள், குழுக்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ நடத்தும் திட்டமும் அம்பலமாகியுள்ளது. மேலும் இராணுவச் செலவுக்கான நிதி அதிகரிப்பு, இராணுவத் தளபாட இறக்குமதிகள், ஆயத்தங்கள், விசேஷ பயிற்சிகள் (இந்திய உளவுத்துறையின் சிறீலங்காப் படையினருக்கான உளவுத்துறைப் பயிற்சிகளும், கூட்டுச் செயல்களும்) ஆகிய யுத்த முஸ்தீபுகளும் வெளிவந்துள்ளன. தலைவர் பிரபாகரனை கைதுசெய்தல், வழக்குவைத்தல், நாடுகடத்தல், கொல்லுதல் போன்ற விடயங்களும் இந்திய, சிறீலங்கா அரசியல், இராணுவ மட்டங்களில் ஆராயப்பட்டுள்ளன. வடக்கையும், கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிப்பதற்காக, மணலாற்றுப் பகுதியில், இராணுவ முகாம்களையும், காப்பரண்களையும், பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரையும், ஆயுதம் தாங்கிய சிங்கள ஊர்காவல்படைகளையும் கொண்ட ஒரு இராணுவ மதில் கட்டப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி சந்திரிகாவும் பல்வேறு அழுத்தங்களுக்கு உட்பட்டு, முன்னைய அரசாங்கங்கள் எடுத்துவைத்த பாதையில் நடைபோட முயல்வதையே இவை எடுத்துக்காட்டுகின்றன. மேலும், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையோ, தமிழ் மக்களது தாயகக் கொள்கையையோ, தமிழீழத்தின், அரசை நோக்கிய அரசாங்கத்தையோ, புதிய அரசாங்கமும் புறக்கணித்துள்ளதாகவும், அதனடிப்படையில், தீர்வுகாண முயற்சிப்பதாகவும் தெரிகிறது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை, முழு உரிமைகளைப் பிரதிபலிக்கின்ற நிரந்தரமான, எதிர்கால சுபீட்சத்தை நோக்காகக்கொண்ட சமாதானம் குறித்து தமிழ் மக்களும், விடுதலைப்புலிகளும் கருதிநிற்க, அரசாங்கமோ, கல்வி, வேலை, மொழி அகிய தனித்தனி உரிமைகளில் சம அந்தஸ்து வழங்குவது குறித்துப் பேசுகின்றது. தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியையும், பாதுகாப்பையும், வளர்ச்சியையும் தாங்களே தீர்மானிக்கின்ற ஒரு கட்டமைப்புக் குறித்துச் சிந்தித்து நிற்க, அரசாங்கமோ எங்கள் தலைவிதியைத் தான் தீர்மானித்து, சில உரிமைகளை, சலுகைகளைத் தருவதாகக் கூறுகிறது. இது, உண்மையான அரசியல் அதிகாரப் பகிர்வாகக்கூட (Sharing of political power) அமையாது.

இவ்வாறான, மேலே கூறப்பட்ட நெருக்கடிக்குள் ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்க சிக்குண்ட போதிலும் சிங்கள மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதனையும், அதனை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியே சாதிக்கமுடியும் என்பதையும் அவர் மறக்கவில்லையென்றே கருதுகிறோம். நேர்மையான முறையில், விடுதலைப் புலிளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையைத் தீர்க்க உறுதியாக முயலுதல் என்பது சந்திரிகாவின் யதார்த்தபூர்வ அணுகுமுறையோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. சிங்கள மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்பும் அதுதான். நம்பிக்கை என்பது பரஸ்பரமாக இருந்தால், இரு சாராருக்கும் வெற்றியே. அரசாங்கத்துக்கு சமாதானமாகப் பிரச்சினையைத் தீர்க்க இதுவே கடைசிச் சந்தர்ப்பம்; இதனை நழுவவிட்டால் அது தன் உள்நாட்டுப் பிரச்சினைகளிலிருந்து மீள்வதும் கஷ்டம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net


# மரணத்தின் பின்பும் ஒரு வாழ்வு

-சுபா-

## சூரியப் புதல்வர்

அப்பொழுது மன்னாரில் பரப்புக்கடந்தான் காட்டில் இருந்தும் பல தோழர்கள் விடுதலைக்காக உழைத்தார்கள். ஆற்றில் குளித்தும், காட்டுப் புதர்களிடை மறைந்து நின்று வெயிலில் காய்ந்தும், உணவுக்கு ஒன்றுமில்லாத போது குரங்குகளைச் சுட்டும், பாம்புகளைப் பிடித்தும், காட்டில் கிடைக்கும் காய்கனிகளைப் பறித்தும் சாப்பிட்டுப் பசி தீர்த்தார்கள். புதிய களை எப்போதும் அவர்களுக்குள் இருந்தது. இதயத்துக்குள் மெல்லியதாக ஒரு சோகத்தின் நெருடல் எப்போதும் இருந்தது. ஊருக்குள் வாழும் தம் இனிய உறவுகளின் எண்ணம் சிலவேளை நிரம்பி வழியும்போது துடித்துப் போவார்கள். அம்மா நேற்றும் வழியில் தன்போல் ஒருவனைக் கண்டு "மகனே!" என்று அழைத்து ஏமாந்திருக்கிறாள் என்ற கதையைச் சொல்லி சிரிக்கவா செய்திருப்பார்கள். அழுதிருக்கிறார்கள்.

காட்டுப் புஸ்பங்கள் பனிநீரில் குளித்து சூரியன் முகம் பார்த்து மலரும். நிலவொளியில் பச்சைக் காடு பொத்திவைத்த ரகசியமாய் ஒளிரும். அங்கு ஆனந்தமயமான ஒரு பிழிவு குடிகொண்டிருக்கும்.



சூரியப் புதல்வர்

எங்கள் விடுதலை வீரர்கள் இருப்பதனால்தான் இன்னும் அதற்கு மெருகு ஏறியது.

நிதி, விக்டர், ஜரால்ட், பீரிஸ், அன்சார், நிறைய இப்போதும் உயிரோடு இருக்கின்ற வீரர்களும் இருந்தனர்.

உயிரோட்டமான வாழ்வியலின் சொந்தக்காரர்கள். அவர்களின் சிரிப்பை, அவர்களின் ஒவ்வொரு அர்த்தமுள்ள செயல்களை, அவர்கள் பாடிய பாடல்களை நினைத்தால் ஆழ வலி ஏற்படும்.

அந்த வாழ்க்கையைப் பதிந்தேன். அப்போது கிட்டண்ணா அதனை இன்னும் சிறப்பாக எழுதுமாறு பணித்தார். மீண்டும் எழுதினேன். எனக்குள்ளே இன்னும் ஆழமாய்ப் புதைந்தேன். கையெழுத்துப் பிரதியிலிருந்த அக் குறுநாவலுக்கு பெயர் சூட்டும்படி கிட்டண்ணாவைக் கேட்டேன்.

"என்ன பெயர் வைக்கலாம்?" என்று கேட்டுக்கொண்டே, "நீ இருட்டைக் கிழித்தவர்களைப் பற்றித்தானே எழுதியிருக்கிறாய். எமக்கெல்லாம் ஒளியெனச் சுடர்ந்தவர்களைப் பற்றித்தானே சொல்லியிருக்கிறாய். விடுதலைக்காக எழுந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வீரர்கள் எமது பூமியின் புதல்வர்கள் இல்லையா? அவர்களைச் 'சூரியன்'கள் என்று சொல்ல வருகிறேன், உனக்குச் சம்மதமா?" என்றார்.

"என்னண்ணா இதில் சந்தேகமிருக்கிறது, அவர்கள் அப்படிப்பட்டவர்கள்தான்" என்று பதிலளித்தேன்.

கதிராய் எழுந்து, மழையாய்ப் பொழிந்து, மக்கள் மனங்களை வென்று, இருள் எனும் அரக்கனை விரட்டி எங்கள் பூமி எழுந்திடச் செய்த வீரர்கள் சூரியப் புதல்வர்கள்தான்.

'சூரியப்புதல்வர்கள்' என்ற பெயரினையே வைப்போம் என்று கூறி முடித்தார்.

பெயர் சூட்டுகின்ற அந்த உரையாடல் சாதாரணமானதாக இருக்கவில்லை. ஆழமானதாகவே இருந்தது.

அவ்வாறு எல்லாம் பேசிய எங்களின் அண்ணன் அவரே ஒரு சூரியனாகச் சுடர்ந்த கதையை, அவரது வாழ்க்கையை எனக்குள் மட்டும் சொல்லிக்கொள்வதற்கில்லை. எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டியது கடமை.

ஒப்பில்லாத் தலைவரின் தளபதியாக, தம்பியாக அவர் நின்றார். மண்ணின் ஒளிக்கீற்றென அவர் சுடர்ந்தார்.

## நெருப்பு மனிதன்

கிட்டண்ணா மிக அருமையான, அழகிய, ஆளுமைமிக்க ஒரு சிறந்த மனிதனாக வளர்ந்து வந்தார். அத்தகைய ஒருவரின் நேர்தரிசனம் சாதாரணமானதல்ல. அவர்களோடு வாழ்ந்தோம் என்பதே மிகப் பெருமையான விடயம் கூட. அவர் விழிப் பார்வையில் துயர்கள் கலைந்தன. தீயன கருகின. அன்பு மலர்ந்தது. எப்போதும் நெருப்பாக இருக்கின்ற இந்த மனிதனுக்கு குளிர்கின்ற ஓடையின் ரகசியமாய், அன்பெனும் ஆறாய் ஊற்றெடுத்துச் செல்லவல்ல வாழ்க்கை எப்படி வாய்த்தது?

தீயதை, கொடுமையை, போலியை, பொய்மையை, ஆணவத்தை சுட்டெரிக்க நெருப்பு வேண்டும். நெருப்பு உயிரின் சூடு. அது சக்தியின் வடிவம். அது கனல வேண்டும். அந்த நெருப்பில் நாமும் குளிக்கவேண்டும். குளித்தார், குளிப்பித்தார்.

www.tamilarangam.net



நெருப்பு மனிதன்

கிட்டண்ணா நெருப்பாகவே நின்றார். அந்தக் கோலம் அழகியது. எங்கள் வீதியில் ஆக்கிரமிப்பாளன் எப்படித் திரியலாம்? எதிர்த்தார்.

எங்கள் வீதிகளை எப்படி அவர்கள் சுட்டெரிக்க முடியும்? கேட்டார்.

மக்கள் எல்லோரையும் கூட்டி நின்று போராடினார்.

நீதியும், சத்தியமும், தியாகமும் அர்ப்பணிப்பும் கொண்டவராக அவர் நின்றார்.

## புலம்பெயர் மண்ணில்

புலம்பெயர் மண்ணில் வாழும் தமிழீழ மக்களையும் சந்திப்பதற்கென வந்தார். அவர்கள் முகம் தொலைந்தவர்களாகப் போவதை வெறுத்தார். அதற்காக கடுமையாக உழைத்தார். எமது மண்ணில்தான் சுதந்திரமான, கௌரவமான நல்வாழ்வு உண்டு என்பதை வலியுறுத்தினார்.

இன்றும் அவர் பேசிய வார்த்தைகள் சத்திய வார்த்தைகளாக இருப்பதை நினைக்கும் போது தாங்கமுடியாத துயர் வழியும்.

குளிர் காலத்தில் பனிப்பிடித்து வீதிகள் சறுக்கு நிலையில் இருக்கும். எனினும் ஒற்றைக் காலோடு நடந்து மக்களைச் சந்திப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார். அந்தவேளை எல்லாம் எந்த மனிதனையும் நெருடும் அக்காட்சி. தனக்காகவா? எங்களுக்காக........ எங்களுக்காக என்பதை உணருகின்ற ஒவ்வொரு இதயத்திலும் வலி அதிகமாகும். புலம் பெயர் மண்ணில் வாழும் மக்கள் வீடு திரும்பி சுதந்திர நல்வாழ்வு வாழவேண்டும் என்றும் துடித்தார். இரவும் பகலும் அடியாய் அடிக்கும் எம் இளைஞர்களையும் தியாகத்தின் வடிவினராகக் கண்டார். இயலாத தன் தாய்க்காக, தன் தந்தைக்காக, தன் இனிய குடும்பத்துக்காக உருகும் மெழுகுவர்த்திகளாகவே கண்டார்.

எல்லோர் மீதிலும் அக்கறையும் அன்பும் கொண்டிருந்தார். மீறி, பாதை விலகிப் போவோர்களை நெறிப்படுத்த வேண்டும் என விரும்பினார். அதற்காகவும் உழைத்தார். இந்த வகையில் மக்களைச் செழுமைப்படுத்த, மக்களின் நல்வாழ்வில் அக்கறைகொண்ட பல செயற்திட்டங்களுக்கு செயலுருவம்




புலம்பெயர் மண்ணில்

கொடுக்கும் முகமாக அவற்றை அவரே முன்னின்று நெறிப்படுத்தினார். இவற்றை பலர் அறிந்திருப்பார்கள். இந்த வகையில் எரிமலை, களத்தில், உலகத் தமிழர் போன்ற சஞ்சிகை, பத்திரிகைகளில் அவரின் ஆளுமை செறிந்திருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிலை சஞ்சிகையும் அவரின் அக்கறைகொண்ட பார்வையும்

ஒவ்வொரு மாதமும் எரிமலை தொடர்பாக உரையாடினார். அதன் குறைநிறைகளைப் பேசினார். இன்னும் நன்றாக எப்படிச் செய்யலாம் எனக் கேட்பார். போனமாதம் எரிமலையின் வடிவமைப்பு திறமாக இருந்தது. தேங்காய் மட்டைகளை ஏற்றி வருகின்ற ஒருவரை பின் அட்டைப்படமாகப் பிரசுரித்திருந்தோம். அவர் களைத்து விழுந்து வீடுபோகிறார். போனதும் மனைவி தேனீர் தயாரித்துக் கொடுத்துவிட்டு "ஊரிலை எல்லோரும் மாவீரர் வளைவு கட்டப் போயிற்றினம், நீங்களும் போங்கள்" என்கிறாள். 'உடல் களைத்தாலும் மனம் களைக்கவில்லை' என்று அவர்



எரிமலை சஞ்சிகையும் அவரின் அக்கறைகொண்ட பார்வையும்

எழுந்து போகிறார். இவ்வாறு கீழே எழுதியிருந்தோம். அவருக்கு அது பிடித்திருந்தது. நன்று என்று கூறினார். சந்தோஷப்பட்டார். கிட்டண்ணா மிக நன்று என்று சொல்கிற வகையில் வெளிவந்த எரிமலை பலவற்றின் வடிவமைப்பு, உள்ளடக்கம் என்பன அவரைக் கவர்ந்திருந்தது. எரிமலையில் தொடர் கட்டுரைகள் வருவதை அவர் அறவே விரும்பவில்லை. இயந்திர வாழ்வியக்கத்தின் மத்தியில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு அவை வசதியீனத்தையும் அசௌகரியத்தையும் கொடுத்து சலிப்பை ஏற்படுத்திவிடக்கூடும் எனக் கூறினார். அதேபோல நீண்ட பக்கங்களைக் கொண்ட கட்டுரைகளையும் தவிர்க்கும்படி கேட்டார். நறுக்குத் தெறித்தாற்போல் சுருக்கமாய், தெளிவாய் விடயங்கள் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

www.tamilarangam.net

பின் அட்டையில் அண்ணர் சற்று துணிச்சலான காரியம் ஒன்றினை மேற்கொண்டுவரப் பணித்தார்.

அதாவது நவீன ஓவியங்களைப் பிரசுரிப்பது.

எமது மக்களிடம் ஓவியம் பற்றிய பார்வை இல்லாது போகிறது. ஓவியங்கள் அருமையானவை. அவை கண்களால் பார்த்து ரசித்து கருத்தேற்றும் சக்தி வாய்ந்தவை. அதனை எமது மக்களிடத்து பரிச்சயம் ஆக்கவேண்டும் என்று ஆதங்கப்பட்டார். அந்தவகையில்தான் நாம் ஓவியங்களைப் பிரசுரித்து வருகிறோம். இன்று தமிழில் பெயர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஓவியர்கள் வளர்ந்திருக்கிறார்கள். வளர்ந்து வருகிறார்கள். அவரது நம்பிக்கை சாகவில்லை. கிட்டண்ணாவும் ஒரு ஓவியராக மிளிர்ந்தார் என்பது வாசகர்கள் அறிந்ததே.

எரிமலை எப்போதும் புதிய மாற்றங்களோடு வருவதை விரும்பினார். அதன்படி அவர் நெறிப்படுத்தவும் தவறவில்லை. எரிமலை சஞ்சிகையினுடைய வேலைத் திட்டங்களை அவர் ஆழமாகவே வரையறுத்திருந்தார்.

புலம்பெயர் மண்ணின் அவலங்களை சுட்டெரிக்கின்ற தன்மையை எரிமலை கொண்டிருக்கவேண்டும் என விரும்பினார். தாய் மண்ணின் மீது புதிய காதல் கொடிவிட்டு இறங்கும் செயலினை அது ஆற்ற வேண்டும் என ஆதங்கப்பட்டார். எங்கெங்கு காணினும் சக்தியின் பிரவாக ஊற்றை தோற்றுவிக்க வேண்டும் என்று துடித்தார்.

இரத்தமும் மண்ணும் ஒட்டிய சத்திய வாழ்வின் தரிசனமாக விளங்கும் இலக்கியத்தை எமது புலம்பெயர் மக்கள் நுகரவேண்டும் என ஆவல்கொண்டார். மண்ணில் இருந்து எழும் எழுத்துக்களை தரிசனமாக்குதல் என்ற அடிப்படையில் எரிமலையை வழிநடாத்தினார்.

போராட்ட வாழ்வியலின் துடிப்பை, மண்ணின் உயிர் மூச்சை, அதன் ஆத்மார்த்த உச்சரிப்பை வெளிக்கொணர்ந்து எம்மையும் எழவைக்கும் நோக்குக் கொண்ட அந்த இலக்கியத்தை அவர் உயிராய் நேசித்தார். அதைப் பரப்பும் வகை செய்தார். இலக்கியம் இயல்பாக, சமூக அநீதிகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டத்திற்கு இட்டுச் செல்லும் என்ற பெரும் உண்மையை உணர்ந்து அதன்படி எரிமலையை இயக்கினார்.

தேசத்தின் நினைவுகளை கிளர்த்துகின்ற விடயங்களை அடிக்கடி பிரசுரிக்கவேண்டும். அதனால் தாயமண்ணின் மீது என்றும் வற்றாத அன்பின் ஊற்று எம் இளைஞர்களின் உள்ளத்தில் இருந்து பாயும் என எண்ணினார்.

முகம் தொலைந்த ஒரு சமூகத்தினராய் நாம் ஆவதை விரும்பாத ஒரு தந்தையாகவே அவர் இருந்தார் என்பது பலருக்குத் தெரியாமல் போகலாம்.

## அவர் ஒரு புதுக்கவிதைப் பிரியர்

புதுக்கவிதைகளிலே மிகுந்த ஆர்வமும் காதலும் கொண்டவர். போராட்டக் காலத்திலேயே அதிகமான புதுக்கவிதைகள் எழுந்தன. வீச்சும், ஆழமும், கருத்துச் செறிவும் மிக்க இந்தக் கவிதைகளை அவர் விரும்பிப் படித்தார். தனிமையில் இருக்கும்போது உரத்து வாசிப்பார். அந்தக் கவிதையாகத் தான் வாழ வேண்டும் என்று கூறுவார். ஒரு கவிதையை யாத்த கவிஞனை விட அவர் மேலானவராக நின்றதை நாம் அங்கு காண்கின்றோம்.

## தேசியத் தலைவர் மீது அளவுகடந்த நேசம் கொண்டிருந்தார்.

அட்டைப்படம் தொடர்பாக கதைத்துக் கொண்டிருக்கையிலே தலைவர் குறித்து பேசிக்கொண்டிருந்தார். தலைவரின் படத்தையும் பிரசுரிப்போம் எனச் சொன்னார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தமுறையுமா? அதோடு அடிக்கடி தலைவரின் படத்தைப் போடுவதா? எனக் கேட்டபோது,

அவர் எங்கள் தேசியத் தலைவர். அத்தகைய தலைவரை நாங்கள் போற்றும் வண்ணமாகத்தான் இதைச் செய்கிறோம். இன்றைய இந்த விழிப்பு நிலைக்கு, சுதந்திர வேட்கைத் துடிப்பிற்கு வழிகோலிய, வழிகாட்டிக்கொண்டிருக்கின்ற காவியத் தலைவர் அவர்தான். நீ தலைவரைப் பற்றி ஒவ்வொரு எரிமலையிலும் கூடிய பட்சம் ஏதாவது விடயமாவது பிரசுரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அப்போது எனக்கு கிட்டண்ணா தலைவரைக் குறித்துப் பேசிய விடயம் ஆழமாகப் புரிந்திருக்கவில்லை. பின்னர் ஒரு தடவை அறிந்தேன். எங்களின் தேசியத் தலைமையை மாற்றுவது குறித்து மேற்குலக அரசியல் சக்திகள் சில அக்கறை கொண்டு வந்தன என்று. ஆனால் இந்த விடயத்தில், எதிர்பாராத வகையில் நெற்றிப் பரப்பின் முன் உள்ள இந்தியா சதிநடவடிக்கைகள் மூலம் இறங்க முயன்றதை பின்னால் அறிந்தோம்.

இவ்வாறு ஒவ்வொரு நடவடிக்கையையும் ஆழமாகவும் தீர்க்கதரிசனத்துடனும் அவர் ஆற்றினார் என்பதற்கு மேற்கூறிய சம்பவத்தினை ஒரு உதாரணமாகவே பார்க்கலாம்.

இவ்வாறு நிறையவே அவரது ஆளுமையின் தெறிப்பு அனைத்திலும் வியாபித்திருந்தது.

## கலைவண்ணம் கண்டார்

போராட்டத்தினை உண்மையாகச் சொல்லவேண்டும். அதன் வலிமையை, சத்தியத்தை வெளிக்கொணர்ந்து காட்டவேண்டும். எந்த விதமான ஒழிப்பு மறைப்புகளுக்கும் அவர் இடம் கொடுக்கவில்லை. அத்தகைய திறந்த புத்தகமாக விளங்க அவர் உழைத்தார்.

எத்தனையோ தடவைகள் பேச்சுக்கள் வாங்கியிருக்கிறோம்; தண்டிக்கப்பட்டிருக்கிறோம். இத்தனைக்கும் அப்பால் உள்ள அந்த நேயத்தை, அவரது விரிந்த பார்வையை, சுயத்தை மீறி நின்று பார்க்கின்ற அந்தப் பார்வையை, ஞானவான்களுக்குரியதான அத்தகைய பண்பை அவரிடம் கண்டோம். அது வளர்ந்தது. பிள்ளைகளாக நினைத்து பிரம்பைக் கையாண்ட அந்தப் பண்பு இன்று நெஞ்சைப் பிளக்கின்றது. எங்கும் விழுதுவிட்டு இறங்குகின்ற செயலுக்குரியவராக அவர் இருந்தார். அனைத்திலும் கலை மிளிரப் பண்ணினார். எழுத்தில், இயக்கத்தில், சொல்லில், செயலில் கலையின் உயிர்ப்பு, ஆழம் இருந்தது.



எரிமலை சஞ்சிகை பற்றிய உரையாடலாகவும், வேறு பல விடயங்களை அலசிக்கொண்டதாகவும் இருந்த ஒருநாள் 'மதங்கள் சரியான பாதையைக் காட்டவில்லை, என்ற சீற்றத்தின் தொனி இருந்தது. 'மதங்களிற்கும் ஆன்மீகத்திற்கும் இடையே சரியான கோடு பிரிக்கவேண்டும்' என்பது பற்றி ஆதங்கப்பட்டார். நாடு சென்றதும் இந்தியாவிலுள்ள ஆன்மீகவாதிகளையும் ஈழத்து ஆன்மீகவாதிகளையும் சந்திக்கவைத்து ஒரு கலந்துரையாடலை நிகழ்த்த எண்ணியிருந்தார். அதை தனது முதல் வேலையாக செய்வதாகக் கூறினார்.

ஆத்மார்த்தப் பண்புகளின் அடிப்படையில் மனித வாழ்வின் இயக்கத்தையும், அப்பண்பு மிக்க கலை இலக்கியங்களையும் அவர் நேசித்தார். இனி வருகின்ற இலக்கியப் போக்குக் குறித்தும் அது ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் அவர் ஆழமாகவே சிந்தித்தார்.

விழுந்தவனைத் தூக்கிவிடுகின்றவனை, ஏழைகளின் இன்னல்களைக் கண்டு இவற்றுக்காய் உழைப்பவனை, விடுதலைக்காய் தனை உருக்கி சுடரென நிற்பவர்களை, வழி இருட்டில் நின்று தவிப்பவனைக் காப்பவனை, மண்ணில் போர்க்கோலம் கொண்டு நிற்கும் அந்தக் காவிய நாயகர்களை இந்தப் புதிய யுகத்தின் அதிஉயர் மானுடர்களாகக் கண்டார். விடுதலைப் போராட்டத்தில் புதைந்து கிடக்கின்ற ஆத்மார்த்தப் போக்கைச் சொல்லமுடியாமல் தவிக்கின்ற உளத்தின் தவிப்பாய், சதா தேடலாய் விரிந்த அவரது வாழ்வு நாம் அனைவரும் படிக்கவேண்டிய புதிய இலக்கியமாகும்.

மனோவலிமை மிக்க, தீர்க்கதரிசனம் மிக்க, திடம்மிக்க எமது தேசியத்தின் உயிர்நாதமென என்றும் விளங்கும் அவரின் வார்த்தையிலேயே 'மரணத்துக்குப் பின்னும் வாழ்வு உண்டு' என்போம். விடுதலையின் உச்ச பரிமாணங்களைத் தொட்ட அத்தகைய வாழ்வு சாகுமா? மாறாய் எங்கும், எம்முள்ளும் உயிர்க்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடலின் மடியில்

**எமது மண்ணை ஆக்கிரமித்திருக்கும் சிறீலங்கா கடற்படையால் எமது மக்கள் அனுபவித்து வருகின்ற துயரங்கள் சொல்லில் அடங்காது.**

எமது மக்களின் குருதி சிந்தி எங்களின் கடல் செங்கடலாய் ஆனது.

'என்றுதான் விடியுமோ?' என்று உளத்தே கவலை மிகக் கொண்ட வாழ்வு.

தொண்டைக்குழி இறுகி அந்தரத்தே தொங்கும் வாழ்வு ஒரு கேடா?

சிறீலங்கா கடற்படைகளின் அட்டகாசம் எல்லை கடந்து போயிற்று. எந்த நேரமும் இரவு பகல் என்று பாராது செல்லடிக்குள் சீவியம் நடத்தினர் மக்கள். கடும் பட்டினி கிடக்க நேரிட்டபோது கடலுக்குத் தொழிலுக்குச் சென்றவர்கள் பிணமாய் மிதந்தனர்.

வீடிழந்தும், வாசலிழந்தும், துணையிழந்தும், தொழிலிழந்தும் துக்கித்து நிற்கின்ற அழுத்தச் சுமைகளைச் சுமந்த மக்களின் வாழ்வை இருள் கொள்ளவோ?


அதிகாலை 12.25
8.11.94

நெட்ட உயர்ந்த கரும்பனைகள், உயர்ந்த மணல்குன்றுகளில் நின்று காற்றில் கலக்கும் கீதமிசைக்கும். பூவாய் காற்று மணல் சொரியும். பாலாய் எறிக்கும் நிலவில் தோயும் அந்த வெற்றிலைக் கேணியில்....

வெற்றிலைக்கேணி என்றதும் விடுதலைப் புலிகளே நினைவுக்கு வருவர்.

மண்ணை ஏறி மிதித்து நடந்த எதிரிப் படையினர் மீதொரு புயலாய் நின்று எதிர்த்த வரலாற்றின் நினைவு விரியும். காற்றின் வெளியில் கைகளை உயர்த்தி வீரம் உரைத்த கதை எழும். உப்பு வெளியிலும், வீசும் உப்புக் காற்றிலும் கங்குல் கிழித்தான் காவியநாயகன்; எங்களின் கடற் கரும்புலி மேஜர் வித்தி. புதிய காவியம் எழுதினான்.

108 அடி நீளமும் 26 அடி அகலமும் உள்ள அந்தக் கப்பல் மணிக்கு எட்டு கடல் மைல் வேகத்தில் ஓடக்கூடியது. அதன் வீச்சு 1800 கடல் மைலாகும். 268 தொன் எடையுள்ள அந்தக் கப்பலில் 600 துருப்புக்களை ஏற்றிச் செல்லமுடியும். அத்தோடு நான்கு கனரக வாகனங்களையும் ஏற்றிச் செல்ல வல்லது. 12 கோடி ரூபா பெறுமதியுள்ள இந்தக் கப்பல் ஆழ்கடலில் 1.5 மீற்றர் அமிழ்ந்து செல்லும். தரையிறங்கும் போது 2 அடி தண்ணீரிலும் மிதக்கக்கூடியது. 9.10.92 ல் கற்பிட்டிக் கடலில் மூழ்கிய 'கந்துல' தரையிறங்கும் கப்பல் இனத்தைச் சேர்ந்தது. இந்தக் கப்பல் ஆக்கிரமிப்பாளரின் பல ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குப் பேருதவியாக அமைந்திருந்தது. முல்லைத்தீவு, பூநகரி, வெற்றிலைக் கேணி எனப் பல இடங்களில் சிறீலங்காப் படையினரையும் வாகனங்களையும் தரையிறக்கப் பயன்பட்டது.



தாக்குதலுக்கு இலக்கான சிறீலங்கா கடற்படை தரையிறக்கும் கப்பல்

வீரர் இறுதி மூச்சொலிக்கும். அந்த வெற்றிலைக்கேணியில் சிறீலங்கா கடற்படை இராணுவத் தளபாடங்களை இறக்கிக் கொண்டிருந்தது. சிறிலங்காவிற்குச் சொந்தமான தரையிறக்கும் போர்க்கப்பலை நோக்கி கடற் கரும்புலி மேஜர் வித்தி சென்றான். வெடிமருந்தேற்றிய படகில் ஊடுருவிச் சென்றான். அதோ அந்தக் கப்பலின் மீது மோதிச் சாய்த்தான். எரிமலைப் பிழம்பென எங்கும் சோதி பரப்பி

இந்த கப்பல் பலத்த உயிர்ச் சேதங்களையும் பாரிய இழப்பையும் எதிர்கொண்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் இராணுவத் தளபாடங்களை இறக்கிக் கொண்டிருந்த சிறீலங்காவின் போர்க் கப்பலை தாக்கி வீரசாதனை படைத்த கடற் கரும்புலி மேஜர் வித்தி தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுடன் நிற்பதைக் காணலாம்

கரும்புலி மேஜர் வித்தியின் தாக்குதலின் பின் ஆழியின் ஓசை எழுந்து எங்கும் ஓங்காரித்தபடி இருக்க கடற்புலிகள் அதிவேகப் படகில் விரைந்தனர். மூன்றுமணி நேரமாக கடலில் கடும் சமர் நிகழ்ந்தது. சிறீலங்கா விமானப் படையின் ஹெலிகொப்ரர்கள் துணைக்கு வந்தன. அவற்றாலும் கடற்புலிகளின் தாக்குதலை எதிர் கொள்ள முடியாமற் போயிற்று. வெடிமருந்துகளையும் இராணுவத் தளபாடங்களையும் எமது மக்களைக் கொன்று குவிப்பதற்காக தரையிறக்கிக் கொண்டிருக்கையில் துணைப் பாதுகாப்புக்காக நின்ற டோரா படகுகள் கடற்புலிகளின் தாக்குதலுக்கு எதிர்நிற்கமுடியாது போயின. தொடர்ந்து நடந்த அந்தச் சமரில் மூன்று கடற்படைச் சிப்பாய்களும் ஒரு மாலுமியும் இறந்து போயினர்.

"கடலம்மா"

மேஜர் வித்தியின் குரல் திசையெல்லாம் முழங்க அதிகாலை சூரியப் பிரகாசத்தைப் போல மக்கள் முகங்களும் மலர்கின்றன.

எங்களின் கடலில் இனியதொரு வாழ்வு சிறக்காமலா போகும்?

கடற்புலிகளின் படகுகள் பேரிரைச்சலோடு கடலைச் சுற்றி வந்துகொண்டிருந்தன.

கடலில் பேரலை எழுகின்றது.

**தமிழகத்தின் பிரபல எழுத்தாளரும் 'இந்தியா ருடே' (தமிழ்) ஆசிரியருமான வாஸந்தி அண்மையில் லண்டன் சென்றிருந்தவேளை பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியின்போது கூறியவை.**
**பேட்டி கண்டவர்: பி.பி.சி. தமிழோசை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம்**

## தமிழரின் வீரமும் பொறுமையும்

*1987ல் பார்த்ததுக்கப்புறம் இப்போ தமிழீழ மக்களைப் பார்க்க அந்த மக்கள் இருக்கிற பலவிதமான நெருக்கடி நிலையிலையும் எத்தனையோ அத்தியாவசியங்கள் கிடைக்காத நிலையிலும் எவ்வளவு தீரத்தோட இருக்கிறாங்க என்பதைப் பார்த்து எனக்கு ரொம்பவும் சந்தோசம் ஏற்பட்டது. நீங்ககூட போயிருக்கிங்க. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவங்க நீங்க. அதனாலே உங்களுடைய பார்வைக்கும் என்னுடைய பார்வைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும். அவங்களுடைய பொறுமையும் துணிச்சலும் அந்த தீரமும் ரொம்பவும் என் மனசைத் தொட்டுது. எவ்வளவோ இளைஞர்களைப் பார்த்தேன். எவ்வளவோ முதியவர்களைப் பார்த்தேன். அத்தனை பேரும் அங்கு காண்பித்த பொறுமை ரொம்ப என் மனசைத் தொட்டது.*

## அற்புதமான இலக்கியம்

*இலங்கைத் தமிழ் இலக்கியம் அற்புதமான ஒரு நிலைக்கு வந்திருக்கு இப்போது. அது அந்தப் போர்க்காலத்தினாலேயும் இப்படிப்பட்ட ஒரு இது ஏற்பட்டிருக்கு என நினைக்கிறேன். அசாதாரணமான ஒரு நிலையில அசாதாரணமான ஒரு பக்குவத்தை மனிதர்கள் அடைவார்கள் என்பதற்கு ஒரு நிரூபணம் இது. இந்தியா ருடேயிலே இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுடைய எழுத்து நிறைய நாங்க போட்டிருக்கோம். அப்புறம் சமீபத்து இலக்கிய மலரில் ஒரு தனிப்பகுதியே ஒதுக்கி அதுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கோம்னாக்க நாங்க எவ்வளவு தூரம் அதை சிலாகிக்கிறோம் என்பதைப் புரிஞ்சுகொள்ள முடியும்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வீடு

## இளையவன்
### இது ஒரு தமிழ்த்தாய் வெளியீடு

சிந்தனைத்தெளிவு, சமூக மெய்மைகளை நுனித்து நோக்கிப் பிரச்சினை மையங்களை இனங்காணும் முனைப்பு, சிறுமை கண்டு சீறும் சீர்மை, இவற்றினடியாக ஊற்றெடுக்கும் உணர்வுநிலைகளைச் சொற்களில் காட்சிப்படுத்தும் புனைதிறன் என்பன படைப்பாளியொருவருக்கு இயல்பாக அமைந்திருக்கவேண்டிய பண்புகள். இத்தகு பண்புகளுடன் இன்று எம்மத்தியில் திகழும் சில படைப்பாளிகளுள் குறிப்பிடத்தக்க ஒருவர் இளையவன் என்ற புனைபெயர் பூண்ட க. பாலநடராஜன் அவர்கள்.

புனைகதை என்ற இலக்கிய வகையின் உயிரனைய பண்பு அதன் உள்ளடக்கம் புலப்படுத்தி நிற்கும் சமூக மெய்மையாகும். குறிப்பாகச் சிறுகதை வடிவத்தின் உயிர்ப்பானது சமூக மெய்மை சார்ந்த உணர்வுகளில் குறித்த ஒன்றை மையப்படுத்தி, அதனை கூர்மையுற வடித்தெடுப்பதிலேயே தங்கியுள்ளது. இத் தொகுதியில் உள்ள கதைகள் பலவற்றில் இவ்வாறான கூர்மைபெற்ற உணர்வுநிலைகள் பலவற்றை அவதானிக்கமுடிகிறது. ஏறத்தாழ கடந்த ஐந்தாண்டுக் காலப்பகுதியில் தமிழர் சமூகத்தில் அடிநாதமாக ஒலித்து வந்துள்ள உணர்வோட்டங்கள் பலவும் இளையவன் அவர்களது கவனத்தைச் செம்மையுற ஈர்த்துள்ளமை தெரிகின்றது. அந்த ஈர்ப்பால் தாம் எய்திய அநுபவங்களை எம்மையும் எய்தவைக்கும் முயற்சியாக சிறுகதைக் கட்டமைப்பை அவர் பயன்படுத்த முற்பட்டுள்ளமையை உணரமுடிகிறது.

www.tamilarangam.net

இத்தொகுப்பிலுள்ள கதைகள் பலவற்றை வாசித்து முடித்தபோது கதை வாசித்தோம் என்ற உணர்வு ஏற்படவில்லை. மாறாக நமக்கு மிகவும் பழக்கமான சூழலின் நிகழ்ச்சிகளையும் மாந்தர்களையும் தரிசித்து வந்த உணர்வே ஏற்பட்டது. இது ஒன்றே இளையவனின் புனைதிறன் பற்றிய தக்க மதிப்பீடாகவும் அமையும். போராளி ஒருவனின் மரணச் செய்தியை வெளிப்படையாகக் கூறத்தயங்கிய சக போராளியிடம் இறந்த போராளியின் தந்தை,

"அப்ப தம்பி, 'பொடி'யை எப்ப வீட்ட கொண்டு வரலாம்?" என்று எவ்வித பதற்றமுமில்லாமல் இயல்பாகக் கேட்கும் போதும் (உயிரின் துடிப்பு), கால் இழந்த போராளி ஒருவன் தன் வலது கையைத் தூக்கிக்காட்டி,

"துப்பாக்கியின் விசையை அழுத்த இது போதும். எத்தனை நாட்களில் எழுந்து நடமாடக்கூடியதாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லுங்கோ" என்று கேட்கும் போதும் (ஊனம் உடலில்தான்) எவ்வளவு மனத்திண்மை கொண்ட மாவீரச்சூழலில் நாம் வாழ்கின்றோம் என்ற வியப்பு எமக்கு ஏற்படுகிறது.

"அகதிகளாய் ஓடி வந்தனான் எண்டாப்போல ஒண்டுக்கும் வழியில்லாமல் போய் வந்தவன் எண்டெல்லே இவை நினைக்கினம்"

"எட ஒரு நாலு விறகுதடி கொத்துவம் எண்டு கோடாலியை ஒருக்கால் கேட்டால் அவர் என்னமாதிரி அருக்காணியம் விடுறார்"

"சரி.... தரப் புறியம் இல்லாட்டிப் போனா இல்லையெண்டு சொல்லுறது. அல்லது உமக்குத்தர ஏலாதெண்டு சொல்லுறது. அதை விட்டுப்போட்டு, பிடி முறிஞ்சு போச்சு எண்டு எனக்கு அரை மணித்தியாலம் ஆகேல்ல...... அவரின்ரை மோன் விறகு கொத்துறான்."

போராட்டச் சூழலில் ஊர் விட்டு ஊர் வந்து அகதி வாழ்க்கை மேற்கொள்ளும் ஒருவரின் எண்ண ஓட்டம் இது (தொலைந்துபோன நாட்கள்) இது ஒருவருடையது அல்ல; இன்றைய அகதி வாழ்வின் நிதர்சனம்.

இவ்வாறாகச் சூழலின் மெய்மைகளைப் பல கோணங்களிலும் காட்சிப்படுத்தும் இளையவன் அவர்கள் இக்காட்சிகள் பலவற்றிற்கும் 'வீடு' என்ற இல்லிடத்தை மையப் பொருளாக, கதை நிகழ்களமாக கொள்கிறார். பொதுவாக எல்லாக் கதைகளிலும் வீடு தொடர்புபடுகிறது. சிலவற்றில் அதுவே கதை நிகழ்வின் அடிப்படையாகிறது. அவ்வகையில் தொகுப்பின் தலைப்பாக அமையும் 'வீடு' என்பது பொருத்தமுடையதாகிறது.

"எங்களுக்கென்று ஒரு நாடு இல்லாத வரையில் எனக்கென்றொரு வீடு இருப்பது சாத்தியமில்லை என்றே கோபாலின் சிந்தனையிற் பதிந்திருக்கக்கூடும்." என்ற ஊகம் (புதியதொரு திசையிலே) இத்தொகுப்பின் தொனிப்பொருளை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

மிக இயல்பான நடை, சிக்கலற்ற சித்தரிப்பு முறை என்பன இளையவனின் கைவந்த கலைவன்மைகளாகும். இத்தொகுப்பு இவற்றை மேலும் உறுதி செய்கின்றது. இத்திறன்கள் மேலும் சிறக்கும் என்பது என் நம்பிக்கை.

கலைநிதி நா. சுப்பிரமணியன்
தமிழ்த்துறை,
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# அநாதரவான சிறார்களை தலைவர்களாக்குவதே இலக்கு!

## காந்தரூபன் அறிவுச்சோலை ஓராண்டு பூர்த்தி குறித்து தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

"போராட்டப் புயல் வீசும் எமது மண்ணில் வேரோட்டம் விட்டு விரைவான வளர்ச்சியைக் கண்டுவரும் எமது அமைப்புகளில் ஒன்று 'காந்தரூபன் அறிவுச்சோலை'. இந்தச் சோலையில் உள்ள இளஞ் செடிகள் பூத்து, காய்த்து, வளர்வதைக் காண எனது நெஞ்சம் நிறைகிறது. முழுமையான மனிதர்களை உருவாக்கும் புதுமையான பரிசோதனைக் களமாக காந்தரூபன் அறிவுச்சோலை அமையவேண்டும் என்பது எனது ஆவல். இளமையில் இருந்துதான் முழுமையை வளர்க்கமுடியும். முழுமை என்னும் போது அறிவும், ஆற்றலும், அறநெறிப் பண்புகளும் கொண்ட நிறைவான மனித வளர்ச்சியையே குறிப்பிடுகின்றேன். வல்லவர்கள், நல்லவர்களாக, நேர்மைத்திறன் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படியான சிறந்த மனிதர்களை முழு மனிதர்களாக உருவாக்குவதே அறிவுச்சோலையின் இலட்சியமாக அமையவேண்டும்.

எதிரியின் அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் நாம் ஆக்க வேலைகளைச் செய்துவருகின்றோம். போர்ச்சூழலால் குடும்பம் சிதைந்து அநாதரவான நிலைக்கு ஆளாகும் சிறார்களை எமது இயக்கம் அரவணைத்துக் கொள்கின்றது. அவர்களைச் சிறந்த முறையில் வளர்த்தெடுக்க பராமரிப்பு இல்லங்களையும், பயிற்சிப் பள்ளிகளையும் நடாத்தி வருகின்றது. தமிழீழத்தின் எதிர்காலத் தலைவர்களாக, அறிவு ஜீவிகளாக, சமூக நிர்மாணிகளாக இவர்களை வளர்த்தெடுப்பதே எமது நோக்கம்.



எனது இலட்சியக் கனவை நிறைவு செய்யும் வகையில், ஒரு உறுதியான அத்திவாரத்தைக் கட்டியெழுப்பி அறிவுச்சோலை செயற்பட்டு வருகிறது. ஓராண்டுகால இடைவெளிக்குள் அந்தச் சிறுவர்கள் இல்லம் பிரமாதமான வளர்ச்சி கண்டிருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

பரிசோதனைக் கல்விக்கும் பராமரிப்புக்கும் முன் உதாரணமாகத் திகழும் அறிவுச்சோலையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் அதன் பொறுப்பாளருக்கும், ஆசிரியர்களிற்கும் ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள். அறிவுச்சோலை வெளியிடும் ஆண்டு மலரிற்கும் எனது நல்லாசிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா



"என் உயிரினும் மேலான தாய்த்திரு நாட்டை அன்னிய ஏகாதிபத்தியவாதிகளுக் குத் தாரை வார்த்துக்கொடுப்பதா?"

ஆம்!.... அன்று வீரமுழக்கமிட்டு தமிழீழ நிலப்பரப்பின் ஒரு பகுதி யான யாழப்பாணத்தைக் கட்டி ஆண்டு அன்னிய ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்கிய சங்கிலியனின் அந்தக் கம்பீரமான சிலை வானளாவ உயர்ந்து நின்றது!

நல்லூரில் அமைந்துள்ள "கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா" வின் நுழைவாசலில் நிற்கும் பொழுது வீறுகொண்டு பாய்கின்ற குதிரையில் வாள் ஏந்திய சங்கிலிய மாமன்னனின் அந்த வீரம் செறிந்த பார்வை, பார்ப்பவர்களின் உள்ளங்களையும் ஒரு கணம் வீறுகொள்ளவைக்கும்.

www.tamilarangam.net

தமிழீழ அரசின் இராஜதானியாக விளங்கிய நல்லூரில் அந்த மாவீர னின் சிலை அமைக்கப்பட்டதும் பொருத்தமானதுபோல் இருந்தது. அந்த மாமன்னனின் சிலையை ஒரு தடவை சிரம் தாழ்த்தி வணங்கிக் கொண்டே, அனுமதிச் சீட்டையும் பெற்றுக்கொண்டு, நுழைவாயிலின் ஊடாக "கேணல் கிட்டு நினைவுப் பூங்கா" வினுள் காலடி வைக்கின்றேன்.





ஓ.... இயற்கையின் அழகிய வனப்பும், கண்ணைக் கவரும் பூமரங்களும், குளிர் நிழல் தரும் பெரு விருட்சங்களும், "சல... சல.." என்ற நீரோடைகளும்.... துள்ளித் திரிந்து ஆனந்தமாய்க் குதூகலிக்கும் குழந்தைகளும், தம் துயரங்களையும் மறந்து களிப்பில் திளைக்கும் பெரியவர்களும்... இப்படியே அந்தப் பூங்கா எங்கும் கலகலப்பாக இருந்தது...!

"சே!... இவ்வளவு செலவழித்து இந்தப் பூங்காவை அமைத்திருக்கின்றார்களே.... இந்தப் போர்க்கால நெருக்கடியிலும் இது தேவைதானா?"

என்னுடைய மனம் அந்த மனோரம்மியமான சூழலில் இருந்தும் சிறிது விலகி அசைபோடத் தொடங் கியது.

பாதையின் இரு ஓரங்களிலும், உள்ள பச்சைப் பசேலென்ற புல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படுக்கைகளையும், அழகிய பூமரங்களையும் பார்த்தபடியே மெதுவாக நடந்துகொண்டிருந்த எனது மனதிலும் ஏன்தான் இப்படி ஒரு எண்ணம் பிறந்ததோ?

சிறிது தூரம் வரை நடந்து சென்றுகொண்டிருந்த என் கண் முன்னால் கம்பீரமாகத் தோற்றமளித்துக்கொண்டிருந்த, இன்னுமொரு உருவம், என் நடையின் வேகத்தைத் தடுத்து நிறுத்தியது...

ஆம்!... யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து தமிழ் மண்ணின் வீரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டிய "கேணல் கிட்டு"வின் எடுப்பான தோற்றம்,



கிட்டண்ணாவின் தாயார் பூங்காவை திறந்து வைத்தபொழுது

அங்கே நுழைபவர்களுக்கு மீண்டும் ஒரு தடவை வீரத்தை ஊட்டுவது போல இருந்தது!

"எந்த நெருக்கடியான சூழலிலும், எந்த அழுத்தங்களின் மத்தியிலும் தமிழ் மக்களாகிய நாம் நிலைகுலைந்து போகாது உறுதியாக வாழவேண்டும். இது போன்ற சரணாலயங்கள் சிறுவர் பூங்காக்கள் நெருக்குதலுக்கு ஆளான, எங்களுடைய மக்களின் மனங்களை செழுமைப்படுத்தும்... போர்ச்சூழலிலேயே வாழ்ந்து, மன அமைதியற்றுத் தவிக்கின்ற எங்களுடைய குழந்தைகளுக்கு உத்வேகத்தையும், உள மகிழ்ச்சியையும், மனவெழுச்சியையும் ஏற்படுத்தும். இது எதிர்கால சமுதாயத்தின் எழுச்சிக்கும் வித்திடும்.... எமது ஆடம்பர வாழ்வுக்காகவும், களியாட்டங்களுக்காகவும் எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கின்றோம்... உளவியல் ரீதியாகவும், உடல்ரீதியாகவும் எழுச்சியைத் தருகின்ற இந்தச் சரணாலயம் தமிழீழத்திற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும்... எமது மண் விடியும்போது வெறும் பாலைவனமாக இருக்கக்கூடாது..."

www.tamilarangam.net

1986ஆம் ஆண்டு, "பண்டிதர் சரணாலயத்தை" உருவாக்கி அதனை ஒரு நல்ல இயற்கை வளம் நிறைந்த ஒரு வனமாக உருவகித்துக் கொண்டிருந்த கிட்டு, அன்று கூறிய அந்தப் பொருள் பொதிந்த கருத்துக்கள், மீண்டும் எதிரொலித்து அலை மோதிக்கொண்டிருந்தது.

ஓ.... பரந்த தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்த அந்த மாவீரனின் முன்னால் நிற்கும் என் உடலும் உள்ளமும் ஒரு தடவை கூனிக் குறுகியது.

அன்று!.... அஸ்தமித்துப்போன தமிழ்ஈழத்தின் கடைசி மன்னனாக இருந்து கோலோச்சி வீரச்சாவடைந்த மாவீரன் சங்கிலியனின் உருவம் வரவேற்கின்றது!

இங்கே... உருவாகப் போகின்ற தமிழ் இராட்சியத்தின் மாவீரனான கிட்டுவின் தோற்றம் ஒரு புதிய தேசத்தின் உதயத்தைச் சுட்டிக் காட்டுவது போல் இருக்கின்றது.

என் தலைக்கு மேலாக உள்ள சுமார் இருபது அடி உயரத்திற்கு மேல் அமைக்கப்பட்ட பிரமாண்டமான தொங்குபாலத்தை நிமிர்ந்து பார்த்ததும், என் கண்கள் வியப்பினால் அகலத் திறந்தன.

ஒரு மலை உச்சியில் இருந்து இன்னொரு மலைக்கோ, அல்லது பெரிய ஆறுகள், நீரோடைகளைக்

## உலகம் எப்போது ஊமையானது!

"அசோகச்சக்கரம்" குருதியில்
குளித்தது
"வங்கமாகடல்" தீயினில்
கொதித்தது
"இந்திய வல்லூறு" களின்
கூரிய அலகுகள்
"ஒலிவ்" தளிர் சுமந்து வந்த
வெள்ளைப் புறாக்களை
எப்படிக் குதறலாம்?
"கிட்டுவும் குட்டி சிறியும்
எட்டு வேங்கைகளும்"
"வேடந்தாங்கல்" தேடிவந்த,
வெளிநாட்டுப் பறவைகள் அல்ல...
தங்கள் கூடு திரும்பிய குருவிகள்.
"கோட்சே கூட,
தன்னை நியாயப்படுத்தினான்.
சிலர் ஏற்றும் கொண்டனர்.
இந்திய அரசே!
முகமூடி இழந்துபோன
உன் ஆதிக்க முகத்தையும்
அகோரப் பற்களையும்
எந்த முந்தானையால்
மூடப்போகிறாய்?
ஆசியக் கடலுக்குள்,
அகலக் கால் பரப்ப
உன்னை அனுமதித்தது யார்?
கேட்க யாருமே இல்லையா?
உலகம் எப்போது ஊமையானது!

புதுவை இரத்தினதுரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

கடப்பதற்கோ வெளிநாடுகளில் அமைக்கப்பட்டிருக்கும் தொங்கு பாலங்களை எங்களுடைய குழந்தைகள் எப்பொழுதாவது அறிந்திருப்பார்களா?

எங்களுடைய மண்ணிலேயே அத்தகைய ஒரு தொங்கு பாலத்தைக் கண்டதும் என் மனம் குதூகலித்தது.

"எங்களுடைய வளரும் சமுதாயத்திற்கு எதுவும் இல்லை என்ற குறை இந்த மண்ணில் இருக்கக் கூடாது... வளர்ச்சியடைந்த நாடுகளில் கிடைக்கின்ற வசதிகளும், வளங்களும் எங்கள் மண்ணில் வாழ்கின்ற குழந்தைகளுக்கும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்...." என்ற பரந்த நோக்கத்தில் சிந்தித்த தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையில் உருவான அந்த, எதிர்பார்க்கைகளை நினைத்துப்பார்க்கும் பொழுது ஒரு கணம் எம் நெஞ்சமெல்லாம் புல்லரித்தது!

அந்த உறுதியான தொங்கு பாலத்தின் மீது குதூகலமாகத் தவழ்ந்தும், ஓடியும் நடக்கின்ற குழந்தைகளையும், சிறுவர்களையும் மட்டுமல்ல, இளைஞர்கள், வயதானவர்கள் எல்லோரையும் பார்க்கும் பொழுது,

"இவர்கள் குண்டுகள் போடும், துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கின்ற மண்ணிலா வாழ்கின்றார்கள்..." என்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது.

அதற்கு அருகே, மிக உயரமான ஒரு மலையும், அதில் இருந்து "சல, சல" என்று வழிந்தோடுகின்ற நீர்வீழ்ச்சியும், கீழே நீரைச் சேர்த்துக் கொண்டு செல்கின்ற நீரோடையும் மிக அற்புதமாக இருந்தது.

மலையின் கீழே சுற்றிச், சுற்றிச் செல்லும் குகையும், அதன் இரு பக்கங்களிலும் பொருத்தப்பட்ட வண்ண, வண்ண மீன் தொட்டிகளும் மனோரம்மியமாக இருந்தது.

ஒவ்வொரு மீன் தொட்டிகளினுள்ளும் வகை வகையான மீன் காட்சியகம் (Aquarium) குழந்தைகளுக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அங்கிருந்து விலகிச் சென்று கேணல் கிட்டுவுடன், வங்கக் கடலிலே வீரச் சாவைத் தழுவிக் கொண்ட ஒன்பது மாவீரர்களின் உருவப் படங்களையும் பார்த்து, என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, அப்பால் நடந்து சென்ற எனக்கு, வெளிநாட்டில் ஏதோ ஒரு பூங்காவிற்குள் நிற்பது போன்ற பிரமைதான் ஏற்பட்டது.

ஓய்வெடுக்கும் மாடிக் குடில்கள், சிறுவர்களும், பெரியவர்களும்கூட விளையாடிக் கழிக்கும் நிறுத்தாடுவளைகள், ராட்டினங்கள், ஊஞ்சல்கள், சறுக்கும் ஏணிகள் போன்ற விளையாட்டுச் சாதனங்கள், இத்தனைக்கும் களைப்புற்று வந்தால் உல்லாசமாக இருந்து ஓய்வெடுக்கும் அழகிய வடிவமைப்பிலான மண்டபங்கள், குளிர்கழி மற்றும் சிற்றுண்டிகள் விற்பனையாகும் அழகிய கடை.... இப்படியே ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு சென்ற என் மனதிலே ஒரு இனம்புரியாத மகிழ்ச்சியையும், மன அமைதியையும் அந்தப் பூங்கா தந்துகொண்டிருந்தது.

அங்கே வட கிழக்கு மூலையில் ஒரு கொட்டகையினுள் வைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான சேதமாக்கப்பட்ட "செய்ன் டோசர்" தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித்துவமான வீரத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

அன்னிய ஆக்கிரமிப்பாளர்களின், எந்த ஆயுத பலமும், பாரிய இராணுவ தளபாடங்களும், அச்சுறுத்தும் டாங்கிகளும் விடுதலை உணர்வுடைய மக்களின் ஆன்ம பலத்தின் முன்னால், நிலைகொள்ள முடியாது என்பதை அந்த அழிக்கப்பட்ட சேதமாக்கப்பட்ட "செயின் டோசர்" காட்டிக்கொண்டிருந்தது.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே...."

என்ற இந்திய சுதந்திரக் கவி பாரதியின் வீர வாசகம் எங்கள் இதயங்களையே ஒரு கணம் எழுச்சி பெறவைத்துக் கொண்டிருந்தது.

"ஓ.... போர்ச்சூழலின் நெருக்குதலின் மத்தியிலும் வாழ்கின்ற எங்களுடைய மக்களுக்கு இந்தப் பூங்கா ஒரு சஞ்சீவி..."

கேணல் கிட்டு, நினைவுப் பூங்காவில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்த என் நெஞ்சத்திலும், உடலிலும் ஒரு புத்துணர்ச்சி ஊற்றெடுப்பதுபோல் இருந்தது....

- ந. அனந்தராஜ் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வனவாசத்தில்

**பிரகலாத ஹேமந்த்**

அன்று பின்னேரம் நாங்கள் அந்த வீட்டுக்கு வந்திருந்தோம். நீண்டநாட்களாக, இருப்பதற்கு ஒரு வீடுதேடி அலைந்தபிறகு, அந்த வீடு எதிர்பாராமல் கிடைத்தது. கையில் சாவி கிடைப்பதற்கு முன் வீட்டினுள் எப்படிப் புகமுடியும்? சாவியை நாங்கள் பெற்ற பிறகுதான் வீட்டின் வசதி, அமைப்பு, சாதகம், இன்னும் ஏதெல்லாமோ பார்க்கக்கூடியதாக இருந்தது.

நான்தான் முதலில் வீட்டைத் திறந்தேன் என நினைக்கிறேன். மிகவும் பிடித்தமான வசீகரமாகவும் நமக்கு பொருந்திவந்த மாதிரியும் அந்தவீடு சிநேகபாவத்துடன் இருப்பதாகப்பட்டது. சில ரகஸியங்களை ஆர்வமுடன் பேசமுனைவதாக அதன் மௌனம் சொல்லிற்று. அது தன்னுடைய உணர்ச்சிகளைக் கொட்டத்துடிப்பதாக உணர்ந்தேன். அநாதரவாக இருக்கும்போது, குந்தி இரண்டு நிமிடம் பேச ஒருவன் கிடைத்த ஆசுவாசம் அதுக்கிருக்கலாம். அதன் சௌந்தர்யம் எனக்கும் பிடித்தது.

**ஒன்பது தடவைகள் இந்தச் சண்டை தொடங்கிய நான்கு வருடத்துள் இடம் மாறினோம். எந்த வழியுமின்றி ஒவ்வொரு இடமாக ஓடவேண்டியே இருந்தது. ஒவ்வொரு தடவையும் நாங்கள் ஒரு வீட்டுக்காக அலையவேண்டியுமிருந்தது.**

www.tamilarangam.net


அந்தவீடு பற்றி மனைவிக்கு ஆச்சர்யமாகவும், சலிப்பாகவும், பயமாகவும் இருப்பதை அவளின் பேச்சும் முகக்குறிப்புகளும் சொல்லின. 'இந்தப் பெரிய வீட்டில் நாங்கள் மட்டும்தானா இருப்பது' எனக்கேட்டாள். 'வேறெப்படி' என நான் கேட்டபோது, திடுக்குற்று விட்டாள். அவளது முகத்தில் ஒரு குண்டு வெடித்ததைப் போன்ற உணர்ச்சிச் சிதைவு. 'புக்காரா வந்தால் நான் தனிய என்ன செய்யிறது? பிள்ளையையும் தூக்கிக் கொண்டு எங்கே ஓடுவது?' என்றாள். அவளது கேள்வியின் நியாயத்துக்கு என்னால் எதுவும் சொல்லமுடியவில்லை.

'புக்காரா' விமானத்தின் குடலை உருவும் இரைச்சலையும், அது குண்டு வீசுவதையும், குண்டுகள் இருபது அடி ஆழத்துக்கு மேல் நீர் ஊற்றுவரை குழி தோண்டும் என்பதையும் அனுபவமாக உணர்ந்தவள். அதன், குண்டடியில் சிதறிப்போன பிணத்தை தன் கையால் அள்ளிப்போட்ட துர்ப்பாக்கியத்தை அவள் அடிக்கடி சொல்லுவாள். இதெல்லாம் எனக்கு ஞாபகத்தில் வந்தோடின. அவளின் மூளையிலும் இவை அகற்றப்பட முடியாத நினைவுக்குவியலாக இருக்கின்றன. அந்தக் குண்டு வீச்சுக்களின் போது மயிரிழையில் இரண்டுதரம் உயிர் பிழைத்தவள். குண்டு வீச்சு நடந்த அந்த ஈனமான சந்தர்ப்பத்தில் திக்குத்திசை தெரியாமல் குழந்தையை நெஞ்சோடு அணைத்தபடி, கூந்தல் குலைந்து சிதறக் கதறிக்கொண்டு விழுந்தெழும்பி ஓடியதை இன்னும் துக்கத்துடனும் கோபத்துடனும் சொல்லுவாள். அதனால்தான் இப்போது ஒன்பது தடவைகள்- இந்தச் சண்டை தொடங்கிய நான்கு வருடத்துள் இடம் மாறினோம். எந்த வழியுமின்றி ஒவ்வொரு இடமாக ஓடவேண்டியே இருந்தது. ஒவ்வொரு தடவையும் நாங்கள் ஒரு வீட்டுக்காக அலைய வேண்டியுமிருந்தது.

சண்டை தொடங்கி மூன்றாவது வாரம் எமக்குத் தெரிந்த வரையில் எந்த நியாயமுமின்றி எங்கள் வீடு தரைமட்டமாக்கப் பட்டது. மூன்றுநாள் தொடர்ந்த குண்டுவீச்சில் நாங்கள் பதுங்கி, பீதியடைந்து, உயிருக்குப் போராடிய அந்தக் கணங்களில் எங்கள் வீட்டை விமானங்கள் அழித்தன. விமானங்கள், ஒன்றுமாறி ஒன்றாக மிக மூர்க்கமாக குண்டுகளை வீசின. அந்த வீட்டை அழிக்கும் வரை அந்த விமானங்களின் மனதில் எவ்வளவு வன்மமும், வெறியும் இருந்திருக்கும்? அந்த நிகழ்வை என்றைக்கும் மறக்கமுடியாத எந்தச் சமாதானத்தின் வருடலும் அவற்றை ஞாபகங்களிலிருந்து அகற்றமுடியாது. நாங்கள் உயிர் பிழைத்தது தற்செயலானது என்பதுதான் உண்மை.

அப்பாவின் வாழ்நாள் உழைப்பு அந்த வீடுதான். எங்கள் குடும்பத்தின் வாழ்க்கையும் அதுதான். ஒவ்வொரு பொருளையும் சிறுகச் சிறுகச் சேர்த்திருந்தோம். வீட்டையும் வளவையும் அழகாக எப்பவும் கூட்டி, குளிப்பாட்டி, மெருகூட்டி, பொட்டிட்டமாதிரித்தான் அக்கா அதனைக் கவனித்தாள். பண்டிகைகள், நோன்புகள் என்று வரும்போதெல்லாம் அதன் பரிமளிப்பு, பராமரிப்பு வேறு. எங்கள் குடும்பத்தின் ஐதீகங்களுடன் அது நெருங்கித் தோழமை கொண்டிருந்தது. அது வெயிலில் வெந்துபோகாமல் நிழல் மரங்கள். அதன் அழகுக்கு பூமரங்கள். மெருகேறும் பூச்சு. உள்வீட்டில் ஒவ்வொன்றும் திட்டமிட்டு ஒழுங்கு படுத்தப்பட்ட அமைப்பில்... அது ரசிப்பதற்கென்று இசைக்கிற மாதிரி இரவில் சங்கீதம்... (அப்பா சங்கீதத்தில் ஈடுபாட்டுடன் ஒன்றிப் போகும் நேரம் அவை) குண்டு வீச்சில் அவை அழிந்தபோது புகை மண்டலமும் கற்குவியலும் பொருள்களின் உடைவும்தான் ஞாபகத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களைச் சிந்திக்கத் தூண்டவேண்டும். பழமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பாதையைத் தோற்றுவிக்கவேண்டும். இந்தக் காலகட்டத்தில், கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து நான் கூடிய அளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஒரு தாயகத்தை கட்டி எழுப்பும் பணி புனிதமானது. இந்தப் புனிதப் பணியில் பங்குகொள்வது எல்லோரதும் தேசியக் கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகி வரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும். இந்த சமூகமாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும் சிருஷ்டி கர்த்தாக்களும் எமது இயக்கத்திற்குப் பக்கபலமாக நின்று பணியாற்ற வேண்டும். இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்திற்கு அமைய, கலை, இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான, புரட்சிகரமான படைப்புக்களைச் சிருஷ்டிக்கவேண்டும். இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரம் ஊட்டுவதாக அமையவேண்டும். சமூகப் புரட்சிக்கு வித்திடுவதாக அமையவேண்டும்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*திரு. வே. பிரபாகரன் அவர்கள்*

www.tamilarangam.net

பதிந்தன. மற்றெல்லாம் அழிந்து போயின. எல்லா நம்பிக்கையும் நொருங்கிற்று. அப்பாவால் தாங்க முடியவில்லை. வேதனையை அவர் நெஞ்சுக்குழிக்குள் அமுக்கப் பிரயத் தனித்தார். அம்மா புலம்பினாள்; திட்டினாள்; அழுதாள். இனி ஊர்விட்டு எங்குபோய் பிழைப்ப தென்று புரியாத சூன்யத்தில் தடுமாறினாள் அவள். அக்காவும் தம்பியும் திக்கற்றிருந்தார்கள். என்னுடைய குழந்தை மிரண்டு முழித்தபடியிருந்தான். உயிர் பிழைத் தது லாபம் என்று நான். எதற்காகக் குண்டு வீசப்பட்டது என்று அம்மா கேட்டுக் கேட்டுத் திட்டிக்கொண்டி ருந்தாள். அன்றிலிருந்து எங்கள் குடும்பம் தனித்தனியாகிற்று. அந்த நாளின் பிறகு, இரண்டுவாரத்தில் ஊருக்குள்ளிருந்து, எல்லோரும் ஒரு மதிய வெய்யிலில் ஓடி வரவேண் டியதாயிற்று. துயரக்குரலுடனும், மாறாத, தாங்கமுடியாத வேதனை யுடனும் எல்லோரும் வெளியேறி னர். ஊர்முழுவதையும் இராணுவம் தன்கைப் பிடித்துக் கொண்டு விட்டது. அந்தநாள் தொடக்கம் நித்திய அலைவே சங்கதியாச்சு.

கிடைத்த இரவல் வீடுகளில் இன்னொரு குடும்பத்துடன் சேர்ந்து- தனியாக- இருப்பதே என்றா னது. வேறு வழியிருக்கவில்லை. இரவல் வீடுகள் எல்லாவற்றிலும் ஒரு பாதியை இழந்ததுபோல் ஒரு அவஸ்தை. இந்த ஒன்பது வீடுகளிலும், சிரமங்களினூடாகவும் ஒரு மனச்சரிவு நிகழாமல் அவர்கள் நடந்தாலும் அவற்றிலும் நிரந்தரமாக இருக்கமுடியவில்லை. ஒவ்வொரு இடத்திலும் இராணுவத்தின் வெறித் தனம். ஷெல்லும் குண்டுவீச்சுக் களும் நிம்மதியைத் தின்றன. இப்படியே வெளியேற்றங்களும் ஓட்டங்களுமாகவே ஒன்பது வீடுகளில் வாழ்ந்திருந்தோம்.

எல்லாவற்றையும் ஏற்று அனுசரிக் கும் மந்திரத்தை உச்சாடனம் பண்ணிக்கொண்டு நான். எல்லா வற்றுக்கும் சலிப்பும், கோபமும், கேள்விகளுமாக மனைவி. குழந்தை யின் எதிர்காலம்பற்றி, அவனைப் பற்றி பேச்செடுக்கவே பயந்தேன். பேச்சு வந்தால் மனைவி பதில் தேடமுடியாத கேள்விகளை அடுக்கிச் சுமையேற்றுவாள் என்ற உயிர்வாதை என்னைத் தின்றது. இரவுகளில் என்னை விழித்தபடி கிடத்தியிருந்தேன். இருள் எனக்குப் பீதி தந்தாலும் அது ஒரு வரம் மாதிரி இருந்தது. மறுபுறமும் அதுவே உயிரின் மையத்தில் சுண்டிக்கொண்டிருந்தது. உறங்கிப் போனேன் என்று மனைவி நினைத்து எதையும் கேட்காமல் இருப்பதே போதும் என்ற சுகம். நாளையும் எதிர்நாட்களும் குடும்ப மும் என்ன என்ற பாலையின் நீட்சி இரவுகளில் வருத்திற்று.

இப்போது இந்தவீடு 'இந்த வீட்டில் நாம் மட்டும் தனியாக இருந்து ஏன் முடங்குவான்? நம்மைப் போல வீடுதேடும் சினேகிதியை இருத்தலாம்' என்றாள். நான் எதுவும் பேசவில்லை. என்ன சொல்லமுடியும்? புக்காரா பற்றி நிச்சயமான எதையும் யாரும் சொல்லமுடியாது. வீட்டில் சிநேகிதியை இருத்துவதற்கு எப்படிச் சம்மதம் கொடுப்பது? இந்த வீட்டின் பின்னணியை இன்னும் மனைவியே அறிந்திருக்கவில்லை. என்னைக் கேள்விகளே- பதிலற்ற கேள்விகளே- முன்னின்று மிரட்டின. கேள்விகள் பற்றிய பிரமையில் நான் உலவுகின்றேனோ என இருட்குகை யில் வழியற்று ஓடிக்கொண்டி ருந்தேன். நான் எதைப்பற்றி யோசித் தாலும் அது தவறி, ஒவ்வொரு கணமும் விமானங்களின் காட்டு மிராண்டித்தனமான இரைச்சல்கள் என்புலன்களில் நிறைந்துவந்தது. கோபம் கொந்தளித்துப் புரண்டது. என்றாலும் எதுவோ ஒன்றின் ஞாபகமூட்டலில் அடங்கிப் போனேன். 'இந்த வீட்டில் யாரையும் இருத்துவதாக இருந்தால் வீடு தந்தவர்களைக் கேட்க வேணும்' என்றேன். இந்த வீட்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்பின் அறிதல் இன்றிய ஒருவன் தந்திருந்தான். வாடகை, பிரதியுபகாரம் என்றெல்லாம் இல்லை. என்னால் நம்பமுடியாமல் இருந்தது. நான் வீடு கேட்டுச் சென்றபோது 'வீடு இல்லை. அதை யாருக்கும் குடுப்பதாக உத்தேசமில்லை' என்றான். 'சிலவேளைகளில் தனக்குப் பிரத்தியேகமாகத் தேவைப்படும்' என்றும் சொன்னான். அதன்

**எல்லோரும் ஒரு மதிய வெய்யிலில் ஓடி வரவேண்டியதாயிற்று. துயரக்குரலுடனும், மாறாத, தாங்கமுடியாத வேதனையுடனும் எல்லோரும் வெளியேறினர். ஊர்முழுவதையும் இராணுவம் தன்கைப் பிடித்துக் கொண்டுவிட்டது. அந்தநாள் தொடக்கம் நித்திய அலைவே சங்கதியாச்சு.**

மேல் எதுவும் என்னுடன் பேசத் தயாரில்லாதவன் போல எழுந்து உள்ளே சென்றான். அவனது இளகிய கறுப்பு நிறமுடைய முகத்தில் எதையும் என்னால் உணர முடியவில்லை. அவன் கோபமாகவா? இல்லை சாதாரணமாகவா? என்னுடன் பேசினான் என்பதையும் என்னால் ஊகிக்கமுடியவில்லை. நான் விடைபெற்று வருவதற்காக உள்ளே சென்றவனை எதிர்பார்த்திருந்தேன். மனம் வீடுபற்றிப் பின்னமிட்டது. இனி எங்கு தேடமுடியும்? எங்கும் வீடில்லா மனிதர்களின் அதிகரிப்பு. (வீடுகளை இராணுவத்திடம் பறிகொடுத்தவர்களின் அந்தரிப்பு) உள்ளே சென்றவன் வந்தான். நான் எழுந்தபடி விடைபெற்றேன். 'இருங்கள் ரீ குடித்து விட்டுப் போங்கள்' என்று கூறி விட்டு மீண்டும் உட்சென்றான். உள்ளே சென்று யாருடனோ பேசியவன் இரண்டு நிமிடங்களில் மீண்டும் என்னருகில் வந்தமர்ந்தான். நான் தேநீரைப் பருகியபடி இருந்தேன். அவனது முகத்தில் எந்தச் சலனமுமில்லை. என்னைக் கூர்ந்துபார்த்தபடியே இருந்தான். என் மனம் புரண்டு இடறித்துடித்தது. வேறு என்ன வழி? இனி வீடு எடுப்பது என்பதைவிட அதைப்பற்றி யோசிக்காது, ஒரு மரத்தடியின் கீழ் குந்துவது மேல் என நினைத்தேன். 'உங்களுக்கு அந்த வீட்டைத் தருகிறேன்.' என்றான் அவன். எனக்கு ஒரு கணம், என் செவிகளில் நம்பிக்கையின்மை தோன்றியது. மறுகணம் இறுக்கிய கட்டிலிருந்து விடுபட்டவன் போல உணர்ந்தேன். அவனை மிகவும் நன்றியுணர்வு பொங்க அவதானித்தேன். 'குளிக்கும் கிணறு பங்கு, மற்றப்படி ஏதும் குறையில்லை' என்றான். கிணற்றுச் சண்டை நடந்ததுண்டு என்றான். பவ்வியமாக நிறுத்தி, கடைவாயில் புன்னகை வழிய என் முகம் பார்த்தான். எனது பதில் எப்படி இருக்கும் என அவன் சுவாரஸ்யத்துடன் பார்த்தான். எனது பதிலில், இனி நான் எதிர் நோக்கப்போகும் கிணற்றுப்பிரச்சனைக்கு நான் எவ்விதம் தீர்வுகாண்பேன் என அவன் அறிய முற்பட்டதிலிருந்தது. 'பரவாயில்லை நிலைமையைப் பொறுத்து நடந்துகொள்ள வேண்டியதுதான், பெரும்பாலும் ஒதுங்கிக் கொள்வது; அமைதியாக இருந்து விடுவதுதான் வழி.' என்றேன். என்ன நினைத்தானோ கையில் சாவியைத் தந்தான். நன்றியைத் தந்து விடைபெற்று வந்தேன்.

பலநாட்கள் யாருமின்றியதால் புறாக்களின் சிறகடிப்பும் அவற்றின் குதூகலமான குடும்பம் நடத்தலும் நிகழ்ந்திருந்த சுவடு வீட்டிலிருந்தன. அதன் தனிமையில் புறாக்கள் எச்சமிட்டிருந்தன. ஒன்றிரண்டி வெளவால்களின் பறத்தல். மிகுதியெனில் புறாக்களின் சந்ததிப் பெருக்கமே. அவற்றின் சல்லாப்பில் நிகழ்ந்த இறகுதிர்ப்பு, சிந்திக் கிடந்தன. பட்சிவாசத்தில் வீட்டைக் கூட்டி, கூரைத் தூசைத் தட்டி கழுவி முடிய உச்சியில் சூரியன் மிலாந்தியது. தென்னைகள் வெந்து கொண்டிருந்தன. வீடு பரிமளித்தது. மறுபடியும் மனிதர்களைக் கண்ட பூரிப்பு அதற்கு. அது தென்னஞ் சோலையில் மறுபடியும் பூத்துக் கிடந்தது.

காற்றுவர ஏற்றமாதிரி ஜன்னல்கள். எந்தப் புழுக்கமென்றாலும் எந்தக் குளிரென்றாலும் அலுக்காத சுகம். (சுகம் அலுக்குமா) இரண்டு சமையற்தட்டுகள். வீட்டுடனே கழிப்பறையும். மற்றும்படி அத்தியாவசிய அம்சங்களுடன் வசதி கூடியிருந்தது. எனக்குத் திருப்தி. இளகிய கறுப்பு நிறமுடைய அவனில் நன்றியாகப் பரிணமித்தது. இராணுவ எல்லைக்கு சற்று


## "கடற் கரும்புலிகள்" "கடலின் மடியில்"

**எங்களின் கடலில் நாங்கள் தோணி கட்டிப் போகவும் முத்துக் குளிக்கவும் எப்போது முடியாமற் போனது?**

**கடலில் கரும்புலிகள் எழுந்தனர். கடற் கரும்புலிகள் 'எங்களின் கடல்' என உரத்த குரலில் பாடினர்; புதிய காவியம் படைத்தனர்.**

**தமிழர் வரலாற்றின் உன்னதங்கள், அதிஉயர் மானுட சிற்பிகள், தமிழீழக் கடற்பரப்பெங்கும் புதிய வரலாறு எழுதி உலகத்தின் புருவங்கள் உயரவைத்து தமிழனை தலைநிமிரச் செய்தார்கள்.**

**அத்தகைய அதி மானுடர்களைப் பற்றிப் பேசுகின்ற புதிய இலக்கியங்கள் தமிழீழத்தில் சிருஸ்டிக்கப்படுகின்றன.**

**படைப்புக்களின் வரிசையில் 'கடற் கரும்புலிகள்', 'கடலின் மடியில்' ஆகிய இரு ஒலியிழை நாடாக்கள் வெளிவந்திருக்கின்றன. மண்ணில் ஓயாது எழும் கடலின் உச்சரிப்பிலும் உப்புக்காற்றின் மூச்சிலும் ஒளிந்திருக்கும் சோகம் சொல்லுகின்ற இந்தப் பாடல்களை கடற்புலிகளின் வெளியீடாக கலை பண்பாட்டுக் கழகம் ஆக்கியுள்ளது.**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அப்பாலான தூரத்திலிருந்தது அந்த வீடு. அங்கு இராணுவம் வருவதாக இருந்தால் பெரியதொரு, தொடர்ச்சியான சண்டைக்குப் பிறகுதான் வரமுடியும். அங்கு இராணுவம் வரமுடியாது என்ற என் தீர்மானம் உறுதியாக இருந்தது. அவ்வளவுக்கு இராணுவத்தைத் தடுக்கும் முஸ்தீபுகள் இருந்தன. ஒரு நிழல் மரத்தின் கீழ் ஆசுவாசத்துடன் நிற்பதுபோன்றும், சுமையிறக்கமும் தெம்புமாகவும் இருந்தது இந்த வீட்டுக்கு வந்தது.

எங்களிடம் பெரியளவில் தளபாடங்கள் எதுவும் இருக்கவில்லை. எல்லாவற்றையும் விமானங்கள் தின்றுவிட்டதை நினைத்து இப்போது துக்கப்பட்டாள் மனைவி. அந்த விமான ஓட்டிகளையும் அவர்களின் எஜமானர்களையும் நான் சபித்தேன். (இப்படி நான் பல தடவைகள் சபித்துள்ளேன்) என்னைப்போல எத்தனை மனிதர்களின் சபித்தல்களும், திட்டுதல்களும் புறக்கணிப்பும் அந்த விமானிகளையும் அவர்களின் எஜமானர்களையும் நோக்கி வீசப்படுகின்றன. அவர்களின் சிந்தனையும் மனமும் நாகரிகமும் எவ்விதம் இப்படியாயிற்று என, பலமுறையைப் போல இப்பொழுதும் யோசித்தேன்.

சுருக்கமான, மிக அவசரமான, அவசியமான ஏற்பாட்டின்பின் அன்று பின்னேரம் அந்த வீட்டுக்கு குடிவந்திருந்தோம். அந்த நன்றிக்குரியவனின் நினைவுகள் என்னில் மூட்டம் கட்டி நின்றன. துணைவியின் முகத்தில் மகிழ்ச்சி வற்றியிருந்தது. புக்காரா விமானங்கள் குண்டு வீசிய நாளில் இருந்து அவள் தன் இயல்பில் மாறி வந்துகொண்டிருந்ததனை அவதானித்திருந்தேன். இன்று இன்னும் சோர்வு களைகட்டியிருப்பதாகப் பட்டது. இடையில் இரண்டு தரம் வந்து 'யாரையாவது துணைக்கு இருத்தினால் என்ன, வீட்டுக்குரியவரிடம் சொல்லிப் பாருங்கள்' என்றாள். அவள் மனசின் தவிப்பு கெஞ்சுவதாக இருந்தது. விமானங்கள் குண்டுவீச வரும்போது மனசின் வேர்கள் பதைபதைக்கும். துணைக்கு யாராவது இருப்பது கொஞ்சம் ஆறுதல். இதை நான் எப்படி அந்த இளகிய கறுப்பு நிறமுடைய என் நன்றிக்குரியவனிடம் சொல்ல முடியும்? எனக்கு மனசுள் வெட்கம் தலையெடுத்தாடியது. இந்த அனுபவங்களை அவனும் பெற்றுத்தானே இருப்பான்? இதைவிடவும் பயங்கரமான நிலைமைகளினூடு அவன் தன்னை நிதானமாக்கித்தானே அவ்வாறிருக்கிறான். அவனிடம் எப்படி இந்தச் சுருக்கங்களைச் சொல்லமுடியும்? வீடு தந்ததே பெரும் புண்ணியம் என்றது போதாது இப்போது இதுவும் கேட்பதா? துணைக்கு யாராவது என்றால், முதலில் வருவது கிணறும் தண்ணீர் பிரச்சினையும்தான். இன்னொரு புதுப் பிரச்சினையாகத்தான் அது அவனுக்குத் தோன்றும்! நான் மனைவிக்குப் பதில் கூறாமலிருந்தேன்.

**உறங்கிப் போனேன் என்று மனைவி நினைத்து எதையும் கேட்காமல் இருப்பதே போதும் என்ற சுகம். நாளையும் எதிர்நாட்களும் குடும்பமும் என்ன என்ற பாலையின் நீட்சி இரவுகளில் வருத்திற்று.**

அன்று மாலை எங்கள் நண்பர் இருவர் அங்கு வந்திருந்தனர். வீடு நன்றாக இருப்பதாகவும், நாங்கள் அதிர்ஷ்டக்காரர்கள் என்றும் சொன்னார்கள். நல்ல வசதியான வீடு என்றும், எங்களுக்கு மிகவும் பொருத்தமானது என்றும், இப்பொழுது இப்படி வீடு எடுப்பது மகா காரியம் என்றும் சொன்னார் ஒருவர். இந்த வார்த்தை அபிப்பிராயங்கள் எனக்குத் தேறுதல் ஊட்டின. இவர்களின் இந்த அபிப்பிராயங்களைத் தான் பொருட்படுத்தவில்லை என்பதாக இருந்தது மனைவியின் முகமும் அவளின் பார்வையும். நான் அவர்களிடம் இப்படிக் கூறினேன். 'ஆள் பயப்படுது மச்சான். நானும் எந்தநேரமும் நிற்கிறதில்லை. இவவோடை துணையாய் இருக்கிறதுக்கு வேற ஆட்களுமில்லை. தென்னந்தோட்டத்திலை இருக்கிற வீடு எண்டால் 'புக்காராவும்', 'சுப்பர் சொனிக்கும்', 'சியாமாசெட்டியும்' ஸ்பொட் பண்ணுவான் என்று. நான் தனக்காக பரிந்துரைத்ததாக அவளது முகத்தின் நரம்புகளில் சிலிர்ப்பின் வேர்விடல். எப்பொழுதும் கலவரமூட்டும் ஹெலிகொப்ரர்களும் குண்டுவீச்சு விமானங்களும் அவளைச் சன்னமாகப் பயமுறுத்திவைத்துள்ளன. உயிரைத் தின்றுவிடுவோம் என்று சபதம் எடுப்பதைப் போல அவை அவளின் தலையைச் சுற்றுகின்றன. ஆனால் அவள் பற்றிக் கதைத்த அக்கணத்தில் அவள் புனர்ஜென்மம் பெற்றதுபோல மலர்ந்திருந்தாள். பல விடயங்களையும் பேசிய நண்பர்கள் விடைபெற்றுச் சென்றார்கள்.

பகல், நீரால் கழுவிய ஈரலிப்பின் பதனம், குளிர்மை, வெறுந்தரையில் படுத்துறங்க வேண்டுமென்ற அவாவின் விரிப்பு. தரையிலே உறங்குவதாகக் கூறிச் சரிந்தேன். தென்னைகளில் படிந்து வந்த காற்று ஆசுவாசமாக இருந்தது. யார் என்னை ஊஞ்சலில் ஆட்டுவது? எவர் சாமரம் வீசுவது? மீண்டும் தாலாட்டுப் பாடும் குரல்... குதூகலிக்கும் மனசுடன் எங்கோ கைப்பற்றிச் சென்றேன்.

திடீரென்று என்னை அழைத்து நிறுத்தும் ஒரு குரலின் ஒலி. மிக நிதானமாக அழைக்கும் குரல் கேட்கிறது. கைதவறி வீழ்ந்தது போல் மிரண்டு விழித்தேன். “நன்றாக யோசித்துப் பாருங்கள். நீங்களும் இல்லாத வேளைகளில் நானும் குழந்தையும் எப்படித் தனித்திருப்பது? உயிரைக் குடிக்கும் அந்தச் சனியங்கள் வந்தால் என்னால் தாங்கமுடியாது” என்று மந்திரித்தாள் துணை. ஒரு சாபம் போல அவள் மண்டையில் இந்த ஞாபகங்கள் படையெடுத்துக் கிளம்புகின்றன. சாபத்துக்குரியவரைச் சாபமிட்டேன். ஒன்றையுமே சிந்திக்கமுடியாமல் என் நிலை சிக்குண்டு சிக்குண்டு வருவதாக உணர்தேன். குப்புற வீழ்த்திப் பிடரியில் சப்பாத்துக் காலால் மிதிப்பதைப் போலிருந்தது. மனைவியின் விழிகள் கன்றிப் போயின. இரத்தம் வற்றி உயிர் நரம்புகள்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தளர்வது போலாகி விட்டது. நோய்கொண்ட செடியாக நொந்து வெந்துவிட்டாள். அவளிடம் எதைப் பற்றியும் கேட்கமுடியாது; சொல்ல முடியாது. ஏதாவது கேட்டால் அணை உடைந்ததைப் போல குமுறல் வெடிக்கலாம். அதில் கோபமோ, அழுகையோ, வேதனையின் பிழிதலோ, வெறுப்போ, குமுறலோ, நம்பிக்கையின்மையோ எதுவோ கட்டற்றுப் பீறிடும். அது என்ன விபரீதத்தை நிகழ்த்தி விடுமோ என்று துயருற்றிருந்தேன். வீடு பற்றிய மிகப் பெரிய பிரச்சினை தீர்ந்துவிடுமென்ற பிரமை சிதைவுற்றது. நகரத்தில் நான் புரிந்துவந்த வேலையை விடலாம் என்ற எல்லையில் வந்திருந்தேன். எல்லா வழியும் அடைபட்டபின் இந்த மார்க்கம் தான் மீதமாயிருந்தது.

வார இறுதியில் நான் வீட்டுக்குச் சென்றிருந்தேன். மனைவி பூரித்தபடி நின்றிருந்தாள். விழித்தபடியே நான் கனவு காண்கிறேனோ? என்ற நடுக்கம் என்னுள் அலையெடுத்தது. அவள் சொன்னாள்- தாதி ஒருத்திக்கு வீட்டின் ஒரு பகுதியை,

www.tamilarangam.net

**என் மனசிலுள்ள நன்றியின் துடிப்பை அவனிடம் தந்துவிடவேண்டுமென்று தவித்தேன். ஒவ்வொரு தடவையும் அது கூடிவந்து விலகிப் போயிற்று. கடிதமூலம் எழுதவும் முடியவில்லை. அன்று எப்படியும் அவனைச் சந்திப்பது என்ற தீர்மானிப்பில் அவனிடம் சென்றேன்.**

நமக்கு ஆட்சேபனை இல்லையென்றால் வழங்கினால் நன்றென அந்த இளங்கறுப்பு நிறமுடைய நன்றிக் குரியவன் வந்து சொல்லிச் சென்றான் என்று.

புதிய வீட்டில் இதுநாள் வரையில் எந்தப் பிரச்சினையும் இருந்ததில்லை. வீடு கிடைத்தபின் இந்த ஒன்றரை வருடங்களிலும் அவனுக்கு நன்றியையோ, எந்த உபகாரத்தையோ செய்யமுடியவில்லை எம்மால். எங்காவது பயணம் செல்லும் வேளைகளில், எப்போதாவது வழியில், அந்த நன்றிக்குரியவனைக் கண்டிருக்கிறேன். ஒரு வார்த்தை பேச வாய்த்ததில்லை. அவன் என்றும் எதைப்பற்றியோ தீவிரமாக எண்ணமிட்டபடி செல்வதுபோலிருக்கும். அல்லது மிக அவசரமாகச் சென்று கொண்டிருப்பான். மற்றும்படி என்றும், எங்களுக்குத் தந்த வீட்டுக்குக் கூட அவன் வந்ததில்லை. எப்படியும் அவனுடன் பேசவேண்டும். என் மனசிலுள்ள நன்றியின் துடிப்பை அவனிடம் தந்துவிட வேண்டுமென்று தவித்தேன். ஒவ்வொரு தடவையும் அது கூடிவந்து விலகிப் போயிற்று. கடிதமூலம் எழுதவும் முடியவில்லை. அன்று எப்படியும் அவனைச் சந்திப்பது என்ற தீர்மானிப்பில் அவனிடம் சென்றேன். செல்வதற்கு முன்பும், செல்லும் வேளையிலும் அவனிடம் எப்படிப் பேசுவது என்றெல்லாம் மறுபடி மறுபடி மனதுள் பிரதி பண்ணிக்கொண்டிருந்தேன். அவனிடம் சென்றபோது, அவனது இடத்திற்கு புதிய ஒருவர் வந்திருப்பதாகவும் அவன் மூன்று நாட்களின் முன் கிழக்கே நடந்த இராணுவத்துடனான சண்டையொன்றில் காயப்பட்டுள்ளான் என்றும் சொன்னார்கள். என்னை இருக்கும்படி சொன்னவன், நன்றிக்குரியவனின் இடத்திற்குப் புதிதாக வந்தவனிடம் என்னைப் பரிச்சயமாக்கினான். விம்மும் மனசுடன் புதியவனைப் பார்த்தேன். புதியவன், அந்த வீட்டிலேயே தொடர்ந்தும் எங்களை இருக்கலாம் என்றான். ஏதாவது உதவி வேண்டுமென்றால் அதைத் தான் செய்து தருவேன் என்றும் வாக்களித்தான். நன்றிக்குரியவனிடம் என் விசாரிப்பை தான் சொல்வதாகவும் பிறிதொருவேளை நன்றிக் குரியவனைச் சந்தித்துக்கொள்ள தான் உதவுகிறேன் என்றும் சொல்லிக்கொண்டிருந்தான். விடைபெற்று வரும்போது என் ஆயுள் முழுவதற்குமான நன்றியில் நான் அந்த இளையவர்களிடம் ஒன்றிப் போயிருந்தேன்.

**அழியாத சுவடுகள்**



கிட்டண்ணா பற்றிய ஐந்து பாடல்களும் மற்றும் போராட்ட மண்ணின் யதார்த்தத்தினை சுமந்த சில பாடல்களும் தாங்கிய இசைத்தட்டு வெளிவந்திருக்கிறது. இவ் அழியாத சுவடுகள் என்னும் இசைத்தட்டில் வரும் பாடல்கள் தாயகம் திரும்பிச் சென்றுகொண்டிருந்த வேளை இந்தியக் கடற்படை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்ய முயன்ற வேளையில் கப்பலைத் தகர்த்து வீரமரணம் அடைந்த கிட்டண்ணாவையும் அவரோடு சென்ற தோழர்கள் பற்றியும் பாடல்கள் ஒலிக்கிறது.
கண்ணில் நீர் துளித்து நின்று அவர்கள் நினைவுகளை கிளர்த்திச் செல்லும் இவ் இசைத்தட்டு அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

1960 களிலிருந்தே எழுதிவரும் திரு. **செம்பியன் செல்வன்** (ஆ. ராஜகோபால்) ஈழத்தின் குறிப்பிடக்கூடிய படைப்பாளியாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டவர். யாழ். இலக்கிய வட்டத்தின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் இவர் ஆற்றிய பணி அதிகம்.

**'அமைதியின் இறகுகள்', 'மூன்று முழு நிலவுகள்', 'நாணலின் கீதை', 'கானகத்தின் கானம்'** ஆகிய இலக்கியப் படைப்புகளைத் தந்தவர். சில நூல்களின் தொகுப்பாளர். தன் மனதுக்குப் பிடித்த கருத்துக்களை தயக்கமின்றி வெளிப்படுத்துபவர். **'விவேகி', 'அமிர்தகங்கை'** ஆகிய இலக்கிய சஞ்சிகைகளில் இணையாசிரியராகவும் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். இப்பொழுது கல்வித் திணைக்களத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக இருக்கிறார். நாடகம், சினிமா பற்றி புதிய ஆழமான பார்வையைக் கொண்ட இவர் அன்றுதொட்டு தமிழரின் போராட்டங்களில் மிகுந்த ஈடுபாடும், உணர்வும் மிக்கவராக இருந்து வருகிறார்.

www.tamilarangam.net



# நேர்காணல்

## செம்பியன் செல்வன்

**நேர்முகம் கருணாகரன்**

**★ ஆரம்பத்தில் உங்களுக்கு எப்படி இலக்கியத்தில் ஈடுபாடு வந்தது? முதலில் நீங்கள் எழுதும்போது உங்கள் சிந்தனை, இலக்கியம் பற்றிய கருதுகோள் எல்லாம் எவ்வாறிருந்தன? உங்கள் வாழ்க்கைப் பின்னணி எவ்வாறு உதவியாக அமைந்தது?**

★★ உங்களின் இந்தக் கேள்வி ஒரு தனிக் கட்டுரைக்குரியது. எனினும் சுருக்கமாகச் சொல்லிப் பார்க்கிறேன். எழுத்து- படைப்பியல்- என்ற சிந்தனா நோக்கு இளவயதிலேயே எழுந்துவிட்டது என்று கூறுவது எவ்வளவு அபத்தமோ, அந்தளவிற்கு இவற்றிற்கான அத்திவாரங்கள் நாமறியாமலே எம் இளமனதில் சூழலினால் இடப்படுகின்றன என்பதனை மறுப்பதும் அபத்தமே. இத்தகைய அத்திவார அநுபவங்கள் எல்லோர் வாழ்விலும் நிகழுகின்றன. பிற்காலங்களின் இவற்றை இனங்காணுபவன் கலைஞனாகிறான்.

இன்று எழுத்தாளர்களிடையே 'கலகக்காரன்' என்றோ, மேடையில் அதிரடிப் பேச்சாளனென்றோ (உண்மையாகவோ/ கேலியாகவோ) பேசப்படுகிறேன் என்றால் என் பிறப்பும் வளர்ப்பும் படிப்பும் காரணம் எனக் கருதுகிறேன்.

நான் ஒரு தாயைத்தின்னி; அதுவும் பிறந்த வீட்டிற் குள்ளேயே தாயை விழுங்கிவிட்டவன். அதனால் தந்தையும், ஆறுவயதான என் அண்ணனையும், என்னையும் அநாதையாகத் தவிக்கவிட்டுவிட்டுத் தலைமறைவாகிவிட்டார். அதன்பின் அவர் வயது வந்து காலமாகிய செய்தி கேட்கும் வரை நாங்கள் சந்திக்கவேயில்லை. எங்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பு- சுமை- ஆச்சி தலையில் (அம்மாவின் தாய்) விழுந்தது. உறவினர்கள் என்று எவரையும் நாம் பெரியவர்களாகும் வரை அறிந்ததில்லை. அப்பா (அம்மாவின் தகப்பன்) அப்போது வலிகாமம் மேற்கு 'வசு'க் கொம்பனியில் ஒரு சாரதி. அவரும் ஒரு கலகக்காரன்; திறந்த மனசுக்காரன்; வேலையில் கெட்டி; நண்பர்கள் சகவாசம் அதிகம். அவர் வலிகாமம் மேற்கு வசுக் கொம்பனித் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஆனதில் ஆச்சரியமில்லை. இதனால் உழைக்கும் சம்பளம் எல்லாம் பொதுச் சொத்து; வீட்டில் பொருளாதார நெருக்கடி எப்பவும் உண்டு. இதனால் எனக்கும் அண்ணனுக்கும் புரிந்து புரியாத வயதிலேயே "வீட்டில் கூடும் தொழிலாளர்க ளிடையே எழும்.... கூலி..... குழப்பம்.... ஸ்டிரைக்.... லீவு.... வேலை நாட்கள்.... ஓவர் டைம் போன்ற சொற்கள் அறிமுகமாயின. பிற்காலத்தில் அச்சொற்கள் தம் பூரணார்த்தத்துடன் நெஞ்சத்தில் பதிந்தன"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**★ 'கலகக்காரன்' என்ற பதத்தை நீங்கள் பயன்படுத்துவது பற்றி..?**

★★ அதற்குத்தான் வந்துகொண்டிருக்கிறேன். ஒருமுறை வசுத்தொழிலாளர்கள் மேற்கொண்ட 'ஸ்டிரைக்' பஸ் ஒன்றைக் கொழுத்துவதில் முடிந்தது. வேலியால் பாய்ந்துவந்த அப்பா அப்போது கட்டிலில் படுத்திருந்த என்னருகே சேலைக் குவியல்கள்.... தலையணைகள்... இடமில்லாமல் கட்டிலில் ஏறியிருந்த அரிப்பானை... சருவக்குடம்... தட்டு முட்டுச் சாமான்களிடையே படுத்துக்கொண்டார். (நான் சொல்லும் கட்டிலை பழையவர்கள் புரிந்து கொள்ளுவார்கள்) பொலீசுக்காரன் அறையின் வாசலில் நின்று அறையை விழியால் துளாவிவிட்டு, அகன்றான். அப்போது அந்தப் பயத்திலும் நெஞ்சில் ஒரு உறுதி பிறந்ததை இன்று உணரமுடிந்தது. பின்னர் பஸ் வழக்கு 'நடேசனைக் கொண்டு பேசுவிக்க' ஒருமுறைக்கு அன்றைய மதிப்பில் 10,000 ரூபா செலவிடப்பட்டதும் அதற்காக எஞ்சிய இருப்புக்களை அப்பா கரைத்ததும் எங்களை மிகவும் கீழ்நிலைக்கு கொண்டு சென்று, சொந்த வீட்டுக்காரரை வாடகை வீட்டுக்காரராகவும் மாற்றின. நான் வளர்ந்து பெரியவனாவதற்கிடையில் சுமார் 50 வீடுகளாவது மாறியிருப்போம். எல்லாம் என்னால் தான். சொந்த வீட்டுக்காரப் பிள்ளைகள் விளையாட்டில் கூட தங்களது மேலாதிக்கத்தை நிலைநாட்ட முனைவர்; அடாவடித்தனம் செய்வர்; என்னால் பொறுக்கமுடியாது; 'அடிதடிதான்; கட்டிப்புரளுவது தான்'. அக்காலத்தில் இதெல்லாம் சிறுபிள்ளைகள் சண்டையென்று விட்டுவிடமாட்டார்கள். பெரியவர்கள் சண்டையில் வந்துமுடிந்து, 'நாளைக்கே வீட்டை விட்டு எழும்பிப்போடோணும்' என்ற எச்சரிக்கையுடன் வார்த்தைகள் ஓய்வு கொள்ளும். புதுவீடு தேடும் படலம் ஆரம்பமாகும். எனக்கு நெஞ்சம் கொதிக்கும். நியாயத்துக்குப் போராடிய எனக்குத் தண்டனையா? யார்மேல் கோவிப்பது என்பது புரியாமல் தவிப்பேன். (இந்தத் தவிப்பு இன்றுவரை அடங்கிய தில்லை) இந்த வீடுமாறுதல்கள் எத்தனை எத்தனை சூழ்நிலைகளை.... மனிதர்களை- பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை உணரவைத்தன.

www.tamilarangam.net

**★ இந்த அநுபவங்கள் எப்படி பிற்காலங்களில் எழுத்தாகின என்பது பற்றி?**



தற்போது தமிழர் தம் விடுதலைப் போராட்டம் இடம்பெறத் தொடங்கியுள்ளது. இன்றைய சூழலில் படைப்பாளி என்பவன் பேனா தூக்கிய போராளியே. காலூன்ற நிலமில்லாமல், சர்வதேச தத்துவார்த்தம் பேசுபவனே மோசமான கற்பனாவாதி. படைப்பாளி என்பவன் எப்போதுமே சமூக அமைப்புகளுடனோ, அரசியல் பொருளாதார அசைவியக்கங்களுடனோ போராடுபவனாகவே இருக்கிறான்.

★★ நீங்கள் இதுவரை பார்த்த பக்கம் என் அப்பாவினது. என் ஆச்சியோ தமிழறிவு மிகமிக மிக்கவ. சிற்றிலக்கியங்கள், பிரபந்த வகைகள் எல்லாவற்றையும் மனப்பாடமாக வைத்திருந்தவ. அறப்பளீசுர சதகம், பட்டினத்தார் பாடல், அல்லியரசாணிமாலை, நல்லதங்காள் கதை, விக்கிரமாதித்தன் கதை, மதனகாமராசன் கதை, தென்னாலி இராமன் கதை என எல்லாம் தெரிந்திருந்ததுடன், ஏராளமான 'ராசாராணி' கதைகள்.... பாதக்குறடு, சுக்குமாந்தடி, சோழியப்பை... என வரும் கதைகள் எல்லாம் தெரிந்து வைத்திருந்தவ. இரவுவேளையில் படுக்கையில் எங்களைத் துயிலிலாழ்த்தும். நவநவமான கற்பனைகள் மட்டுமல்லாது கனவுகளில் நாமும் கதாபாத்திரங்களுடன் நடமாடி... துயில்கலைந்து சூரியோதயத்தில் விழிக்கும் போது புத்துணர்வு பிறக்கும்.... இன்றும் எனக்கு ஒரு கவலையுண்டு. கதைசொல்லும் தாய்மாரோ... பாட்டிமாரோ குழந்தைகளுக்கு இல்லையேயென்று...

**★ இத்தகைய கதைகள் குழந்தைகளை யதார்த்தத்திலிருந்து பிரித்து விடவா?**

★★ அப்படி ஒரு கருத்து நிலவினாலும்... இத்தகைய கதைகள் நவநவமான கற்பனைகளையும், விரிசிந்தனைகளையும் வளர்க்க இளவயதிலேயே பயிற்சி கொடுப்பதாகவே கூறுவேன்.

**★ பிறதாக்கங்கள் அன்றைய நிலையில்?**

★★ ஆச்சியிடம் கதைகேட்கப் பழகியவன், இக் கதைகளை கலலூரியில் ஆசிரியர் வராத காலங்களில் சக மாணவர்களுக்கு கூறத்தொடங்கினேன். இது நண்பர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்தக் 'கதைகூறும்' ஆர்வம் இயல்பாகவே 'கதை படிக்கும்' ஆவலைத் தூண்டியது. ஆவலுக்கு அவல் கிடைக்க உதவியவர் அண்ணன். இவரும் ஒரு பயங்கர வாசகர். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நிறைய வாசித்தவர். அவர் நெஞ்சடைப்பு நோயால் ஆஸ்பத்திரியில் காலமானபோது கூட, மருந்துப் பொட்டலங்களோடு காணப்பட்ட நூல், ஆபிரிக்க நாவலான ROOTS என்பது இப்போது நினைவில் வருகிறது. அவரால் அப்போது வெளிவந்து கொண்டிருந்த அனைத்துச் சிறுவர் சஞ்சிகைகளையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படிக்க வாய்ப்பேற்பட்டது. ஜிங்கிலி, ஜில்ஜில், அணில், பாப்பாமலர், சித்திரபாரதி, சித்திரக்குள்ளன், டமாரம், சாக்லட், துப்பாக்கி, லட்டு, அம்புலிமாமா, கண்ணன், பூஞ்சோலை, கல்கண்டு, கரும்பு போன்றன முக்கியமானவை. இவை மட்டுமல்லாது இனறைய வானதிப் பதிப்பக உரிமையாளர் திருநாவுக் கரசு, ராஜன் என்போரால் ஓரணா வில் வெளியிடப்பட்ட ஏராளமான சின்னஞ்சிறுகதை நூல்களும் குறிப் பிடப்பட வேண்டியவை. குழந்தைக ளுக்கான சிறுநூல்களும் சஞ்சிகைக ளும் ஈழக் குழந்தைகளுக்காக நிறைய வெளியாகவேண்டும் என விரும்புகிறேன். நாளடைவில் நல்லதொரு வாசகனாக மாறினேன். (இன்றுவரை என்னை ஒரு வாசகனாகவே கருதி வருகிறேன்) நல்லதொரு வாசகன்தான் நல்ல தொரு படைப்பாளியாகிறான் என்பது என் கருத்து.

**★ உங்கள் கல்லூரி வாழ்க்கையில் காணப்பட்ட படைப்புக்கான சூழல் பற்றி....**

★★ நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன். அங்கு ஏழாம் வகுப்புப் படிக்கையில் இராமாயண, பாரதக் கதைகளை சிறந்த கதை சொல்லி திரு. கே. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் சமயப் பாடவேளையில் கூறும்பொழுது திறந்த வாய் மூடாமல் கேட்போம். பின்னர் எட்டாம் வகுப்பில் ஆங்கிலப் பாடம் எடுத்த பொழுதும் எங்களுக்குத் தான் எழுதும் கதைகளை வாசித்துக்காட்டும் திரு. ஏ. எஸ். கனகரத்தினம் எங்கள் எழுத்தார்வத்தைத் தூண்டிவிட்டார். உயர் வகுப்புக்களில் தமிழாசிரிய ராக வந்த 'ஈழத்துறைவன்' என்கிற திரு. ஏகாம்பரமூர்த்தி அவர்கள், பண்டிதரும் பட்டதாரியுமான திரு. எஸ். செல்லத்துரை அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். 'கண்டதும் கேட்டதும்' நாவலாசிரியரான திரு. தேவன்- யாழ்ப்பாணம் அவர்களும் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். அவரது 'கூடப்பிறந்த குற்றம்' நாட

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

www.tamilarangam.net

# தமிழில் சிறு பத்திரிகைகள்

**தமிழில் ஒரு சிறு பத்திரிகையை வெற்றிகரமாக நடத்துதல் என்பதின் பொருள் யாது?**

ஒரு பத்திரிகை ஆசிரியனுடைய உழைப்பு சம்பந்தப்பட்ட விடயமா அது? அல்லது அவரது தனித்திறன், சமார்த்தியம் சம்பந்தப்பட்ட விடயமா? சிறு பத்திரிகை நடத்துதல் ஒரு கலாச்சாரப் பிரச்சினை என ஆய்வாளர்கள் கருதுவர். தம் பிரதேச வாசகர்கள் எப்படிப்பட்டவர்கள்; குறிப்பிட்ட பிரதேச எழுத்தாளர்களதும் வாசகர்களினதும் எதிர்பார்ப்புகள் என்ன? என்பதனைப் பத்திரிகை ஆசிரியன் அறிந்திருத்தல் வேண்டும். தம் மொழி, தம் இனம் சார்ந்த கலாச்சாரத்திற்கும் எழுத்தாளர்களுக்கும் உள்ள தொடர்பினையும் விமர்சனத்தின் நிலைப்பாட்டையும் மனங்கொள்ளல் வேண்டும்.

கலாச்சார மாற்றத்துக்கான வைராக்கியம் எழுத்தாளர், வாசகர் மத்தியில் எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதனை பத்திரிகை ஆசிரியன் தன் கவனத்திற்கு கொள்ளல் வேண்டும்.

எந்தத் தனிநபராவது இதழாசிரியராக மாறவேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்தால் பத்திரிகை ஆசிரியனாக உருவாகமுடியாது. அவ்வாறு தொடங்கப்பட்ட பத்திரிகை காலகதியில் மறைந்துவிடும்.

தனிநபர் பத்திரிகை ஆசிரியனாக மாற, அவனை மாற்ற ஒரு பின்னணி அவனுக்கு இருத்தல் வேண்டும்.

ஒரு கலாச்சாரத்துடன் இணைந்த சித்தாந்தப் பின்னணி இருத்தல் வேண்டும். அத்துடன் அதில் ஆழ்ந்த நம்பிக்கை ஆசிரியனுக்கு அவசியம் வேண்டும்.

ஒரு பத்திரிகை ஆசிரியன் ஒரு நோக்கம் அல்லது இலட்சியம் கருதி ஒரு பத்திரிகையைத் தொடங்கலாம்.

**ஒரு எழுத்தாளன் பத்திரிகை ஆசிரியனுக்கு யாது கூறுகிறான்? கூறவேண்டும்?**

நீ உன்னுடைய சிறந்த பத்திரிகையை உருவாக்கு. அதற்கு என் பூரண ஒத்துழைப்பு உண்டு. என் துறைசார்ந்த விடயதானத்தை என்னிடம் கேள். என்னால் முடிந்தவரை உழைத்து விடயதானங்களை உருவாக்கித் தருகின்றேன்.

என்னுடைய சிறந்த கதைகளையும், கவிதைகளையும் உன் பத்திரிகைப் பிரச்சாரத்திற்காகத் தருகிறேன். இந்தப் படைப்புக்களுக்கான எத்தகைய விமர்சனத்தையும் நான் ஏற்கத் தயார். என் படைப்புக்களில் என் ஆத்மா இருக்கிறது.

இவற்றை வாசகர்களிடம் எடுத்துக் கொண்டு போ. இது உன் கடமை.

எழுத்தாளனது படைப்புக்களை மக்கள் முன் கொண்டு செல்பவன் பத்திரிகை ஆசிரியன். வாசகர்கள் யாது நினைக்கிறார்கள் என எழுத்தாளனுக்குத் தெரிதல் வேண்டும்.

வாசகர்களின் அபிப்பிராயங்கள் எழுத்தாளனுக்குத் தெரிதல் வேண்டும். பத்திரிகை ஆசிரியன் எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் மத்தியில் பாலமாக அமைகின்றான். இவன் மூலமாகவே எழுத்தாளனது படைப்புகள் மக்களைச் சென்றடைகின்றன.

இதன் நிமித்தம் படைப்பாளிக்குப் பொறுப்பில்லை என்ற அர்த்தம் அல்ல. படைப்புகளை உருவாக்கிய படைப்பாளியே அதற்கு முழுப் பொறுப்புமானவன். வாசகர் பெயர் சொல்லிக் கேட்டால் பதில் அளிக்கவேண்டியவன் படைப்பாளி. கேள்வி கேட்கும் நிலையில் எழுத்தாளன், வாசகர் முன் வருகின்றான். ஏன் படைத்தேன் என எழுத்தாளனும், ஏன் பரப்பினேன், ஏன் வெளியிட்டேன் என பத்திரிகையாசிரியனும் மக்களுக்கு பதில் இறுத்தல் வேண்டும்.

வாசகர்களுடன் பத்திரிகை ஆசிரியனும், எழுத்தாளனும் கூடிக் கலந்து பேசுதல் வேண்டும். இந்தக் கலாச்சாரம்தான் பத்திரிகை ஆசிரியனை உருவாக்கமுடியும். சமூகம் சார்ந்த சிந்தனையின் முதிர்ச்சி இது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க, அவுஸ்திரேலிய, ஐரோப்பிய கண்டங்களில் வாழும் தமிழ் மக்களின் இதயங்களிலும் என்றும் எழுந்து நிற்கும் உன்னத வீரர்** www.tamilarangam.net




பிரான்ஸ்




மத்திய கிழக்கு

அவுஸ்திரேலியா




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டென்மார்க்



www.tamilarangam.net

நெதர்லாந்து





சுவிஸ்

இத்தாலி



(23ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை நாம் நடத்தினோம். எனது சக மாணவர்களாக விளங்கியவர்கள்- இக்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாகப் பேசப்படும் செங்கை ஆழியான், அங்கையன், து. வைத்திலிங்கம் ஆகியோர்.

**★ உங்கள் படைப்புக்களுக்கும் கல்விக்குமுள்ள தொடர்பினை என்னவாக இனம் காணுகிறீர்கள்?**

★★ இதுபற்றி இக்காலத்தவர்களுக்கு நிச்சயம் தெரியவேண்டும். நான், செங்கை ஆழியான் ஆகியோர்தான் 1960 இல் முதன் முதலாக தமிழில் படித்துப் பல்கலைக்கழகம் போனவர்கள். படித்த காலங்களில்- தமிழில் பட்டப்படிப்பா? அந்தப்படிப்புக்கு ஒரு மதிப்பா? தமிழில் என்ன இருக்கிறது? அதுவும் தமிழில் 'ஆட்ஸ்' படித்து என்ன செய்யப் போகிறார்கள்? (இன்று செ.ஆ ஒரு மேலதிக அரசாங்க அதிபர்) என்று எங்களைப் படிப்பித்த ஆசிரியர், விரிவுரையாளர்களே எங்களை வேதனைப்படுத்தினார்கள். இன்றும் தமிழில் எதனையும் புதிதாகச் செய்ய முயன்றால் 'பல்லி சொல்லும்' பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். தூய தமிழ் பயன்பாடும் இதில் அடங்கும். உயிரியலிலும் கருத்தியலிலும் போராட்டமே முதலிடம் பெறும். வெற்றி பெறுவது வாழும். இது நியதி. மார்க்ஸிய வாதமும் கூட. ஆனால் விவகாரம் என்று வரும்போது இந்த நியதியை மறுப்பவர்களாகி விடுகின்றனர். போகட்டும். தமிழில் படித்து தமிழில் சிந்திக்கத் தொடங்கினோம். தற்செயலாக கொழும்புப் பல்கலைக் கழக தமிழ்ச்சங்க வெளியீடான 'இளந்தென்றலை'ப் புரட்ட நேர்ந்தது. அதில் அ. முத்துலிங்கம் எழுதிய 'கோடை மழை' படித்த பிரமிப்பு இன்றுவரை நீங்கவில்லை. அக்கால 'தினகரன் தினசரி'யில் 'சொக்கன்' எழுதிய 'செல்லும் வழி இருட்டு' நாவல் புதிய சுவையை ஊட்டியது. எழுதலாம்- எழுதவேண்டும் என்ற உத்வேகத்தைப் பெற்றோம்.

**★ நீங்கள் எழுத்துலகில் ஈடுபட்டிருந்த போதிருந்த இலக்கியச் சூழ்நிலை என்ன?**

www.tamilarangam.net

★★ பேராதனைப் பல்கலைக் கழகம் சென்ற போது அங்கு பாரிய இலக்கிய முயற்சிகள் நடந்துகொண்டிருந்ததாகக் கூறமுடியாது. சில



சிறுசஞ்சிகைகள் வெளியிட விரும்புகிறவர்கள் தெளிவாக தங்கள் கோட்பாட்டை வரையறை செய்துகொள்ள வேண்டும். யாருக்காக எதைக்கொண்டு போகப்போகிறோம், எப்படிக் கொண்டு போகப்போகிறோம் என்ற திட்டமிடலில் தெளிவு இருக்கவேண்டும். அந்தச் சஞ்சிகைகான விடயங்களோ, விடயங்களை அளிக்கக்கூடிய ஆற்றலோ, ஆளணிகளோ இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

விரிவுரையாளரின் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வேடுகளும், பாடநூல் போன்ற சில வெளியீடுகளுமே காணப்பட்டன. தமிழ்ச்சங்க- இளங்கதிர், இந்துசமயச்சங்க- இந்து தர்மம், மூன்று மொழிகளிலும் வெளிவந்து சுமார் எட்டுப் பக்கங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்ட STUDENTS COUNCIL MAGAZINEம் தமிழ் விரிவுரையாளர்களும், தமிழ்ச் சிறப்பு மாணவர்களும் ஏதேதோ எழுதிவந்தனர்.

1960ல் தமிழ்மொழி மூலம் பட்டதாரி மாணவர்கள் வந்ததும் இந்தச் சூழ்நிலை மாறி பிறதுறை மாணவர்களின் படைப்புக்களும் இடம் பெறலாயின.

இதேபோல 1961ல் தினகரன் ஆசிரிய பீடத்திலிருந்து விலகி, திரு. கைலாசபதி அவர்கள் தமிழ்த்துறை விரிவுரையாளராக வந்ததும் இந்த நிலைமைகளில் மாறுதல்கள் ஏற்படலாயின. நான் அவர் வந்த பொழுது புவியியல் பாடத்தை சிறப்புப் பாடமாகக் கொண்டதால் அவரிடம் கல்வி பயில நேரவில்லை. என் அதிர்ஷ்டம், அவர் நானிருந்த விஜயவர்த்தனா விடுதியிலேயே தங்க நேர்ந்தது. அடிக்கடி இலக்கியம் பேச விவாதிக்க நேர்ந்தது. அவர் பொதுவுடமைவாதி. எதிலும் மார்க்சியப் பார்வைதான். பரந்த நூல் படிப்பாளி. அவர் அறை முழுவதும் நூல்கள் மயம். இலங்கை எழுத்தாளர்களிடையே முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை வளர்த்தெடுத்து, நெறிப்படுத்தி வளர்த்தவருள் முதன்மையானவர். இந்தப் பணியை இவர் பல்கலைக்கழகம் வந்ததும் தொடர்ந்து செயற்படுத்தினார். இவர் மொழித் தூய்மையோ, இலக்கணச் சுத்தமோ எதுவும் தேவையில்லை, சமூக நிலை இயக்கமும் நகர்வுகளுமே முக்கியம் என்பதனை வற்புறுத்தினார். கலாநிதி ஆ. சதாசிவம் போன்றோர் இதற்கு மாறாகச் செயற்பட்டனர். உருவமா, உள்ளடக்கமா? மரபு, மண்வாசனை, பிரதேச இலக்கியம், இழிசினர் வழக்கு போன்ற வாதப் பிரதிவாதங்களும் எழுத்தாளர் பிரிவினைகளும் எழுந்தன. இவர்கள் இருவரும் தமிழ்த்துறை விரிவுரையாளர்களாக இருந்தமையால் மாணவர்களிடையேயும் தமது கருத்தை கருத்தியல் ரீதியாகவும் கல்வியியல் ரீதியாகவும் பரப்பியமையால் மாணவர்களிடையேயும் பிரிவினைகள் தோன்றின. நான் முற்போக்கு மாணவனாகக் கருதப்பட்டேன். இதனைக் கேலி செய்து எஸ். பொன்னுத்துரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

'நற்போக்கு இலக்கியம்' என ஒன்றை உருவாக்கினார். இதனால் ஒவ்வொரு குழுவைச் சார்ந்த எழுத்தாளர்களின் படைப்புக்களையும் எதிர் குழுவினர் எழுத்தெண்ணிப்படித்து காரசாரமாக விவாதித்தனர். இது எங்களது ஆரம்ப வளர்ச்சி நிலையில் மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தாலும் ஒவ்வொருவரின் இலக்கியமும் உரைகல்லில் இடப்பட்டதுடன், மறைமுகமாக விமர்சன படிப்பியலுமாயிற்று. விமர்சனம்- இலக்கியக் கோட்பாடு- இலக்கியச் செயல்நெறி என எங்களது அறிவும் விரிந்தது. இயல்பான பழக்கமுமாயிற்று. படைக்காவிட்டாலும் உயர்ந்த இலக்கியம் எதுவெனத் தெரிந்து கொள்ளும் இயல்புமாகியது.

**★ தாய்மொழிக் கல்விக்கும் உங்கள் படைப்பிலக்கியத்திற்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா?**

★★ நிச்சயமாக உள்ளது. தாய்மொழிக் கல்வியானது, தமிழ் மொழியின் பரந்த வீச்சினையும், ஆழ்ந்த அர்த்தச் செறிவினையும் உணர்ந்து கொள்ளச் செய்தது. சுயானுபவங்கள் மொழியின் தனித்துவங்களுடன் உறவுகொள்கையில் தமிழில் பிறந்த உண்மையான இலக்கியங்களாகின. இவற்றிடையே தர வித்தியாசங்கள் இருந்த பொழுதிலும் அவை அவை தத்தம்மளவில் சுயமானவையே. தாய்மொழிக் கல்விக்கு முன்னர் பல்கலைக்கழக மட்டங்களில் எழுத்தாளர்களாக பரிணமித்தவர்கள் தொகை மிகக் குறைவே.

**★ தாய்மொழிக் கல்வியின் வரவுக்கும் தமிழீழப் போராட்டத்திற்கும் ஏதாவது தொடர்பு இருப்பதாகக் கருதுகிறீர்களா?**

★★ தமிழ்மொழியின் கல்விநிலை முக்கியத்துவம், தமிழினம்... தமிழீழம்... தனியாட்சி என்றுணர்வுகளை இயல்பாகவே தோற்றுவித்தது. 1970களில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தோன்றிய 'தமிழ் இளைஞன்' பத்திரிகையும் அதன் உள்ளடக்கங்களும் இதனையே காட்டுகின்றன என நினைக்கிறேன்.

**★ உங்கள் சிறுகதைகளின் பிரதான அம்சங்களாக எவற்றைக் கருதுகிறீர்கள்?**

www.tamilarangam.net

★★ ஒவ்வொரு காலகட்டங்களிலும் வெவ்வேறான அம்சங்கள் இடம்பெற்றன. ஆரம்ப காலங்களில் தமிழ், தமிழினம், தமிழர் தம் பண்பாடு என்பன முக்கிய இடம் பெற்றன. பின்னர் கதைகூறும் நுட்ப முறைகள் இடம்பெற்றன. சமத்துவம்.... ஒருமைப்பாடு... என மாற்றம் கண்டு.... தற்போது தமிழர் தம் விடுதலைப் போராட்டங்கள் இடம் பெறத் தொடங்கியுள்ளன. இம்மாற்றங்களெல்லாம் வரலாற்று நிகழ்வுகளே. இன்றைய சூழலில் படைப்பாளி என்பவன் பேனா தூக்கிய போராளியே. காலூன்ற நிலமில்லாமல், சர்வதேச தத்துவார்த்தம் பேசுபவனே மோசமான கற்பனாவாதி. படைப்பாளி என்பவன் எப்போதுமே சமூக அமைப்புகளுடனோ, அரசியல் பொருளாதார அசைவியக்கங்களுடனோ போராடுபவனாகவே இருக்கிறான்.

**★ எமது இன்றைய சிறுகதை இலக்கியம் பற்றிக் கூறுங்கள்... சமகால தமிழீழச் சிறுகதை...**

★★ சிறுகதை இதுதான் என்று வரையறை செய்ய முடிந்ததில்லை. படைப்பாளியின் மனநிலைக்கும் சூழலுக்குமிடையே ஏற்படும் இடைவினையின் மெல்லிய சலனம் சிறுகதை எனலாம். கணநேர மின்னலாகக்கூட அது இருக்கலாம். அதில் உருவம் இது, உள்ளடக்கம் இதுவாகத்தானிருக்க வேண்டும் என்கின்ற விமர்சன நிர்ப்பந்தம் கூட சூழ்நிலையின் கட்டளையேயன்றி கலையுலகின் விதிமுறையல்ல. இந்தப் பின்னணியில்தான் இன்றைய இளையதலைமுறையின் இலக்கியப் போக்கு என்பேன்.

**★ இன்றைய சிறுகதை எழுத்தாளர்கள் தங்கள் படைப்பின் வளர்ச்சி குறித்து கவனிக்க வேண்டியவை எவை?**

★★ இன்றைய சிறுகதை எழுத்தாளர்கள் புதிய தலைமுறையினர் எதிர்பார்க்கும் வளர்ச்சிக்கும் பழைய தலைமுறையினர் நோக்கிய வளர்ச்சிக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. அவர்கள் புதிய சிந்தனையுடன் புதுயுகம் நோக்கிய பூபாளம் இசைப்பவர்கள். அவர்கள் வளர்ச்சி அவர்கள் அநுபவங்கள் சார்ந்தவையே அன்றி பிறர் சார்ந்தவையல்ல.

**★ சிறு சஞ்சிகைகளில் நீங்கள் ஆசிரியராகவும், இணையாசிரியராகவும் செயற்பட்டுள்ளீர்கள். சிறு சஞ்சிகை தொடர்பாக உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்.**

★★ சிறுசஞ்சிகைகள் வெளியிட விரும்புகிறவர்கள் தெளிவாக தங்கள் கோட்பாட்டை வரையறைசெய்து கொள்ளவேண்டும். யாருக்காக, எதைக்கொண்டு போகப்போகிறோம், எப்படிக் கொண்டு போகப் போகிறோம் என்ற திட்டமிடலில் தெளிவு இருக்கவேண்டும். அந்தச் சஞ்சிகைக்கான விடயங்களோ, விடயங்களை அளிக்கக்கூடிய ஆற்றலோ, ஆளணிகளோ இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். சஞ்சிகைகளிலே இடம்பெறும் விடயங்களிடையே சமநிலைத் தன்மை (EQUILIBRIUM) நிலவுகிறதா என்று கவனம் செலுத்த வேண்டும். இதன் பிறகுதான் விநியோகம்- விலைவாசி எல்லாம். இதன் பின்னணியில் நீங்களே சஞ்சிகைகள் பற்றி அபிப்பிராயம் கொள்ளலாம்.

## முதல் தமிழ் நூல்

முதன் முதலில் இந்தியாவின் கோவாவில் தமிழ் நூல் 1578ம் ஆண்டு அச்சிடப்பட்டதாக வரலாறு தெரிவிக்கின்றது. போர்த்துக்கேய மொழியில் அச்சிடப்பட்ட ஹார்க்குயு என்னும் நூலே தமிழில் "தம்பிரான் வணக்கம்" என மொழி பெயர்த்து அச்சிடப்பட்டது. முதன் முதலில் அச்சிடப்பட்ட இந்நூல் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சர்வகலாசாலாமின் நூல் நிலையத்தில் உள்ளது. பிரதி ஒன்று தஞ்சாவூர் தமிழ் சர்வகலாசாலையின் நூல் நிலையத்தில் இருக்கிறது. இந் நூலின் பிரதிகள் 1579ம் ஆண்டில் கேரளத்திலும் அச்சிடப்பட்டு இலவசமாகவே விநியோகப்பட்டது. இந் நூலின் பதிவுச் செலவிற்காகக் கூட எந்தவிதமான தொகையும் அறவிடப்பட வில்லை. அக்காலத்தில் போர்த்துக்கலில் பதவியில் இருந்த அரசன் 1556ம் ஆண்டு அச்சு இயந்திரம் ஒன்றை இந்திய அரசிற்கு வெகுமதியாக அனுப்பி வைத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காட்டு அன்னங்கள்

## பிரம்மஞானி

சீனாவில், அறுபதுகளில் அந்தப் புரட்சி நிகழ்ந்தது. புரட்சிக்குப் பின் ஒரு புரட்சியாக, தொடர் புரட்சியாக, பழைமையை மாற்றியமைக்கும் பண்பாட்டுப் புரட்சியாக அந்தப் பூகம்ப நிகழ்வு இடம்பெற்றது. அது விளைவித்த பேரனர்த்தம் பயங்கரமானது. நாடு முழுவதுமே ஒரு வன்முறைப் பிரளயத்தில் மூழ்கி எழுந்தது. அந்தப் புரட்சிப் பெருவெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையோ எண்ணிலடங்காது. அது சீனக் கம்யூனிச இயக்கத்தை ஒரு உலுப்பு உலுக்கியது. வேர் அறுந்து வீழ்ந்த விருட்சங்கள் போல கட்சியின் பழம் பெரும் தலைவர்கள் தூக்கி எறியப் பட்டனர். சீன சோசலிச நிர்மாணம் ஒரு இருண்ட யுகத்தினுள் தள்ளப்பட்டது. முன்னோக்கி நகர்ந்து வந்த செஞ்சீனம், இந்தக் காலகட்டத்தில், ஒரு பெரிய பின்நோக்கிய பாய்ச்சலை நிகழ்த்தியது.

இந்த ஊழிக் கூத்தை நடத்தி முடித்தவர் மாவோ. எதற்காக இந்தப் புரட்சியை அவர் கட்டவிழ்த்துவிட்டார்? தான் கட்டி வளர்த்த கட்சியையே அவர் எட்டி உதைத்ததன் காரணமென்ன? தேசிய விடுதலைப் போரில் தோளோடு தோள் நின்ற தோழர்கள் பலரை அவர் இம்சைப்படுத்தியதன் நோக்கமென்ன? பெரும் புயலாக எழுந்து பேரழிவைத் தோற்றுவித்த இந்த அரசியற் கொந்தளிப்பை பண்பாட்டு புரட்சி என வர்ணித்தது ஏன்?

நீண்ட காலமாகவே சோசலிச சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையை எழுப்பிய வினாக்கள் இவை.

'முன்நோக்கிய பெரும் பாய்ச்சல்', 'பண்பாட்டுப் புரட்சி', என்பன மாவோ நிகழ்த்திய சமூகப் பரிசோதனைகள். இந்தப் பரிசோதனைகளின் போது பெரும் தவறுகள் இழைக்கப்பட்டன என்பதும், இவற்றினால்



சீனச் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டது என்பதும் வரலாற்று உண்மைகள். இன்றைய சீனத் தலைமை மாவோவின் இந்தப் பரிசோதனைகளை விமர்சித்தும் கண்டித்தும் இருக்கிறது. ஆனால் மாவோவை நிராகரிக்கவில்லை. நவ சீனத்தின் உருவாக்கத்தில் மாவோவின் பங்கு அளப்பரியது. தேசிய விடுதலையிலும், சமூகப் புரட்சியிலும் அவர் கணிசமான தொண்டாற்றியிருக்கிறார். சீனாவின் சிற்பி என வர்ணிக்கப்பட்ட இந்த மாபெரும் வரலாற்று மனிதர், ஏன் இந்தப் பாரிய தவறுகளை இழைத்தார்?

மாவோவின் இலட்சியங்கள் உன்னதமானவை. ஆனால் அந்த இலட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட அணுகுமுறைகள் தான் தவறானவை என்பது சீன ஆய்வாளர்கள் பலரது கருத்து. அவர் முற்றுமுழுதாக மனித சக்தியைப் பயன்படுத்தி தனது இலக்குகளை அடைய முனைந்தார். ஆனால் இதனை ஒரு ஒழுங்கான முறையில், நடைமுறைச் சாத்தியமான செயற்திட்டத்தின் அடிப்படையில் செய்யவில்லை. இதனால் சீன சமூகம் பெரும் துன்பத்திற்கு ஆளாகியது. பொருண்மிய வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

கலாச்சாரப் புரட்சியை அவர் தொடக்கி வைத்ததற்கும் காரணங்கள் இருக்கத்தான் செய்தன. கொள்கையளவில், இந்தப் பரிசோதனை உரிய நோக்குகளைக் கொண்டிருந்தது. ஆனால் நடைமுறை எதார்த்தம் வேறு. நடைமுறையில் அது பேரழிவைத் தோற்றுவித்தது.

மாவோ ஒரு இலட்சியவாதி. பெரிய கனவுகள் கண்டவர். சீனத்தை ஒரு சோசலிச சுவர்க்கமாக மாற்ற விளைந்தவர். சோவியத் யூனியனின் சோசலிசப் பாதையில் அவர் செல்ல விரும்பவில்லை. அந்தப் பாதை கட்சிச் சர்வாதிகாரத்தைக் கட்டி வளர்த்தது. மக்கள் சனநாயகத்தை மறுத்தது. பொருளுலகிற்கு முதன்மை கொடுத்தது. மனித உறவுகளை மலினப்படுத்தியது. அந்தப் பாதை ஒரு உன்னதமான பொதுவுடமைச் சமூகத்தை நோக்கிச் செல்லவில்லை என மாவோ கருதினார். சீனத்தை ஒரு புதிய பாதையில், ஒரு புதிய யுகத்தை நோக்கி நகர்த்திச் செல்ல அவர் விரும்பினார்.

பொதுவுடமைச் சமுதாய மாற்றம் என்பது ஒரு நீண்ட பயணம். ஒரு தடவை நிகழ்த்தப்படும் சமூகப் புரட்சியுடன் அந்த இலக்கை எட்டிவிட முடியாது. ஒரு புரட்சியுடன் சமூகத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளையும் களைந்துவிட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாது. படிப்படியாகக் கட்டவிழ்ந்து செல்லும் தொடர்ச்சியான புரட்சி மூலமே கம்யூனிச சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனக் கருதினார் மாவோ. இந்தத் தரிசனத்தின் அடிப்படையில் புதிய சமூகப் பரிசோதனைகளை அவர் நிகழ்த்த விரும்பினார். மக்களை விழிப்புறச் செய்து, மனித உறவுகளை மேம்பாடு செய்து, மக்கள் சனநாயகத்தை கட்டி வளர்க்கும் புதுமையான வழிமுறைகளாகவே இந்தப் பரிசோதனைகளை அவர் முன்னெடுத்தார். அவரைப் பொறுத்தவரை, சீனப் பண்பாட்டுப் புரட்சியானது பொதுவுடமைச் சமூகக் கட்டமைப்பை நோக்கிய ஒரு புதிய நகர்வு.

பொருண்மிய கட்டமைப்பை மாற்றியமைத்தால், மனவுலக மாற்றத்திற்கும் அது வழி வகுக்கும் என்ற வைதீக மார்க்சியக் கருத்தை மாவோ ஏற்கவில்லை. பொருளுலகம் கருத்துலகை முற்றாக நிர்ணயிப்பதல்ல. காலம் காலமாக மனவுலகில் வேர்பதிக்கும் கருத்துக்கள், நம்பிக்கைகள் சமூகப் புறநிலை மாற்றத்தால் மறைந்து விடுவதல்ல. கருத்துக்களை மாற்றுவதற்கு கருத்துலகில் ஒரு புரட்சியை நிகழ்த்த வேண்டும். சிந்தனைப் புரட்சி மூலமே பிரக்ஞையை தோற்றுவிக்க முடியும் எனக் கருதினார் மாவோ. சீனாவில் சமூகப் புரட்சி நிகழ்ந்து, பொருண்மியக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டபோதும், மக்கள் மனவுலகில் மாற்றம் நிகழவில்லை. பழமைவாதக் கருத்துக்கள், பிற்போக்கான பார்வைகள், மூடநம்பிக்கைகள் மக்களிடம் செறிந்து காணப்பட்டன. கொன்பியூசியஸின் ஆதிகால அடிமைவாதச் சித்தாந்தம் சீனச் சமூக வாழ்வில் ஆதிக்கம் செலுத்தி நின்றது. இந்தப் பழமைவாத சமூகப் பிரக்ஞையுடன் புதிய சமூக உலகை கட்டி எழுப்புவது கடினம். பொருளியப் புறவளர்ச்சிக்கு ஒத்திசைவாக அக வளர்ச்சியும் ஏற்படவேண்டும். புதிய யுகத்தை நோக்கி முன்னேறும் ஒரு சமூகம், புரட்சிகரமான அறிவியற் பார்வையைக் கொண்டிருக்கவேண்டும். பண்பாட்டுப் புரட்சி மூலம் இந்த நோக்கை அடையலாம் என மாவோ கருதினார்.

சோவியத் யூனியன் போன்று, சீனாவிலும் கட்சிச் சர்வாதிகாரம் விஸ்வரூபப் பரிமாணம் பெறுவதை மாவோ விரும்பவில்லை. மக்களுக்குப் புறம்பாக, மக்களிடமிருந்து அந்நியப்பட்ட சக்தியாக அரச நிர்வாக இயந்திரம் உருவாக்கம் பெறுவதை அவர் விரும்பவில்லை. அது, கட்சிக்கும் மக்களுக்குமிடையே பெரியதொரு முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். இந்த முரண்பாட்டைக் களைவதானால் அதிகார பீடத்திலுள்ள கட்சிக்காரர்களை மக்கள் அரங்கில் இறக்கிவிடவேண்டும். மக்கள் மீது அதிகாரம் புரிவதல்ல, மக்களுக்கு சேவை புரிவதுதான் கட்சியின் இலட்சியம் என்பதை உணர்த்த வேண்டும். இந்த நோக்கிலும் பண்பாட்டுப் புரட்சியை முடுக்கிவிட்டார் மாவோ.

இளைய நெஞ்சங்கள் மிகவும் செழிப்பான நிலம். புரட்சியின் விதைகளை அங்குதான் விதைக்க வேண்டும். இளைஞரிடம் புரட்சியுணர்வு இருக்கிறது. புதுமையைக் காணும் உத்வேகம் இருக்கிறது. துணிவு இருக்கிறது. தூய்மை இருக்கிறது. எந்த ஒரு போராட்டத்திலும் வலுவான சக்தியாக, துணிவாக நின்று போராடுவது இளம் சமூகமே. எனவேதான், இளம்பரம்பரையை அணிதிரட்டி, அவர்களை 'செம்படை' எனப் பெயரிட்டு, அவர்களுக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி, பழமைக்கு எதிராக, பழமையில் புதைந்து கிடக்கும் பழம்பரம்பரைக்கு எதிராக பண்பாட்டுப் புரட்சியை அரங்கேற்றிவைத்தார் மாவோ.

மாவோவின் இலட்சிய நோக்கு உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால், பண்பாட்டுப் புரட்சி இந்த நோக்குகளை நிறைவு செய்யவில்லை. மாறாக, பேரழிவையே விளைவித்தது.

சீனப் பண்பாட்டுப் புரட்சி பற்றி பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மார்க்சிய தத்துவாசிரியர்கள் பலர் மதிப்பாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். பல கோணத்தில் இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வு விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் சீனாவுக்கு வெளியேயிருந்து சீனம்

## ஆயுத விற்பனையை நிறுத்துவதே இனப்பிரச்சினையை தீர்க்க வழி

*ஐரோப்பிய நாடுகள் சிறீலங்கா அரசிற்கு விற்பனை செய்யும் ஆயுதங்களை நிறுத்துவதன் மூலமே இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரமுடியும். இலங்கையில் நடப்பது இனப்பிரச்சினையே அன்றி பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. தமது சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்துவதற்காக பலவிதமான அர்ப்பணிப்புகளிற்கு மத்தியில் போராட்டம் நடைபெற்று வருகிறது.*

*இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாண முடியுமென எண்ணுவது தவறு. நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இவ் உரிமைப் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்துள்ளனர். அதனை இலகுவில் மறந்துவிட்டு கண்களை மூடிக்கொண்டு சமாதானத்தை கட்டிப்பிடிக்க தமிழ் மக்கள் தயார் இல்லை. நீண்டகால பிரச்சினை நிதானத்துடன் அணுகப்படவேண்டியுள்ளது.*

*ஐரோப்பிய நாடுகள் இவ் ஆயுத விநியோகத்தை நிறுத்துமேயானால் இலங்கையில் நடக்கும் இன அழிவுகளை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.*

**இனப்பிரச்சினை தொடர்பாக ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்கில் யாழ்ப்பாண விகார் ஜெனரல் வணபிதா இம்மானுவேல் கலந்துகொண்டிருந்தார். அப்போது ஐரோப்பிய வெளியுறவு அமைச்சுகளின் அதிகாரிகள் சந்திப்பின் போது மேற்கூறிய கருத்தினை முன்வைத்திருந்தார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பற்றிப் பார்க்கப்பட்ட பார்வைகள். உள்ளார்ந்த அனுபவமின்றி நிகழ்த் தப்பட்ட புறநிலை நோக்குகள். ஆனால் சீனாவிலிருந்து, சீன வரலாற்றுத் தரிசனத்துடன் எழுதப் பட்ட நூல்கள் சொற்பம். இந்த வகையில், யுங் சாங் எனப்படும் சீனப் பெண்மணி எழுதியுள்ள 'காட்டு அன்னங்கள்; சீனாவின் மூன்று புதல்விகள்' (WILD SWANS; THREE DAUGHTERS OF CHINA) என்ற நூல், சீனப் பண்பாட்டுப் புரட்சியின் போது நிகழ்ந்த அனர்த் தங்களை, சுய அனுபவப் பார்வை யில்தத்ரூபமாகச் சித்தரிக்க முனை கிறது.

இருபதாம் நூற்றாண்டின் சீன வரலாறு மிகவும் சிக்கலானது. நீண்டது, மிகவும் கொந்தளிப்பானது. ஜப்பானின் ஆதிக்கப்பிடிக்குள் சிதைந்து கிடந்த சீனம், நிமிர்ந்து எழுந்து போராடி, மிகவும் பலம் பொருந்திய பொதுவுடமை சமூக மாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட ஒரு யுக வரலாறு. இப்படியானதொரு நீண்ட, புரட்சி கர நிகழ்வுகளைக் கொண்ட சிக்கலான வரலாற்றுப் பின்புலத்தில் மூன்று பெண்களின் சுயசரிதம் பதியப்படுகிறது. தனது பாட்டி, தனது தாய், தன்னுடையதாக, மூன்று பரம்பரையை உள்ளடக்கி, தனது வாழ்வனுபவத்தை தேசத்தின் அகன்ற வரலாற்றனுபவத்துடன் பின்னிப் பிணைத்து இந்த சுயசரித ஆக்கத்தைப் படைத்திருக்கிறார் நூலாசிரியை.

எழுநூறு பக்கங்களைக் கொண்ட பெரிய நூல். நீண்டதொரு சமூக நாவல் போன்று கதை நகர்த்தப் படுகிறது. சீனச் சமூக வாழ்வும், அதில் இழையோடும் சமூக உறவுகளும், அந்த உறவுகளைத் தாங்கிவரும் பாத்திரங்களும், அந்தப் பாத்திரங்கள் வெளிப்படுத்தும் நுண்ணிய மனவுணர்வுகளும், ஏக்கங் களும் மிகவும் நுட்பமாகச் சித்தரிக் கப்படுகிறது. ஒரு தேசத்தின் வரலாற் றுப் பின்புலத்தில் ஒரு குடும்பத்தின் கதை சொல்லப்படும் பாங்கு சிறப் பாக அமைகிறது.

சீனப் பண்பாட்டுப் புரட்சி இந்த நூலின் மையமாக அமைகிறது.

www.tamilarangam.net

# சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா

குழந்தைகளைச் செல்வங்கள் என்று சொல்லுவது நாங்கள்தான். அன்போடு அருகிருந்து அம்மா நிலா காட்டி, மலையேறி மல்லிகைப்பூ பறித்துவரச் சொல்லி நிலவோடு பேசுவது எங்களின் மண்ணில்தான். மண்ணள்ளித் தின்று மண்ணில் புரண்டு எழும்புகிற குழந்தைகளிடம் தேசம் காக்கும் சிந்தையும் இருக்கும். இந்தச் செல்வங்களின் வாழ்க்கை குண்டு பொழியும், கந்தக நெடில் கலந்த காற்று வீசும் போர்க்கோலம் கொண்ட மண்ணில், புக்காரா அல்லது சியாமாசெட்டி இரைய பதுங்குகுழிக்குள் வாழ்வு தொடங்கும். விழிகள் பிதுங்க குழந்தை அழும். தூக்கத்தைக் கலைத்த சினம் தாளாமல் சிணுங்கும். வீட்டைவிட்டு, வாசலைவிட்டு அகதியாய் திரிகிற போது அவன் மண் அள்ளித் தின்ற முற்றம், அம்மா மல்லிகைப்பூ கொண்டுவரச் சொன்ன நிலவு வந்தெறிக்கின்ற திண்ணை... அடுகிக்கொண்டே போகலாம், அவனை அழவைக்கிற எல்லாவற்றையும்.



பத்து ஆண்டுகளுக்கு மேலாக போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. யாழ். மாவட்டத்தை யுத்தப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி சிறீலங்கா இராணுவம் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கையினால் பெருமளவு அப்பாவி மக்கள் தொழில் இழந்தனர். உழைப்பாளிகளை இழந்து, அன்றாட சீவியத்திற்கு போராடுகின்ற குடும்பங்கள் அனேகம். தமது தேசத்தின் விடுதலைக்காக தோள் கொடுக்கின்ற அதேவேளையில் தமது பொருளாதார வாழ்வுக்காகவும் உழைக்கிறார்கள். இந்த மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கி போசாக்கின்மையால் வாடும் ஆயிரக்கணக்கான சிறுவர்களை தெரிந்து அவர்களுக்கான கல்வி, விளையாட்டு, வைத்திய சேவைகளை வழங்கி, உடல், உள ரீதியில் சமூக பொருத்தப்பாடு உள்ளவர்களாக்கும் திட்டமொன்றினை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் வரைந்து செயல்படுத்தி வருகின்றனர். அதுதான் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவாகும்.

இச் சிறுவர்களுக்கிடையிலான விளையாட்டு விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. சிறுவர் பராமரிப்புப் பூங்காவில் வளர்ந்து வருகின்ற சிறுவர்கள் ஏனைய சிறுவர்களிடம் காணமுடியாத அளவுக்கு தன்னம்பிக்கையுடன், மறைந்திருக்கும் ஆற்றல்களை பல்துறையிலும் மிகச்சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்தக் கலாச்சாரக் கிளர்ச்சி விளைவித்த அனர்த்தங்களையும், அதனால் சீன சமூகம் சந்தித்த அவலங்களையும், உண்மைச் சம்பவங்கள் வாயிலாக மிகவும் உணர்வுபூர்வமாக வரைந்துகாட்டு கிறார் யுங் சாங்.

காட்டுத்தீ போல பண்பாட்டுப் புரட்சி நாடெங்கும் பரவுகிறது. அதன் தீ நாக்குகள் யுங் சாங்கின் குடும்பத்தையும் தீண்டுகிறது.

நூலாசிரியரின் தந்தை ஒரு கம்யூனிஸ்ட் உயர் அதிகாரி. நீண்ட கடின உழைப்பால் உயர்ந்தவர். கெரில்லா வீரனாக ஆயுதமேந்தி தேசிய விடுதலைக்காக போரிட்டவர். கட்சியின் விசுவாசி. மாவோவை சீனத்தின் கடவுளாக வரித்துக்கொண்டவர். தாயாரும் ஒரு புரட்சிவாதி. கட்சிப் பிரமுகர். யுங் சாங்கின் குடும்பம் ஒரு கம்யூனிஸ்ட் குடும்பம்.

கம்யூனிஸ்ட் உயர் அதிகாரிகளையும் பண்பாட்டுப் புரட்சி விட்டு வைக்கவில்லை. யுங் சாங்கின் பெற்றோர்கள் மீது 'எதிர்ப் புரட்சியாளர்' என்ற குற்றம் சுமத்தப்படுகிறது. முதலில் தந்தையும், பின் தாயாரும் கைதாகின்றனர்.

இரகசிய விசாரணைகளில் இழிவுபடுத்தப்பட்டு, கண்டனக் கூட்டங்களில் அவமதிக்கப்பட்டு, தடுப்பு முகாம்களில் வதைபட்டு, பெற்றோர்கள் கொடுமைக்கு ஆளாக யுங் சாங்கின் குடும்பம் சிதைகிறது. தாய் மனமுடைந்து நோயாளியாக, தந்தைக்குப் பைத்தியம் பிடிக்கிறது. இந்த அவலமான சூழ்நிலையில் செம்படையில் சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார் யுங் சாங். இந்த இளைஞர் பட்டாளம் நிகழ்த்திய அனர்த்தங்கள் அவரைத் திகைக்க வைக்கிறது. தனிப்பட்ட சோகமும், சமூகத்தின் அவலமும், தன்னைச் சூழ நிகழ்ந்துகொண்டிருக்கும் அராஜகமும்- எல்லாமே அபத்தமாக, அர்த்தமற்ற கேலிக்கூத்தாக அவருக்குத் தென்பட்டது.

கட்டுக்கடங்காத காட்டாறு போல சீற்றம்கொண்டு பாய்ந்த புரட்சி வெள்ளம் நாடெங்கும் பேரழிவை ஏற்படுத்தியது. இலக்கற்ற, நோக்கற்ற இளைஞர் வன்முறையால் எத்தனையோ அப்பாவிகள் பழிவாங்கப்படுகின்றனர். யுங் சாங்கின் கண்முன்னே இந்தக் கொடுமை நடக்கிறது. பழமைவாதிகள் என்றும், துரோகிகள் என்றும், எதிர்ப் புரட்சியாளர் என்றும், முதலாளித்துவப் போக்காளர் என்றும், பிற்போக்குப் புத்திஜீவிகள் என்றும், பலர் வேட்டையாடப்பட்டு இம்சைப்படுத்தப்பட்ட சோக நிகழ்வுகளை அவர் மிகவும் உருக்கமாக எழுதுகிறார்.

www.tamilarangam.net

பண்பாட்டுப் புரட்சி, மனிதர்களை மட்டுமன்றி உடைமைகளையும் விட்டுவைக்கவில்லை. நூல்கள், சிற்பங்கள், ஓவியங்கள், அரும் பழம்பொருட்கள் என்ற வகையில் பழைமையைச் சித்தரித்த பண்பாட்டுச் சின்னங்கள் அனைத்துமே நாசமாக்கப்பட்டன. கலையம்சம் பொருந்திய பல புராதனக் கட்டிடங்கள் கூட இடித்துத் தகர்க்கப்பட்டன. மார்க்சிய நூல்கள், மாவோவின் எழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய படைப்புக்கள், பழம்பெரும் இலக்கியங்கள், தத்துவங்கள், சாஸ்திரங்கள், மேலைநாட்டு நூல்கள் எல்லாமே பண்பாட்டுப் புரட்சித் தீயில் பொசுக்கப்பட்டதாக கூறுகிறார் நூலாசிரியை. புத்தகங்கள் மலை மலையாக குவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட கோரக் காட்சிகள் யுங் சாங்கின் ஆன்மாவைச் சுட்டு விடுகிறது. பண்பாட்டுப் புரட்சி, சீனக் கலாச்சாரப் பொக்கிஷங்களையே அழித்துவிட்டதாக அவர் மனம்வெந்து எழுதுகிறார். இந்தக் கோரத் தாண்டவத்தை நிகழ்த்திய சீனத்தலைமை மீது அவருக்கு கோபாவேசம் பொங்குகிறது. மாவோ மீது முழுப் பழியையும் சுமத்துகிறார்.

பண்பாட்டுப் புரட்சியை தொடக்கிவைத்தவர் மாவோ. அதனை இயக்கி வைத்தவரும் அவரே. எனவே இந்தப் புரட்சியால் நிகழ்ந்த அராஜகம் அனைத்திற்கும் அவரே பொறுப்பாளர் ஆவார். மாவோ சாதிக்க விரும்பியது வேறு. அந்த நிகழ்வுகளை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. மிகவும் கட்டுப்பாடான கட்சி அமைப்பிற்கு எதிராக, கட்டுப்பாடற்ற இளைஞர் சேனையை கட்டவிழ்த்து விட்டது அவர் புரிந்த மாபெரும் வரலாற்றுத் தவறு. கடிவாளம் அறுந்த குதிரை போல திசைமாறி ஓடியது செம்படை. அதனை நெறிப்படுத்த அவரால் முடியவில்லை. பழைமைவாதச் சிந்தனையைக் களைந்தெறிய மாவோ விரும்பினார் என்பது உண்மை. ஆனால் நூல்களை எரிக்கவோ, அன்றிப் பழைய பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கவோ அவர் உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆனால் செம்படையோ, மாவோவின் பிரகடனங்களை தவறாகப் புரிந்துகொண்டு, தான் தோன்றித் தனமாக நடந்துகொண்டது. ஆயினும் அணைகளைக் கட்டாமல் வெள்ளத்தை ஓட விட்டது மாவோ இழைத்த தவறு.

சீன சோசலிச நிர்மாணம் பற்றிய ஒரு பரந்த, தெளிந்த பார்வையுடன் யுங் சாங் இந்த நூலைப் படைக்கவில்லை. அவர் தனது குடும்பத்தின் சுவர்களுக்குள் நின்று தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எழுதுகிறார். அந்த எழுத்தில் ஒருபுறம் ஆழமான சோகமும், மறுபுறம் வக்கிரமான கோபமும் தொனிக்கிறது. துயரம் தோய்ந்த வாழ்வனுபவமும், கனவுகள் உடைந்த விரக்தியும் அவருக்கு கம்யூனிசத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகிறது. அந்தக் கசப்புணர்வு சீன சமூகம் மீது திரும்புகிறது. செஞ்சீனத்தின் முகம் அவருக்கு அசிங்கமாகத் தென்படுகிறது. போராலும், புரட்சியாலும், கொந்தளிப்பான அரசியலாலும் சீர்குலைந்த ஒரு சமுதாயமாக அவர் சீனத்தைக் காண்கிறார். இந்தப் பார்வையின் அடிப்படையில், சீன வரலாற்றை ஒரு நீண்ட, முடிவில்லாத துன்பியல் நாடகமாக அவர் சித்தரிக்க முனைகிறார்.

ஆன்மாவை இழந்த மனிதர்களாக, எதற்கும் பணிந்துகொடுக்கும் பொம்மைகளாக, சீன விவசாயிகளை அவர் விபரிக்கின்றார். இது மிகவும் தவறான கணிப்பு. ஒரு அபத்தமான பார்வை. சீன விவசாய வர்க்கமானது நவசீனத்தின் முதுகெலும்பு. ஜப்பானிய ஆதிக்கத்திற்கு எதிராக,

சீன பிரபுத்துவக் கொடுமைக்கு எதிராக, தேச விடுதலை வேண்டிப் போரிட்ட மாபெரும் மக்கள் சக்தியை யுங் சாங் இழிவுபடுத்த முயல்வது அவரது முதிர்ச்சியற்ற பார்வையை எடுத்துக் காட்டுகிறது. நகரப்புற வாழ்வும், உயரதிகார வர்க்கப் பின்னணியும் இப்படியானதொரு திட்சண்யமற்ற நோக்கிற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

சீனாவை ஒரு நரகமாகவும், மேற்குலகை ஒரு சுவர்க்கமாகவும் அவர் வர்ணிக்கிறார். மேற்குலகில் அழகான ஆடைகள் இருக்கின்றன, பார்த்து ரசிக்கப் பூக்கள் இருக்கின்றன, பொழுதுபோக்கிற்கு களியாட்டங்கள் இருக்கின்றன என்றெல்லாம் சிறுபிள்ளைத்தனமாக எழுதுகிறார். மேற்குலக நாகரிகம் உயர்ந்தது என்று சொல்லுகிறார். மேற்குலகில் பண்பு இருக்கின்றது, அன்பு இருக்கின்றது, காருண்ணியம் இருக்கின்றது, வன்முறை அகன்ற மென்முறை இருக்கிறது, அமைதி இருக்கிறது, வர்க்க வேறுபாடற்ற சகோதரத்துவம் இருக்கிறது என்றெல்லாம் அவர் எழுதுவதைப் பார்க்கும்பொழுது வேடிக்கையாக இருக்கிறது. மேற்குலகில் நிலவும் சமூக முரண்பாடுகளையும், சீர்கேடுகளையும், வன்முறைகளையும் அவர் கண்டுகொள்ளாதது வியப்பாக இருக்கிறது. அத்துடன் உலக காலனித்துவ வரலாற்றையும், இந்த நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றையும் அவர் செம்மையாகப் படிக்கவில்லை எனத் தோன்றுகின்றது. சீனம் ஒரு பெரிய பூதம், மஞ்சள் பூதம், ஆபத்தான பூதம், அதனை நிரந்தரத் தூக்கத்தில் வைத்திருப்பது அவசியமென மேற்குலகம் சீன மக்களிடையே அபின் போதையை ஊக்குவித்த வரலாற்று நிகழ்வுகள் எதுவும் அவருக்கு தெரியாதுபோல. குருட்டுத்தனமான மேற்குலக மோகம், நாட்டுப் பற்றை அவரிடம் மழுங்கடித்துவிட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே அவர் நாட்டைவிட்டு ஓடி லண்டனில் தஞ்சம் புகுந்திருக்கிறார். நாடு பெயர்ந்திருக்கும் அவருக்கு லண்டன் சுவர்க்கமாகத் தெரிகிறது போலும். அவரது இன்றைய சீமை அனுபவங்கள் எமக்குத் தேவைப்படாது. ஆனால் அவரது அன்றைய சீன அனுபவங்கள் எமக்குப் பயன்தரக்கூடியது.

www.tamilarangam.net

மக்களிடமிருந்து பல கேள்விகள் எழுகின்றன. இத்தகைய கேள்விகள் அவர்களிடம் எழுந்து சிலவேளைகளில் பதிலின்றிப் போகின்றது. அவர்களுடனான சந்திப்புக்களின் போதும் உரையாடல்களின் போதும் இது குறித்த பகுதி ஒன்றினை எரிமலையில் ஆரம்பிக்க எண்ணியிருந்தோம். எரிமலை வாசகர்கள் பலரிடமிருந்தும் இப்பகுதியை ஆரம்பிக்குமாறு கேட்டு கடிதங்கள் வந்திருந்தன. அதனடிப்படையில் இப்பகுதியை ஆரம்பிக்கின்றோம். இந்தப் பகுதிக்கு உங்களிடம் எழும் கேள்விகளை எழுதுங்கள்.

# கேள்வி - பதில்

மாறன் - பாரிஸ்

⊛ எரிமலையில் வெளிவந்த சாரணனின் 'சந்திரிகாவின் புதிய தொப்பியும் பழைய சப்பாத்தும்' என்ற கட்டுரை படித்தேன். இனப்பிரச்சினைக்கான தீர்வில் புதிய தொப்பியும் சரி பழைய சப்பாத்தும் சரி இரண்டும் பாதகமானதாகவே இருக்கும் என கருதுகிறேன். இது குறித்து நீங்கள் கருதுவது என்ன ?

● விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை சமாதான ரீதியாகத் தீர்த்தல் என்பதே புதிய தொப்பியின் செயல்பாடு எனில் பாதகமில்லை. புதிய தொப்பிக்குள் இருந்தும் பாதகமான விடயங்கள் வரலாம் என்பதும் மறுப்பதற்கில்லை.

இளங்கோ - பாரிஸ்

⊛ சீதன தடைச் சட்டம் சாத்தியமாகுமா ?

● சீதன தடைச்சட்டம் அவசியம்தான். இது ஒரு நீண்டகாலப் பிரச்சினை. இதனைச் சட்டத்தால் மட்டும் அகற்றமுடியாது. மக்களிடையே மனமாற்றம் ஏற்படுவதும் அவசியம்.

பாலச்சந்திரன் - இவ்ரி, பிரான்ஸ்

⊛ உங்களோடு சேர்ந்து வேலைசெய்ய விருப்பம். வேலைகள், பிற கஸ்டங்கள் இவை துன்பமாக இருக்கின்றன. இதற்கூடாக எப்படி உழைக்கலாம் என்பது கேள்வியாகவே இருக்கிறது ?

● தங்கள் ஆர்வமே முக்கியம். தாங்கள் புரிகின்ற கடின உழைப்போடு, தேசவிடுதலையையும் அத்தோடு இணைந்த தங்கள் விடுதலையையும் கருத்தில்கொண்டு, தங்கள் தகுதிக்கும், வசதிக்கும் ஏற்றவாறு, ஒரு சிறு பங்களிப்பையாவது மனம் உவந்து செய்தல் கடமை என்றாகிறது. இதனை ஆற்றுவதற்குரிய வழியைத் தேடுதலும், வாழ்க்கைக்கும், விடுதலைக்குமான போராட்டத்தின் ஒரு அம்சமாகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஹங்கேரிய நாட்டு கவிஞன் சாந்தோர் பெட்டோவ்ஃபி



நாட்டு விடுதலைக்காக அனைத்தையும் தியாகம் செய்ய உந்தும் கவிதைகளை எழுதி சீனத்தில் மட்டும் இன்றி உலகனைத்திலும் விடுதலை வீரர்களின் உளத்தில் கனலைத்தூண்டிய வீராவேசக் கவி சாந்தோர் பெட்டோவ்ஃபி, புரட்சிக் கவிஞர்களின் ஆதர்சக் கவி.

சரியாக ஜனவரி 1ம் திகதியன்று 1823ம் ஆண்டு ஹங்கேரிய நாட்டில் ஒரு சிறுகைப்பணியாளனின் மகனாகத் தோன்றிய பெட்டோவ்ஃபியின் ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களை உலகமெங்கும் 1973ல் ஐ. நாவின் கிளையான ஐ. நா. கலாச்சார நிறுவனம் (UNESCO) கொண்டாடியது. உலகக் கவிஞனாகிய அவன் தனது நாடு அன்னியர் ஆட்சிக்குட்பட்டு அவதியுற்ற காலத்தில் பேனா ஏந்திய தன் கையால் வாளேந்தவும் தயங்கவில்லை. தனது ஹங்கேரியாம் 'மக்யார்' நாடு ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் மன்னர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போது அன்னியர் ஆட்சியை அகற்றவும் நாட்டிலே முடியரசை ஒழித்து குடியரசை நிலைநாட்டவும் போர்வீரனானான். 1849ல் நடைபெற்ற விடுதலைப் போரில் 26 வயதில் பகைவனின் ஈட்டிக்கு இரையானான்.

பெற்றோர்களின் ஏழ்மை காரணமாக போர்வீரனாகவும், நடிகனாகவும், தொழில் நடத்தவேண்டியிருந்த அவன் சத்திரங்களிலும், சாவடிகளிலும் தங்கி ஊர்சுற்றிய காலத்தே மக்களினூடே பழகிய அனுபவத்தில் கவிதைகள் படைக்கத் தொடங்கினான். காதலையும் வீரத்தையும் பாடிய அவனது கவிதைகள் நாட்டின் விடுதலையை நாடி பாடத் தொடங்கின.

நமது மகாகவி பாரதியாரின் கவிதைகளில் காணும் ஆவேசத்தையும் துடிப்பையும் ஒத்தன அவனது கவிதைகள். மரபுவழி உவமை அணிமுறைகளில் விலகி புது உத்தியில் தனது உள்ளக் குமுறல்களைக் கவிதையாக்கினான். அவை இன்று விடுதலை வேட்கைகொண்ட பல நாட்டினரதும் உள்ளக் கனலைத் தூண்டும் போர்க் கவிதைகளாக விளங்குகின்றன. அவ் உலகக் கவிஞனின் கவிதைகளில் ஒன்றான 'எத்தனை நாள் துயின்றிருப்பாய் என் அருமைத் தாய்நாடே?' என்னும் கவிதையை இங்கே தருகிறோம்.

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

கப்பியதோர் இருள்களைந்து
காலைவெளி மலர்ந்ததென
எப்பொழுதோ சேவல்களும்
எழுப்பியது இன்னொலியும்

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

சின்னஞ்சிறு சிட்டுகளும்
சீர்துயிலும் கழித்தெழுந்து
தன்வயிறு நிறைப்பதற்கு
தாம்செல்லும் வயல்நோக்கி

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

சீரான பயிர்பச்சை
செடிசெத்தை யாவினையும்
ஊராரின் குதிரைகளும்
உன்நிலத்தில் மேய்கிறது

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

உன்னண்டை வயற்காரன்
உன்வயலில் உள்நுழைந்து
தன்னெல்லை விரிப்பதனை
தானறிந்தும் தூங்குவதோ?

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

அழகுநிறை 'மக்யா'ராம்
அருமைமணித் திருநாடே
அடுத்தவொரு யுகமதில்தான்
அறிதுயிலும் எழுவாயோ?

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

கதிரவனும் புலர்ந்திட்டான்
கடுங்கதிர்கள் உன்னுறக்க
மதியுள்ளே ஊடுருவி
வலிவுணர்வு ஊட்டாதோ?

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

பூனையதன் குட்டியுடன்
பொழுதெழுந்து உந்தன்பாற்
பானையதைச் சுற்றிவந்து
படுத்தமர்ந்து கால் நக்கும்

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

முந்திரியுன் தோட்டமதில்
முயலாது ஊழியனும்
தந்திரமாய்க் களஞ்சியத்தில்
தான் நுழைந்து குடிக்கின்றான்

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே?

வீடுபற்றி எரியும்வரை
வீண்துயில் நீ போக்குவையோ?
பீடுமணி எச்சரித்தும்
பெருந்துயிலில் மூழ்குவையோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்று கவிதைகள்

## "நெருப்புத் தாலாட்டில் நீ பிறப்பாய்"

இருண்ட தேசத்தில்
அடிமை நுகர்தடியின் கீழிருந்து
இடறுகட்டைகளில்
இடர்பட்டு இருப்பிடம் தேடும்
மக்கள் விடுதலைபெற
மீட்பரின் வருகையை
'கபிரியேல்' தூதன்
இன்னிசை முழங்க
"வால்" வெள்ளிச்சிரிப்போடு
உலகுக்கு உரைத்தார்!

பதுங்கு குழிக்குள்
நொந்தும் மெலிந்தும்
குமுறியும் கலங்கியும்
பதறிடும் பட்டினியிலும்
விடுதலை வேள்வியின்
பெருமூச்சுக்களின்..
நெருப்புத் தாலாட்டில்
மீட்பரே நீ! பிறப்பாய்!
உன் பிறப்பு....
அடிமைப்படுத்தும்
ஆட்சியின் தலையில்
அக்கினியைக் கொட்டும்.
பலநாள் விலங்கு
உடைக்கப்படும்...
பகைவர் நடுங்கவும்
விடுதலை மீட்பர்
வீரமாய் எழுவார்.
அடிமை இருளகலும்
புதியஒளி புத்துயிர்க்கும்

கொலைஞன் 'ஏரோது'
கொதித்து மாய்வான்
பிணந்தின்னும் பேய்கள்
வேட்டையைத் தொடங்கும்
மீட்பரே நீயோ!...
அடர்ந்த காட்டிற்குள்
பனங்கூடலுக்குள்.....
புதிய பரணியின் தாலாட்டில்
தவழ்ந்து நடந்து
மலையாய் நிமிர்வாய்.
ஏரோதிற்குப் பயந்து
உரோமானியப் படைகளின்
எச்சங்களுக்குப் பதுங்கி
பல்லாயிரம் குடும்பங்கள்
எகிப்திற்குத் தப்பியோடும்.
மலர்ந்த பூக்களின்
மரணம் சாசனமாகும்!
கண்ணில் படும் குழந்தைகளின்
தலைக்குவியலும் இரத்தமும்
ஆகமவீதியெங்கும் ஓடும்.
இரத்தக்கறை படிந்த கத்திகளை
இடுப்பில் இட்டபடி
"பேய்கள்" பறக்கும்...

மீட்பரே உன்னை அண்டமுடியாத
"அலர்ச்சியில்" - தொற்று நோயில்
கொலைஞன் ஏரோது மடிவான்.
தலைவிரித்தாடும் கொடுமையை
எதிர்த்து மண்ணின் மைந்தர்
களத்தில் நிற்பார்...
மீட்பரின் வழிநடத்தலில்.

வாழ்வைத் தொலைத்து
தேசம் தாண்டியவர்களும்
கண்விழிப்பார்கள்?
சூரியத் தலைவன் வழிநடத்தலில்
மீட்புநாள் நெருங்கிவிட்டது.
புதிய சமுதாயத்தை
இருளிலிருந்து ஒளிக்கு
கொண்டு செல்லவும்
"புதிய ஒளிச்சுடர்"
தமிழீழத்தின் இருளகற்றும்!

-கி. கிறிஸ்ரியன் - பாரிஸ்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காற்றே கூவியெழு!

கூவியெழும் காற்றும்
குமுறுகின்ற பேரிடியும்
எரியும் பெருநெருப்பும்
எழுகின்ற பேரலையும்
ஆளுமையின் கருவில் துளிர்க்கும்
அக்கினிப் பிரசவங்களைக்கண்டு
மௌனமாய் சிலிர்த்துக்கொள்ளும்

ஏரியை கடலை
எழுந்திடும் சமுத்திரத்தைத் தாண்டி
எதிரிகளின் தீச்சட்டிகளையும்
எதிர்கொண்டு மார்தட்டி
சிவப்பாக்கிப் போன எங்கள்
தேச விடுதலைக்கு வலிய
தோளோடு எதிர்கொள்ளும்
ஈழத்தாய் பெற்றெடுத்த
இணையில்லா முத்துக்கள்!

கோர அரசின்
கொடுவினைக்குள் கொடுவாள்
மறைத்திட்ட குள்ளநரியின்
சூரத்தனத்தைப் பொடியாக்கி
சுகந்தம் விளைவித்த
செம்மலர்களின்
வாசம் மிகுந்த வரலாறுகள்

சுதந்திரக்காற்றை நேசிக்க
சுயநலம் மறந்து களம்புகுந்து
நெருப்பாற்றைக் கடந்து
நீசர்களை வென்றிட்ட மண்ணில்
நேசம்கொண்ட மைந்தர்களின்
நீள்துயில் காவியங்கள்

போர் என்று படை கொண்டு
எல்லைக்குள் நுழைந்திட்ட
புல்லர்கள் எண்ணத்தை புழுதியாக்கி
மார்போடு குண்டேந்தி
மாவீரர்களாய் நின்று
மண்மீது ஒளிவீசும்
மரகதங்கள்

பூநகர் மண்ணினை
புழுதிமேடாக்கிடப் புறப்பட்ட
எதிரிகள் தலையடக்கி தமிழ்
மாநகர் வீதியில்
மக்களின் இதயத்தில்
மாவீரராய் நிற்கின்ற வேங்கைகளே!

சந்தன மலர்களே!
சாகவில்லை நீங்கள்
சரித்திரமாய் உறங்குகின்றீர் ஈழமண்ணில்
சென்றதோ ஓராண்டு
உங்கள் இலட்சியங்கள் மண்ணில்
திடமாக மீண்டிங்கே எழுச்சிகொள்ளும்

- வேணுகோபாலன் - ஜேர்மனி -

# தேசிய கீதம்

நான்,
பிறந்த தேசத்தின்
தேசிய கீதம்
சுவாசிக்க முடியாத
விசக்காற்றுப் போலானபோது

சுத்திகரிக்கும்
சக்தியின்றி
பயந்தோடி
பயணியாகி
பறந்துவந்தேன்.

ஒரு பருவம்
கடந்த பின்னால்
என் உருவம் சேரும் திடல்
மனம் நிறைகிறது

இன்னும் ஒரு சொந்த தேசம்...
ஆனால், இன்று
நம் தேசிய கீதம்
இயற்றப்பட்டுவிட்டது.

விடுதலைப் போரில்
வீரம் விதைத்து
கல்லறையில் முளைத்த
மாவீரர்கள் இயற்றிவைத்த
தேசியகீதம் இதுவே.

அக்காமாரே! அண்ணாமாரே!
தங்கைமாரே! தம்பிமாரே!
தமிழீழம் எங்கள் தேசம்
தமிழீழம் எங்கள் தேசம்

வெண் முகில்கள்
என்றும்
மண்ணைத் தொடுவதில்லை
மலையைத் தவிர.
அவை வெறும் முகில்கள்.

கார்முகில்கள்
கண்டிப்பாய்
தரையிறங்கும்
புதுப்புலனாய்
உயிர் விதைக்கும்

- சிவபுத்திரன் - சுவிஸ் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

(24ம், 25ம் பக்கத்
தொடர்ச்சி)


www.tamilarangam.net

தென் ஆபிரிக்கா

கனடா





ஜேர்மனி

நோர்வே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ தேசியக் கொடி



**ஐந்நூறு ஆண்டு காலத்திற்கு மேலாக அந்நியர்களாலும் அயல்நாட்டுச் சிங்களவர்களாலும் அடிமைப்பட்டுக் கிடந்த ஈழத் தமிழினத்தை ஆயுதப் போராட்டப் பாதையில் வழிநடத்த முன்வந்த எமது தலைவன் அன்று புலியை தேசிய விடுதலை இயக்கச் சின்னமாகத் தேர்ந்தெடுத்தது மிகவும் மதிநுட்பம் வாய்ந்த ஒரு முடிவு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு.**

தேசிய சுதந்திரத்தை வேண்டி நிற்கும் ஒரு மக்கள் சமுதாயத்திற்கு ஒரு தேசியக்கொடி இன்றியமையாதது. தேசிய தனித்துவத்தையும், ஒருமைப்பாட்டையும், இறைமையையும் ஒரு தேசியக்கொடி சித்தரித்துக்காட்டுகிறது. தேசாபிமானத்தின் சின்னமாகவும் அது திகழ்கிறது. அரசியல் சுதந்திரத்தின் ஆணிவேரான குறியீடாகவும் தேசியக்கொடி அமைகிறது.

தேசிய விடுதலையை இலட்சியமாகக்கொண்டு போராடி வரும் தமிழீழ மக்களுக்கு ஒரு தேசியக் கொடி உண்டு. இரண்டாவது மாவீரர் நாளன்று (27.11.1990) புலிக்கொடி தேசியக்கொடியாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

எமது தேசியக்கொடியை சித்தரித்து நிற்கும் புலிச்சின்னம் எப்படித் தோற்றம் கொண்டது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? அந்தக் குறியீட்டின் அர்த்த பரிமாணங்கள் என்ன? என்பதைப் பிரகடனப்படுத்துகிறோம்.

சரியாகப் 19 ஆண்டுகளுக்கு முன்னர், 1972ம் ஆண்டு எமது தேசியத் தலைவர் பிரபாகரன் தமிழீழ சுதந்திர இயக்கத்திற்கு அத்திவாரமிட்டார். அன்று அவர் ஆரம்பித்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்திற்கு 'தமிழ்ப் புதிய புலிகள்' எனப் பெயரிட்டார். பின்னர் 1976ம் ஆண்டில் 'தமிழ்ப் புதிய புலிகள்' என்ற எமது அமைப்பு 'தமிழீழ விடுதலைப் புலிகள்' எனத் தலைவரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து தமிழீழ தேசத்தின் தனித்துவத்தையும், தமிழீழ விடுதலை இலட்சியத்தையும் சித்தரிக்கும் சின்னமாக புலிச் சின்னம் விளங்கியது.

புலிச் சின்னத்தை தமிழீழத்தின் தேசிய சின்னமாக பிரபாகரன் தேர்ந்தெடுத்ததற்கு காரணமுண்டு. புலிச் சின்னம் திராவிடர் நாகரிகத்தில் வேரூன்றி நிற்கும் ஒரு படிமம். தமிழரின் வீர வரலாற்றையும், தேசிய எழுச்சியையும் சித்தரித்துக்காட்டும் குறியீடு. வலிமையையும், வீரத்தையும், தன்னம்பிக்கையையும் குறித்துக்காட்டும் சின்னம். அன்று வீரவரலாறு படைத்த சோழ மன்னர்களும் புலிக்கொடியின் கீழ் தமிழனை எழுச்சிகொள்ளச் செய்தனர். தமிழுணர்வை, இன உணர்வை, தேசியப்பற்றுணர்வை, பகைவனுக்கு அஞ்சாத வீரஉணர்வை, பிரதிபலிக்கும் ஆழமான, அற்புதமான குறியீடாகத் திகழ்கிறது புலிச் சின்னம்.

ஐந்நூறு ஆண்டு காலத்திற்கு மேலாக அந்நியர்களாலும் அயல் நாட்டுச் சிங்களவர்களாலும் அடிமைப்பட்டுக் கிடந்த ஈழத் தமிழினத்தை ஆயுதப் போராட்டப் பாதையில் வழிநடத்த முன்வந்த எமது தலைவன் அன்று புலியை தேசிய விடுதலை இயக்கச் சின்னமாகத் தேர்ந்தெடுத்தது மிகவும் மதிநுட்பம் வாய்ந்த ஒரு முடிவு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு.

புலிச்சின்னம் தேசிய சின்னமாக மக்களின் உணர்வுகளில் ஆழமாகப் பதிந்தது. செத்துப்போய்க் கிடந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய ஆன்மா புத்துயிர் பெற்றது. இன்று எமது தேசியக் கொடியாகிய புலிக்கொடியின் கீழ் தமிழீழ தேசிய இனம் ஒன்றுபட்டு நிற்கிறது; எழுச்சிகொண்டு நிற்கிறது.

எமது தலைவர் பிரபாகரன் தாம் உருவாக்கிய விடுதலை இயக்கத்திற்கு புலிகள் என்ற பெயரை தேர்ந்தெடுத்ததற்கு இன்னுமொரு காரணமும் உண்டு.

நீண்டகால அடிமைத்தனத்தில் ஊறிப்போன ஒரு சிறிய இனம் ஒரு பெரிய தேசிய இனத்தின் நவீனமான, பலம்மிக்க ஆயுதப்படைகளை

> தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை. தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுய நிர்ணய) உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து, தன்னாட்சி உரிமையை நிலை நாட்டுவதற்காக தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக்கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது.

எதிர்த்துப் போராடுவது எப்படி? இராணுவப் பலம்மிக்க ஒரு அரசுக்கு எதிராக ஆயுதப்போராட்டத்தை வெற்றிப்பாதையில் முன்னெடுத்துச் செல்வதாயின் சிறப்பான, விசேடமான போர்க்குணங்களைக் கொண்ட ஒரு விடுதலைப் படை உருவாக்கப்படவேண்டும். அபாரமான துணிவும், சாவுக்கும் அஞ்சாத வீரமும், விடுதலை வேட்கையும் கொண்ட வீரர்களை உருவாக்க வேண்டும். மனித வேங்கைகளை உருவாக்க வேண்டும். புலிபோல வேகத்துடனும், மூர்க்கத்துடனும் போராடும் தலைசிறந்த வீரர்களை உருவாக்கவேண்டும். இந்த நோக்கில்தான் புலிப்படையை கட்டி எழுப்பினார் பிரபாகரன். பிரபாகரனின் புலிப்படை இன்று உலகின் தலைசிறந்த விடுதலை இராணுவமாகப் போற்றப்படுகிறது.

இன்று எமது தேசியக்கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் புலிச்சின்னத்தின் உருவப்படம் பிரபாகரனின் கருத்திற்கு அமையவே வரையப்பட்டது. பிரபாகரனின் நண்பரும் மதுரையைச் சேர்ந்த பிரபல ஓவியருமான நடராஜன் என்பவர் 1977ம் ஆண்டு புலிச்சின்னத்தின் உருவப்படத்தை வரைந்தார். பிரபாகரனின் யோசனைக்கமைய பல தடவைகள் வரைந்து, இறுதியில் எமது தலைவரின் எண்ணப்படம் புலிச்சின்னமாக உருவகம் பெற்றது. இந்தப் புலிச்சின்னம் இன்று எமது தேசியக்கொடியை அலங்கரிக்கின்றது. சுதந்திரத் தமிழீழத்தின் தேசியக்கொடியாகவும் ஒருநாள் உயர்த்தப்படவிருக்கும் இக்கொடியில் சித்தரிக்கப்பட்டுள்ள அர்த்தங்களை இனிப் பார்ப்போம்.

எமது தேசியக் கொடியை மூன்று நிறங்கள் அலங்கரிக்கின்றன. மஞ்சள், சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள்.

தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை. தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுயநிர்ணய) உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து, தன்னாட்சி உரிமையை நிலைநாட்டுவதற்காக தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது.

தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்துவிட்டாற் போல் நாம் முழுமையாக விடுதலை பெற்றதாகக் கொள்ளமுடியாது. தமிழீழ சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். வர்க்க, சாதிய முரண்பாடுகள் அகற்றப்படவேண்டும். பெண் அடிமைத்தனம் நீக்கப்படவேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். சமத்துவமும், சமதர்மமும், சமூக நீதியும் நிலை நாட்டப்படவேண்டும். இப்படியான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி எமது அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது.

விடுதலைப் பாதை கரடுமுரடானது. சாவும், அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக்கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும். அசைக்கமுடியாத நம்பிக்கை வேண்டும். என்றும் தளராத உறுதி வேண்டும். கறுப்பு நிறம் மக்களின் மன உறுதியைக் குறித்துக் காட்டுகிறது.

தேசியக்கொடியின் மையத்தில் புலிச்சின்னம் அமையப் பெற்றிருக்கிறது. ஆவேசத்துடன் பாயும் புலியை குறிப்பதாக புலியின் தலையும், முன்னங் கால்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன. புலிச்சின்னத்தின் அர்த்தம் பற்றி மேலே விளக்கியிருந்தோம். தமிழ்த் தேசாபிமான எழுச்சியை மட்டுமன்றி வலிமையையும், வீராவேசத்தையும் புலிச்சின்னம் குறித்து நிற்கிறது. பாயும் புலியை ஒத்த எமது விடுதலைப் போரையும் அது சித்தரிக்கிறது. புலித்தலையை சுற்றி வட்டமாக ரவைகளும், இரு புறத்திலும் கத்திமுனையுடைய துப்பாக்கிகளும் எமது ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்தைக் குறியீடு செய்கின்றன.

ஒட்டு மொத்தத்தில், எமது தேசியக்கொடி, சுதந்திரத்தையும் சமதர்மத்தையும் வேண்டி நாம் நடாத்தும் வீர விடுதலைப் போரை அற்புதமாகச் சித்தரிக்கிறது. தமிழரின் வீர மரபில் வேரூன்றி நின்று பிறப்பிக்கப்போகும் தமிழீழத் தனியரசின் குறியீட்டு வடிவமாகவும் எமது தேசியக்கொடி திகழ்கிறது.

**நன்றி:**
**விடுதலைப் புலிகள் (மாசி – பங்குனி 1991)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்திசையை பார்க்கிறேன் என் சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்கிறது




**"ஆக்கிரமிப்பாளர்களை வென்று பிரதேச சாதிய எல்லைகளைக் கடந்து சீதன அரக்கனை வென்று பெண் அடக்குமுறையைத் தகர்த்து தமிழீழ தேசம் உருவாகிக் கொண்டிருக்கிறது"**

**திராவிடர் கழகத்தின் பொன்விழா மாநாட்டில் கலந்துகொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழக மக்கள் மத்தியில் பழ. நெடுமாறன் ஆற்றிய எழுச்சி உரையிலிருந்து...**

திராவிடர் கழகத்தின் இந்தப் பொன்விழாவிலே, பெரியாரோடு ஆரம்பகாலம் முதல், அவர் இட்ட ஆணைகளையெல்லாம் சிரமேற்கொண்டு, அதற்காகப் பல்வேறு கஷ்ட நஷ்டங்களையெல்லாம் அனுபவித்த பெருந்தொண்டர்கள் இங்கே இருக்கிறீர்கள். 50 ஆண்டுகால திராவிடர் கழகத்தின் சாதனை என்ன என்பதை இங்கு நடைபெற்ற கருத்தரங்கிலே பல நண்பர்கள் தெளிவாக உங்களுக்குச் சொன்னார்கள். ஆகையால் நீங்கள் பெருமைப்படலாம். உங்களுடைய தியாகம் வீண்போகவில்லை; உங்களுடைய தொண்டு வீண்போகவில்லை என்று நீங்கள் பெருமைப்படலாம். அதைவிடப் பெரிய பெருமை இன்னொன்று உங்களுக்கு உண்டு. அதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தந்தை பெரியாரின் காலடி படாத தமிழீழ மண்ணிலே, பெரியார் என்னென்ன கனவு கண்டாரோ, அந்தக் கனவுகள் எல்லாம் அருமைத் தம்பி பிரபாகரன் தலைமையிலே நனவாகிக்கொண்டிருக்கின்றன. அதைக்கண்டு நீங்கள் பெருமைப்படலாம். தந்தை பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் பெண்களுக்காகப் போராடினார். தமிழ்நாட்டில் பெண்அடிமைத்தனம் உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில், பெண் உரிமைக்காக தந்தை பெரியார் அவர்கள் அதை எதிர்த்துப் போராடினார்; முழங்கினார். அந்தப் பெண் அடிமைத்தனம் என்பது, அவர் வாழ்ந்த நம்முடைய மண்ணைவிட்டு, முழுமையாக அகன்றுவிடவில்லை. உசிலம்பட்டி போன்ற பகுதிகளில் பெண் குழந்தை பிறந்தால், கொன்றுவிடும் கொடுமைகள் இன்றும் நாம் பார்க்கிறோம். ஆனால், தந்தை பெரியார் பெண்கள் எப்படி இருக்கவேண்டும் என்று விரும்பினார்களோ அது இன்றைக்கு தம்பி பிரபாகரன் தலைமையிலே தமிழ் ஈழத்தில் நடக்கிறது. அதற்காக புலிகள் ஆயுதம் தாங்கிப் போராடுகின்ற நிலைமையை இன்று நாம் பார்க்கிறோம். நம்முடைய சங்க இலக்கியங்களில் தமிழர் வீரத்தைப் பற்றி விளக்குகிற இலக்கியங்கள் புறநானூறாக இருந்தாலும், வேறு எதுவாக இருந்தாலும் அதிலே பெருமையாக நம்முடைய புலவர்கள் ஒரு பாடலை அடிக்கடி சொல்வார்கள். 'முதல்நாள் போரில் தந்தையை இழந்தாள்; மறுநாள் போரில் சகோதரனைப் பறிகொடுத்தாள்; அடுத்தநாள் போரிலே தன்னுடைய கணவனை இழந்த பெண்ணொருத்தி, தன்னுடைய பால்மணம் மாறாத குழந்தையின் கையிலே ஆயுதம் கொடுத்து அவனைப் போருக்கு அனுப்பி வைத்தாள்.' அடுத்தநாள் போரிலே தானே வாளேந்தி போருக்குச் சென்றாள் என்பது எந்த இலக்கியத்திலும் இல்லை. ஏனென்றால், அன்றைக்கு இல்லை. ஆனால் பெண்ணடிமைத்தனம் இருந்தது. பெண்கள் வீட்டோடு இருக்கவேண்டியவர்கள்; அவர்களுக்கு களத்திலே வேலை இல்லை. அடுக்களையிலேதான் அவர்களுக்கு வேலை என்று நினைத்த காலம் அது. ஆனால் அந்தப் புறநானூற்றை இன்றைக்குத் தலைகீழாய் புரட்டிவிட்டார்கள் தமிழீழத்திலே.

அந்த நாட்டு வீரப் பெண்கள்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீர யுவதிகள் துப்பாக்கியை தோளில் தூக்கி, ஆயுதம் தாங்கி தங்கள் நாட்டை மீட்பதற்கு, தங்கள் மண்ணைக் காப்பதற்கு, தங்கள் குடும்பத்தைக் காப்பதற்கு போராடக்கூடிய நிலைமை வந்திருக்கிறதென்றால், புதிய புறநானூறு இன்றைக்குத் தமிழீழத்திலே எழுதப்படுகிறது. தந்தை பெரியார் உயிரோடு இருந்து பார்த்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார் என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். வரதட்சிணைக் கொடுமையைக் கண்டித்து அன்று பெரியார் பேசினார்; இன்றைக்கு நாமும் கண்டித்துப் பேசி வருகிறோம். ஆனாலும், நாளுக்கு நாள் வரதட்சிணைக் கொடுமை வளர்ந்து கொண்டு போகிறதே தவிர, இங்கே குறையவில்லை. ஆனால், இன்றைக்குத் தமிழீழத்திலே, புலிகளின் ஆட்சி நடக்கின்ற பகுதியிலே வரதட்சிணைக்கொடுமை என்பது அறவே ஒழிக்கப்பட்டாகிவிட்டது. யாராவது வரதட்சிணை வாங்கினாலும், கொடுத்தாலும் அவர்கள் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தக்கூடிய நிலைமை அங்கே இருக்கிறது. தமிழீழத்திலே சாதி ஒழிப்பு இன்றைக்கு பூரணமாக அமுலாகி இருக்கிறது. சாதிக்கொடுமை என்பது, சாதிகளின் பிடிப்பு என்பது, தமிழ் நாட்டைவிட தமிழீழத்திலே அதிகமாக உண்டு. ஆனால், அவர்கள் எவ்வளவு பெரிய மாற்றத்தை பெரியார் வழியிலே கடந்த 10 ஆண்டு காலத்திலே செய்திருக்கிறார்கள். புலிகள் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்றால், ஒன்று கலப்பு மணம், இல்லாவிட்டால் விதவைத் திருமணம், இல்லாவிட்டால் வடக்கு மாநிலத்தைச் சேர்ந்தவன் கிழக்கு மாநிலத்துப் பெண்ணையும், கிழக்கு மாநிலத்தைச் சேர்ந்தவன் வடக்கு மாநிலத்துப் பெண்ணையும் திருமணம் செய்யவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தி, தம்பி பிரபாகரனின் திருமணம் - கலப்பு திருமணம் ஒரு வழிகாட்டியாக அமைந்தது. இன்றைக்கு அது சர்வசாதாரண நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. தந்தை பெரியாரின் பெருந்தொண்டர்கள், உங்களுடைய லட்சியங்கள், பெரியாருடைய வழியிலே நீங்கள் செய்த தியாகங்கள் எல்லாம் வீண்போகவில்லை. அது தமிழ் நாட்டை விட தமிழீத்திலே தத்ரூபமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடை புரட்சிக் கவிஞர் அவர்கள் பாடினார். எந்தக் கவிஞனாக இருந்தாலும், அவனுடைய கற்பனையிலே பல காட்சிகளைக் காண்பான். அது பின்னாலே நினைவுக்கு வராமலேயே போகும். ஆனால் இன்றைக்கும் நினைத்துப் பார்க்கிறேன். கவிஞர் பிறந்த காலத்தில் அல்லது வாழ்ந்த காலத்தில் தம்பி பிரபாகரனும் பிறக்கவில்லை; விடுதலைப் புலிகளும் பிறக்கவில்லை. ஆனால், அவர் என்னென்ன பாடினாரோ அது இன்றைக்கு நனவாகியிருக்கின்றது. அது தமிழீழத்திலே நிறைவேறியிருக்கிறது. இன்னொன்றையும் அவர் சொல்லியிருக்கின்றார்: 'தமிழன் எலி அன்று, தாவும் புலி என்று நீ தரணி அறிய சொல்லு' என்று சொன்னார். அது நனவாகி இருக்கின்றது. 'எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்க, புலியென செயல்பட புறப்படு' என்று சொன்னார். இன்றைக்குப் புலிகள் தமிழீழத்திலே புறப்பட்டு இருக்கிறார்கள். இதைப் பார்க்கும் பொழுதுதான் ஒன்று தெளிவாகியிருக்கிறது. நமது புரட்சிக் கவிஞர் அவர்கள் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார்கள்: 'தென்திசையைப் பார்க்கின்றேன், என் சொல்வேன், என் சிந்தையெல்லாம், தோள்களெல்லாம் பூரிக்கிறது' என்று அவர் ராவணனை நினைத்துப் பாடினார். ஆனால் இன்றைக்கு நான் நினைக்கிறேன். அவர் பிரபாகரன் வரப் போவதை நினைத்துத்தான் 'தென் திசையைப் பார்க்கிறேன், என் தோள்களெல்லாம் பூரிக்கின்றது' என்று பாடினாரோ என்று தோன்றுகிறது.

## மறக்குலப் பெண்மகள்

புது மலர்கள் கை அசைக்க புள்ளினங்கள் இசைபாட
தேன்சுவைக்கும் வண்டினங்கள் ரீங்கார ஒலி எழுப்ப
தென்றலோடு பூமணங்கள் தேடிவந்து உன்னைத் தழுவ
திருமகளே கண்மூடி சிறிதுநேரம் கண்ணுறங்கு

வட்டமிடும் கண்மலரும் வாஞ்சையான உன்மொழியும்
நித்தம் நித்தம் நிழலாடும் நிமிர்ந்த உன் நடை அழகும்
கலகலக்கும் சிரிப்பொலியும் கணீர் என்ற பேச்சொலியும்
காதுகளில் ஒலித்திருக்க கலைமகளே கண்ணுறங்கு

முத்தோ பல்வரிசை முதிர்ந்துதிர்ந்த மாதுளையோ
கண்சிமிட்டும் விண்மீனோ காரிருளில் மின்னலோ
எதை நான் உவமிப்பேன் இளநகையின் அழகிற்கு
ஈழத் தமிழ் அணங்கே இமைமூடி நீ உறங்கு

ஈழத்தின் விடுதலைக்காய் எதிரியை தேடிச்சென்றாய்
உன் பணியை நீ செய்து பிறப்பின் பணிதுய்த்தாய்
பிறப்பின் பணிஅறியாப் பேதையர்கள் மத்தியிலே
மறக்குலப் பெண்மகளே மாலதியே கண்ணுறங்கு

ச. துரைராசா

2ம் பக்கத் தொடர்ச்சி

## அக்கறைப்பூக்கள்

நாம் உலக நாடுகளில் எமது விடுதலைப் போராட்டத்தை தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும். நமது உரிமை, தமிழர் தாயகம் போன்றவை பற்றி தெளிவாக விளக்க வேண்டும். ஏன் இன்னும் தமிழ்நாட்டில் உள்ள பலபேர் கூட தமிழீழ மக்கள் தமிழ்நாட்டில் இருந்து அங்கே போய் அந்த நாட்டில் பாதியைக் கேட்பது என்ன நியாயம் என்கிறார்கள். இன்னும் நமது நிலை தெளிவாக விளக்கப்படவேண்டும்.

ஐயா எரிமலையில் அவசியம் கேள்வி பதில் பகுதியினைச் சேர்க்கவேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறேன்.

பிறந்தநாள் காணும் எம்மினத் தலைவர், தமிழீழத் தலைவர் அவர்களை வாழ்த்த எனக்கு வயதில்லை; ஆகையால் அவரை வணங்குகிறேன். எம்மின மக்கள் உலகில் சுதந்திர நாட்டு மக்களாய் உலாவர எம் தலைவன் பல்லாண்டுகள் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை எம் தலைவனுக்காக என்றும் வேண்டுகிறேன்.

சீதன அரக்கனை அழிக்க தமிழீழ மக்கள் அனைவருமே ஒரணியில் திரள எம் தலைவன் ஆணையிடவேண்டும்.

தமிழீழத்தில் தூயதமிழ் இயக்கம் காக்க கட்டளையிட்ட எம் தலைவனுக்கும் அதில் பணியாற்றும் எம்மினக் காவலர்களுக்கும் என் அடிதாழ்த்தி வணங்குகின்றேன். ஆனால் அதிலும் தமிழ் அல்லாத ஒருவர் பெயரும் உள்ளது. அதனை தமிழ் மேல் அன்புகொண்ட அவர் மாற்றிக்கொள்ள மிகவும் தாழ்மையுடன் விண்ணப்பிக்கின்றேன். மேலும் தமிழீழ மக்கள் அனைவருமே தம் குழந்தைகளுக்கு தூய தமிழ்ப் பெயர் வைக்க எம் தலைவன் ஆணையிடவேண்டும். அதற்கு வசதியாக தமிழ்ப்பெயர் கொண்ட பெயர் பட்டியல்களை வெளியிடவேண்டும்.

ஐயா! தமிழீழத்தில் பல மாவீரர்கள் செய்த தீரச் செயல்களை மற்றும் பல்வேறு விடுதலை சார்ந்த வரலாறுகளை சிறுசிறு புத்தகங்களாக வெளியிடவேண்டும். அப்போதுதான் அவர்களின் வீரம், வருகின்ற நம்மின இளைஞர்களுக்கு மேலும் வீரத்தையும், போராட்டத் துணிவையும் தரும். மேலும் போராட்ட மாவீரர்களுக்கு மதிப்பையும் அளிக்கும்.

மேலும் தமிழீழ வரலாற்றை, மகாவம்சம் முதல் அங்கே இலங்கையில் பன்நெடுங்காலம் தொட்டு வாழ்ந்த தமிழ் மன்னர்களின் வரலாற்றை தொகுத்து வெளியிடவேண்டும். அப்போதுதான் நம்முடைய உண்மை நிலை பலருக்கும் தெளிவாகும். நம்முடைய விடுதலை உணர்வு மேலும் வளர இது உதவும்.

நன்றி

வாழ்க தமிழீழ தலைவர் அவர்கள்
வாழ்க தமிழீழம்
வாழ்க எரிமலை

என்றும் எம்மின மக்களின் நினைவில் வாழும்
தங்களின் இனிய
மாசிலாமணி

www.tamilarangam.net

# உலகின் காற்றைச் சுவாசிக்க முன்னர்...

உயிர்த் தொடர்ச்சி ஆரம்பிக்க முன்னரே, உயிரின் ஒரு பாதியான பெண் கருவை கருக்கட்டிய உடனேயே கலைக்கும் வழக்கம் மனிதரிடையே குறிப்பாக ஆசிய மக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. சீனர்கள் ஒருபுறம், இந்தியர்கள் ஒரு புறம் பெண் கருக் கலைப்பைத் தீவிரமாக்கி வருகின்றனர். இதற்கு நவீன அறிவியல் வளர்ச்சி முன்நிற்கின்றது. ஒளி கடந்த கதிர் மூலம் அறிதல், பரம்பரை அணுக்களைப் பகுத்தறிதல் ஆகிய இருமுறைகள் மூலமாக, கருக்கட்டிய சில வாரங்களிற்குள் கரு ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறியமுடியும். ஒளி கடந்த கதிர் மூலம் பகுத்தறிதல், கருக்கட்டி 18 அல்லது 20 வாரங்களிற்கு பொறுத்து இருக்கவேண்டும். பரம்பரை அணுப் பகுப்பாயின் 08 வாரங்களின் பின் கண்டறியலாம். ஆண் பெண் தொகுதியில் விகிதாசாரம் எப்போதும் பெண்களிற்குச் சாதகமாகியே இருக்கும். ஆயிரம் ஆண்களுக்கு ஆயிரத்து ஐம்பது பெண்கள் என்பதுதான் வழமை. இந்த வழமை உலகு எங்கும் மாறி வருகிறது. பெண் கருக் கலைப்பு இப்படியே தொடருமானால் இன்னும் 50 ஆண்டுகளில் ஆயிரத்திற்கு இருநூற்றி ஐம்பது என்ற விகிதாசாரம் வந்துவிடும். பெண்கள் கிடைப்பதற்கு அரிய பொருள் ஆகிவிடுவர்.

ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்பது பழமொழி. தலைவன் தாழ் தலைப்பட்டு வாழ, வீட்டைவிட்டு புறப்படும் பெண் செலவு, பாதுகாப்பின்மை சார்ந்த பெண்களின் மனோநிலை, தாய்மைக் காலத்தில் உழைப்பிற்கும் காப்பிற்கும் ஆணையே எதிர்பார்க்கும் மென்மைப் பண்பு ஆகிய இவையும், பெண்கள் செலவிற்கு உரியவர்கள் என்ற சமூக மனப்பாங்கும் வரலாற்றின் ஊடாக வளர்ந்துவிட்டன. பெண் பிறந்தால் செலவு, ஆண் பிறந்தால் வரவு. கணவனுடன் போய்விடுவாள் பெண், காலம் முழுவதும் காப்பவன் ஆண் என்ற ஆணாதிக்கக் கருத்துக்களுக்கு வரலாறு உடந்தையாகிவிட்டது. எனவேதான் கருவிலேயே பெண் சிசுவைக் கலைக்கிறார்கள். உலகின் காற்றைச் சுவாசிக்க முன்னர் உலகை விட்டே அனுப்பப்படுகிறாள் சிறுமி.

ஓர் ஆய்வின்படி 79.4 வீதம் பெற்றோர் ஆண் வாரிசுகளை விரும்புகின்றனர். 4.2 வீதம் எப்படியோ ஒரு குழந்தை வேண்டும் என்கின்றனர். 5.7 வீதம் ஆரோக்கியமான குழந்தை வேண்டும் என்கின்றனர். பெரும்பாலும் ஆண்குழந்தை பெற்ற பின்பு மட்டுமே பெற்றோர் கருத்தடைக்கு ஒத்துக்கொள்கின்றனர். இந்தியாவின் பம்பாயிலும், டெல்லியிலும் பல மருத்துவமனைகள், ஆண் குழந்தைகளை மட்டும் கருக்கட்டக்கூடிய தொழில்நுட்பம் தம்மிடம் உண்டு என விளம்பரப்படுத்துகின்றன.

எக்ஸ் நிற உரு விந்தை, வை நிற உருவிந்திலிருந்து மசையீர்ப்பு மூலம் வேறுபடுத்தி, வை நிற உரு அதிகமாக உள்ள விந்தைப் பயன்படுத்தி கருக்கட்டுவதன் மூலம் 80 முதல் 85 விழுக்காடு ஆண் கருக்களை உறுதிசெய்கின்றனர்.

பொருளாதாரக் காரணம், சமூகக் கண்ணோட்டம், ஆண் ஆதிக்க வரலாறு என்பன பெண் கருக் கலைப்பிற்கு அடிப்படைக் காரணங்கள் என்று சொல்லப்படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கள் தேசம் நிமிர்வுற நிமிர்ந்தவன்

லெப். கேணல் மல்லி விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவன்.

இவன் விடுதலைப் போராட்ட காலத்தில் பல களங்களில் தன் முத்திரையைப் பதித்தவன்.

இரு தேசங்களின் ஆக்கிரமிப்பு இராணுவங்களுடன் இவன் போராடினான். புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு எனும் இடத்தில் பிறந்தான். நீண்ட போராட்ட வாழ்வில் ஓயாது கடுமையாக உழைத்தவன். தனைவருத்தி தன்னொளி பார்த்தவன்.



அமைதிப் போர்வையுடன் வந்த இந்தியப் படைகள் முள்ளியவளையில் முகாம் இட்டிருந்தன. 1989ம் ஆண்டில் இம்முகாம் மீதான தாக்குதலில் பங்கேற்று நின்றான். இந்தக் காலப்பகுதியிலேயே அவர்களோடு கூட்டாக நின்ற கும்பல்கள், கிளிநொச்சி 18ம் போர் எனும் இடத்தில் முகாம் அமைக்க முற்பட்ட வேளையில் (E.N.D.L.F) அந்த தேசத் துரோகிகள் மீதான தாக்குதலில் ஈடுபட்டான்.

1990களில் கொக்காவில், முல்லைத்தீவு, மாங்குளம் என தொடர்ந்து வீழ்ந்த இராணுவ முகாம்களின் தாக்குதல்களில் முன்நின்றான்.

1991 ஆ.க.வே என விடுதலைப் புலிகளால் பெயர் சூட்டப்பட்டு நடாத்தப்பட்ட அனையிறவு முகாம் மீதான தாக்குதல்களிலும், 1992ல்

## போர் ஓய்வு மீறல்

திருமதி சந்திரிகா குமாரணத்துங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருவாரப் போர் ஓய்விற்கு எதிராக சிறீலங்காப் படையினர் 17.11.94 நெடுங்கேணியில் பதுங்கித் தாக்கியதில் எமது மூத்த தளபதி லெப். கேணல் மல்வி வீரச்சாவை அடைந்தான். அவனது தலையை படையினர் கோரமாக வெட்டி எடுத்துச் சென்றனர்.

விடுதலைப் புலிகள் அறிவித்த ஒரு வார கால போர் ஓய்வையும், இப்போர் ஓய்வு தொடர்பாக 'விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்தால் அரசாங்கம் அதற்குப் பிரதிகூலமாக நடந்துகொள்ளும். மோதல்கள் தவிர்க்கப்படுமானால் அது சம்பிரதாயபூர்வ போர் நிறுத்தத்திற்கு இட்டுச் செல்லும்' என்று சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் கேணல் அனுரத்த ரத்வத்த அறிவித்ததையும் உதாசீனப்படுத்தும் வகையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக நடாத்தப்பட்ட தாக்குதல் ஆறாவது போர் ஓய்வு மீறல் நடவடிக்கையாக இருந்தது. அக்காலத்தில் அதே பகுதியில் இரு பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் காயப்பட்டுத்தப்பட்டு அரசகரும மொழியினால் தூசிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதைவிடவும் மட்டக்களப்பு அரிப்பு கடல் பகுதி, வடமராட்சிக் கடற்பகுதி ஆகிய இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டதும் சாவகச் சேரியில் பயணிகள் பேருந்துமீது உலங்குவானூர்தியிலிருந்து தாக்குதலுக்குள்ளானதும் குறிப்பிடத்தக்கது. நெடுங்கேணியில் வீரச்சாவெய்திய மூத்த தளபதி லெப். கேணல் மல்லியின் தலையை வெட்டிய சிறிலங்கா இராணுவத்தினர் அதனைத் தம்முடன் எடுத்துச் சென்றனர். 1990க்குப் பின்னர் இவ்வாறான செயலில் இப்பகுதி இராணுவத்தினர் ஈடுபடுவது இரண்டாவது தடவையாக இருக்கின்றது. 1987ல் மன்னார் ஆட்காட்டி வெளியில் மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேணல் விக்டரின் புதைகுழியைத் தோண்டிய சிறிலங்கா இராணுவத்தினர் அவரது தலையையும் வெட்டியெடுத்துச் சென்றிருந்தனர். கொலைவெறியும், ஒழுக்கமும், கட்டுப்பாடும் அற்ற ஆக்கிரமிப்பு இராணுவத்தினரின் செயல்கள் கட்டுமீறிச் செல்கின்ற வேளையில் எல்லாம் சிம்மசொப்பனமாய் நின்ற அந்த வீரர்களின் பெயர்களைக் கேட்டாலே நடுங்குகின்றவர்களாய் இராணுவம் இருந்ததின் எதிர் விளைவுகளாய் அவர்களது இச் செயல்கள் அமைகின்றன.

மனித நாகரிகமே வெட்கித் தலைகுனியும் இவ் இழி செயலுக்குரியவரின் கூடாரமாய் சிறீலங்கா இராணுவம் மாறிவருவதை இச்செயல்கள் காட்டுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வண்ணாங்குள முகாம் தாக்குதல்களிலும் 1993ல் பூநகரி முகாம் தாக்குதல்களிலும் புயலென நின்றான். 1990ம் ஆண்டு மாங்குள முகாமிலிருந்து மல்லாவிப் பக்கமாக முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் நேரடி மோதலில் நின்றான்.

சிலாவத்துறையில் இருந்து அளம்பில் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருடனான நேரடி மோதலில் குதித்தான்.

யாழ்தேவி எனப் பெயரிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை அது. கட்டைக்காட்டிலிருந்து புலோப்பளையை நோக்கி முன்னேற முயன்ற யாழ்தேவியை தடம்புரள வைத்தான். அன்பும் பண்பும் அகத்திருத்திய மனிதரைச் சுமந்து யாழ்தேவியின் வரலாமேயன்றி ஆக்கிரமிப்பு எண்ணங் கொண்டு எவரும் வருதல் இயலாது என்று எதிர் நின்றான். தாயை தாய்த் தேசத்தை தன் உயிரினும் மேலாகப் பூசிக்கின்றவன். போர் என்றால் நெஞ்சம் பூரித்து தோள்கள் வலுவுற நிமிர்ந்து நடந்தவன். எங்கள் தேசம் நிமர்வுற நிமிர்ந்தவன்

## ஆர்த்தெழும் கடலென மக்கள்


**இத் தாக்குதலில் வீரமரணமடைந்த மல்லிக்கும் அவருடன் வீரமரணமமடைந்த வீரவேங்கை அருளப்பனுக்கும்**

**அஞ்சலி செலுத்த பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்திற்கு மாவீரரின் பூதவுடல் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டது. அங்கு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. ஒலிபெருக்கி வாகனம் முன்செல்ல புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் மாணவர்கள் தொடர அரச ஊழியர்கள், விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள், காவல் துறையினர் அனைவரும் அணிவகுத்துச் சென்றனர். வன்னி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் புவிதரன் - முல்லைக்கோட்ட அரசியல் பொறுப்பாளர் இசையருவன் ஆகியோர் அஞ்சலியுரையாற்றினர். மல்லியின் வீரச்சாவினால் புதுக்குடியிருப்பு சோகமாயிருந்தது. வீதியெங்கும் கறுப்புக் கொடிகள் பறந்தன. தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன; வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. இதுவரை காணாத அளவிற்கு பெருந்தொகையான மக்கள் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்கள்.**

www.tamilarangam.net

**புலி மறவர்களின் பெருமைகளை
புவி அறியச் செய்திடும்
எரிமலை இதழிற்கு எந்தன்
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் !
இருந்தும்
எங்களுக்கு இன்று இல்லை
இதயம் மகிழும் தைத்திருநாள்.
எல்லைதொட்டு
தமிழ் ஈழம் வென்று
புது நெல்லையிட்டு(ப்)
பொங்கும் நாளே
இதயம் துள்ளுகின்ற
தைத்திருநாள்.
கையைவிட்டுப் போன மண்ணை
காதலுடன் மீட்டுவந்து
பசு நெய்யைவிட்டு
பொங்கும் நாளே
நினைக்க இனிக்கும் தைத்திருநாள்.
சண்டைக்குப் போகும் புலிவீரர்
சங்குகொண்டு ஊதி - வெற்றி
சாதித்த பின்னர் நாங்கள்
சக்கரையிட்டுப் பொங்கும் நாளே - உண்மை
சந்தோசங்கள் நிறைந்த பொங்கல்.
முற்றுகையிடும் பகைப்படையை
புறமுதுகுகாட்ட வைத்தபின்னர்
எங்கள் முற்றத்தில் பொங்கும் பொங்கல்
முக்கனிகளிலும் மூவுலகிலும் தித்திக்கும்
தைத்திருநாட் பொங்கல்.**

*ஜெகதீஸ்வரி இராஜரட்ணம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இங்கேயும் இகலிகைகள்

## மலையமான்தேவி

நமது சமூக அமைப்பு மிகவும் இறுக்கமானது. சிலந்தி வலையைப் போன்ற பல பின்னல்களால் தம்மைத் தாமே இறுக்கப் பிடித்திருப்பது. இங்கே பெண் என்பவள் சில சமயங்களில் மிக முக்கியமான உயிரியாக நோக்கப்படுகின்றாள். சிலபோது அவள் இருப்பதே பொருட்படுத் தப்படுவதில்லை. ஏனோ தெரிய வில்லை, நம் சமூகம் பெண்கள் விடயத்தில் மிக மிக இறுக்கமாகவே நடந்து கொள்கின்றது.

குடும்பத்தின் அல்லது நாட்டின் மிக முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கான ஆலோசனை நடை பெறும் சமயங்களில், தம்மிடையே 'பெண்' என்று ஒரு இனம் இருப் பதை நம் சமூகம் பொருட்படுத் துவதில்லை.

மனைவி உடனிருந்தால் மட்டுமே கலந்து கொள்ளக்கூடியதான மத நிகழ்வுகளின் போதும், இயல்பான உணர்வுத் தேவை எழுகின்ற வேளைகளிலும் மட்டுமே பெண் ஒரு முக்கிய உயிரியாக கருதப் படுகின்றாள்.

இவ்வாறு நம் சமூகத்திடையே பெண் என்பவள் தேவைப்பட்ட நேரங்களில் பயன்படுத்தப்படுவதும், தேவையற்ற நேரங்களில் அலட்சியப் படுத்துவதுமான நடைமுறையே அன்றிலிருந்து இன்றுவரை வழக்கிலி ருந்து வருகின்றது. பெண்ணைப் பற்றிய ஒரு தெளிவான பார்வை எந்தச் சந்தர்ப்பத்திலுமே நம் சமூகத் திடையே இருந்ததாகத் தெரிய வில்லை.

பெண்ணின் நலன்களைப் பற்றியும் அவளது அடிப்படை உரிமைகள் பற்றியும் ஒருவிதமான கவலையையோ அக்கறையையோ கொண்டிராத சமூகம், அவளது நடவடிக்கைகள் தனக்கு ஏற்புடைய தல்லாமல் இருக்கின்றது என எண்ணினால், அல்லது பெண்ணை இப்படியே விட்டால் அவள் தம்மையே விஞ்சிவிடுவாள் என்ற அச்சம் ஏற்பட்டால், அப்பெண் ணைக் கடுமையாக விமர்சிக்கும், அந்த நேரங்களில் எல்லோராலும் பரபரப்பாகப் பேசப்படுகின்ற ஒரு விந்தைப் பொருளாகப் பெண் மாற்றமடைகின்றாள். பெண்ணின் பக்கமே நியாயம் இருந்தாலும், அவளுக்கே 'குற்றவாளி' என்று பட்டம் சூட்டப்படும். சிற்சில சமயங்களில் வெகு அபூர்வமாக, யாரோ ஒரு சிலரால் அவள் பக்க நியாயம் ஏற்றுக்கொள்ளப்படும்.

நம் பெண்கள் ஒவ்வொருவரும் மனத்தளவில் அனுபவிக்கின்ற இதே துயரங்களை, துன்பங்களை, 'அகலிகை' என்ற பாத்திரமும் அனுபவித்தது. அகலிகையின் செயலின் சாதக, பாதக விளைவு களை ஆழ்ந்து நோக்கி, அவள் பக்க நீதிகளைக் கருத்தில் கொண்டு அவளைப் படைத்தவர்களும் இருக்கின்றார்கள். இவை எதையுமே கருத்தில் கொள்ளாது அகலிகையை ஒருதலைப் பட்சமாகக் குற்றம் கூறியவர்களும் இருக்கின்றார்கள்.

வால்மீகியினது படைப்பில் அகலிகை திடமனமில்லாத, ஆசைக்கு இலகுவில் அடிபணிந்து போகின்ற பெண்ணாகச் சித்தரிக் கப்பட்டாள்.

'அழகே வடிவெடுத்து வந்த எண்ணிறைந்த தேவ கன்னிகளுக்குத் தலைவனான தேவேந்திரன், அவர்களை அலட்சியம் செய்து, தன்னை மேலாக எண்ணி ஆசை வைத்ததால் கர்வமடைந்து, புத்தி மயங்கி அவனிடம் ஆசைவைத்தாள். பிறகு தன் இச்சை நிறைவேறியதால் மகிழ்ச்சியடைந்து இந்திரனைப் பார்த்து, "உன் நட்பால் மிகவும் ஆனந்தமடைந்தேன். மகா முனிவர் வருவதற்கு முன் இங்கிருந்து புறப்பட்டுப்போ. உனக்கும் எனக்கும் இதனால் யாதொரு கெடுதியும் நேராமல் கவனமாக இருக்க வேண்டும்." என்றாள்,

இவ்வாறு அகலிகையை வால்மீகி படைத்தார். கம்பனுடைய அகலிகையோ, உறவின்போது இடையில், தன்னுடனிருப்பது கணவரல்ல, வேறொருவர் என்று தெரிந்து கொள்கின்றாள். ஆனாலும் அமைதியாக இருக்கின்றாள். கணவனல்லாத பிறனுடன் வாழ்வது தகாது என்று அவள் நினைக்க வில்லை.

முதலியார், அகலிகையைக் குற்றமுடையவளாகக் காட்டாவிடி னும், அந்தச் சம்பவத்தின்பின் அவள் தனது தராதரத்தை நினைத் துப் பலவாறு மறுகுகின்றாள். முதலியாருடைய அகலிகை தாழ்வு மனப்பாங்கு கொண்டவள்.

யோகியாரின் அகலிகை குற்ற மற்றவள். இந்திரன் தன் இச்சையை அவளிடம் வெளியிட்டபோது அவனை இடித்துரைக்கும் நேர் நெஞ்சு கொண்டவள். ஆனாலும் 'கல்லானாலும் கணவன், புல்லா னாலும் புருஷன்' என்ற மூடக் கோட்பாட்டில் ஊறிப்போனவ ளாகச் சித்தரிக்கப்படுகின்றாள்.

கல்லாக இருந்தால், அகலிகை உயிர் பெற்றபின் கோதமன் அவளுடன் வாழ மறுக்கின்றான். சிறுவயதில் இந்திரனுடன் அகலிகை நட்பாக இருந்ததை இழித்துரைக் கின்றான். 'இந்திரனை அகலிகை அப்போது காதலித்ததாலேதான், பின்னர் இத்தகைய தவறு நேர்ந்தது' என்று பொய்க்காரணம் கூறுகின் றான்.

ஆனாலும் இராமனின் கட்ட ளைப்படி அகலிகையிடம் கோதமன் மன்னிப்புக் கேட்பதற்காய் அவளின் பாதங்களில் விழ முன், தான் கோதமனின் பாதங்களில் வீழ்கின் றாள். அவன் தன்னை அந்நியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முன் இழிவுபடுத்திய பின்னும் அவனோடு வாழ இசைகின்றாள். ஏனென்றால் கோதமன் ஆண். அதிலும் அகலிகையின் கணவன் அல்லவா? அவன் அவளை என்ன செய்தாலும் அது சரி அல்லவா? (இதை எழுதியதும் ஒரு ஆண் என்பது இங்கு நோக்குதற்குரியது.)

மகா கவியாரின் அகலிகை மிக்க மன வலிமை உடையவள். தன்னுடன் உறவு கொண்டவன் ஒரு அந்நியன் என்பதை அறிந்த அக்கணமே தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி தன்னை ஒரு நிலைக்குக் கொண்டுவந்து விடுகின்றாள் (கல்லாகின்றாள்.)

ஒரு பெண், ஆணாதிக்க சமுதாய அமைப்பின் இறுக்கமான பிடியில் நசியுண்டு, தன் உணர்வுகளை வெளிக்காட்ட முடியாது வாழ்கின்றாள் என்ற விடயம், ஞானியின் அகலிகை தன் செய்தியில் கூறும் விடயங்களில் ஒன்று.

'மானோடு ஓட விரும்பிய என் கால்களில் மந்திரக் கயிறு பூட்டினான்.

காடெல்லாம் சுற்றிவர விரும்பிய என்னை குடிசைக் கொட்டிலில் கட்டிப் போட்டான்' மதம் எவ்வாறு பெண்களை அடக்கியது என்பதையும் அவள் சொல்லுகின்றாள்.

'மனக் கொடி வீட்டைக் கட்டும்போது வேதப் படையல் வெட்டிப் போட்டான்'

ஞானியின் அகலிகை சமூகத்தின் பல பிரச்சினைகளையும் பார்க்கின்றாள். ஒரு பெண்ணின் உள் மன உணர்வுகளை தன்மூலம் வெளிப்படுத்துகின்றாள்.

புதுமைப் பித்தனின் அகலிகை மேல் கௌதமர் அளவற்ற அன்பும், நம்பிக்கையும் கொண்டவர். அத்தோடு அகலிகையும் அந்நிய ஆடவரை நாடுபவளல்ல. இருவரிடையேயும் ஆழமான புரிந்துணர்வு இருப்பதால், அகலிகை அறியாமல் இந்திரனுடன் உறவு கொண்டதை கௌதமர் பொருட்படுத்தவில்லை.

பிச்சமூர்த்தியின் உயிர்மகளில், ஒரு பெண்ணின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத ஆணின்

www.tamilarangam.net

**பிஞ்சுமனம்**

**நெறியாள்கை: கேசவராஜன்**
**யாழ். மாவட்டக் கலைஞர்கள்**
**விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம்**
**இசையமைப்பு: ராஜன் இசைக்குழு**

1986 - 1987 காலப்பகுதிகளில் தயாரிக்கப்பட்ட 'மரணம் வாழ்வின் முடிவல்ல', 'தாயகமே தாகம்' ஆகிய இரு நீளப் படங்களின் இயக்குனர் திரு. கேசவராஜனின் கதை, திரைக்கதை, வசனம், நெறியாள்கையில் இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

பிஞ்சுமனம் எனும் இவ் முழு நீளப்படத்தினை நிதர்சனமும் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகமும் இணைந்து தயாரித்துள்ளனர்.

மனைவி(?)யாக மாறுகின்றாள் அகலிகை. தன்னுடைய உணர்வுகளை கௌதமரிடம் வெளிப்படுத்தியும்கூட, கௌதமர் எதையுமே கருத்தில் எடுக்கவில்லை. ஆனால் அகலிகையைத் தன் மனைவியாகச் சரியான முறையில் பேணாத கௌதமர், அவள் இந்திரனோடு உறவு கொண்டதும் சீற்றமடைகின்றார். அவளை உணர்வுகளே இல்லாதவளாய், கல்லாய் மாறும்படி சாபமிட்டார். தன்னுடைய உடைமையாகத் தான் நினைத்த அகலிகையை இன்னொருவன் உடைமை கொள்ளக் கூடாது என்ற கௌதமரின் வக்கிர உணர்வுக்குப் பலியாகிய அகலிகை கல்லானாள். இங்கே கௌதமரின் ஆதிக்கத்தின் உச்சவெறி தெரிகின்றது.

'அகலிகை' என்ற பாத்திரத்தை துன்பப்படுகின்ற, தன் துயர்களைப் பகிர்ந்துகொள்ள யாருமேயற்ற ஒரு பெண்ணுக்குரிய எடுகோளாக நாம் கொள்ளுவோம். அப்படிப் பார்க்கப்போனால் ஒவ்வொருவருடைய கோணத்திலும் அந்தப் பெண் என்ன பார்வையில் தெரிகின்றாள் என்பது தெளிவாகும். தன் மனைவியுடன் அந்நியன் ஒருவன் உறவு கொண்டான் என்பதை அறியும் போது ஒவ்வொருவருடைய கௌதமர்களும் வெவ்வேறு விதமாத நடந்து கொள்கின்றனர் என்பதை அவதானிக்கலாம்.

வால்மீகியின் கௌதமர் ஒரு விதமான விசாரணையுமின்றி அகலிகையைக் கல்லாகுமாறு சபிக்கின்றார். கம்பனின் கௌதமர் 'விலைமகள்' என்று அகலிகையைக் கூறுகின்றார். முதலியாரின் கௌதமர் 'உனக்கே தெரியாமல் நடந்த தவறை நினைத்து உனக்குள்ளேயே நீ வருந்தாமல் கல்லாவாய்' என்கின்றார். இங்கே முதலியாரின் கௌதமர் தன் மனைவியின் மனவேதனையை தணிப்பதற்காகவே அவளைக் கல்லாக்கினார். யோகியாரின் கௌதமர், இல்லற ஒழுக்கத்தை அழித்த அகலிகை உடனேயே கல்லாக வேண்டும் என்கின்றார். பிச்சமூர்த்தியின் கௌதமர், அகலிகை மானத்தை இழந்துவிட்டதாகவும், தன்னை ஏமாற்றியதாகவும் அவளுடைய உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள யாருமே இல்லாத வண்ணம் கல்லாகுமாறும் சபித்தார். புதுமைப் பித்தனின் இரு கௌதமர்களுள் ஒருவர் 'மனத் தூய்மையில்தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் என்ன செய்யமுடியும்?' என்கின்றார். மற்றைய கௌதமர், முன்பு அவளை விலைமகள் என்று ஏசியதையே எண்ணி எண்ணி மறுகின்றார்.

புதுமைப் பித்தனின் அகலிகை சற்று வித்தியாசமானவள்.

"உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா? நிரூபித்துவிட்டால்மட்டும் அது உண்மையாகி விடப் போகின்றதா, உள்ளத்தைத் தொடவில்லையானால்?"

என்று சீதையிடம், சீதையின் அக்கினிக் குளியலை விமரிசனம் செய்யும் தர்க்கவாதியாக அவள் தோன்றுகின்றாள்.

எழுதியவர்களின் மனநிலைக்கேற்ப அகலிகைகளும் தம் இயல்பில் வேறுபடுகின்றார்கள்.

தெரிந்தே தவறிய அகலிகையும்,

தெரியாத்தனமாகத் தவறு நேர்ந்த போதிலும் கணவனால் புரிந்து கொள்ளப்படாமல் சாபமிடப்பட்ட அகலிகையும்,

கணவன் தன் இச்சைகளை நிறைவேற்றாததால் தவறவேண்டிய

சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட அகலி கையும்,

நடந்த சம்பவத்தைத் தீர விசாரிக்காது அல்லது விசாரிக்க விரும்பாது தன் மனைவியையே குற்றம் சாட்டிய கௌதமர்களும்,

தவறு நடந்ததற்கான காரணம் தெரியாதபோதும் மனைவியிடம் பரிவு கொண்டு அவளை ஆறுதல் படுத்திய கௌதமர்களும்...

ஒரு சமூகத்தில் வாழும் பலதரப்பட்ட மக்களது பலதரப்பட மன உணர்வுகளை அகலிக்கைக் கதைகள் வெளிப்படுத்துகின்றன. ஒரு பெண்ணின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் தன்னிச்சைப் படி அவளை நடத்தும் ஆடவர்க ளும் வருகின்றார்கள். அவளைப் புரிந்துகொள்கின்ற, அவளின் நலனில் அக்கறை கொள்கின்ற ஆடவர்களும் வருகின்றனர்.

ஒரு பெண்ணின் நடவடிக்கை கள் சமூகத்தில் எப்படி நோக்கப் படுகின்றன, ஒரு பெண் எப்படி நோக்கப்படுகின்றாள் என்பதற்கு ஒரு சிறு உதாரணமாக அகலிகை யைச் சுற்றி நடமாடுகின்ற பாத்தி ரங்களின் நடவடிக்கைகளைச் சொல்லலாம்.

இன்று எம்மிடையேகூடப் பல அகலிகைகள் (அவளை நாம் துன் பப்படுகின்ற ஒரு பெண்ணுக்கான எடுகோளாகத்தான் கருதுகின்றோம்) தம்மைத் தமக்குள்ளே வைத்துப் பூட்டியவாறு, உணர்வுகள் ஒடுக் கப்பட்ட நிலையில் கற்களாகச் சமைந்திருக்கின்றனர். இவர்களுக்கு எப்போது சாப மீட்சி கிடைக்கப் போகின்றது? (இலக்கியங்களில் வந்ததுபோன்று இங்கு இராம, இலட்சுமணர்கள் வரமாட்டார்கள். ஆகவே நாங்களேதான்...) புதுமைப் பித்தனின் சாபவிமோசனத்தில் வரும் அகலிகை போன்று யார் சற்று வித்தியாசமாகச் சிந்திக்கப் போகின்றார்கள்.

இந்த அகலிகையின் சாபம் தீர, அவர்களேதான் முயலவேண்டும் என்ற உண்மையை எல்லாப் பெண் களும் புரிந்துகொள்கின்றவரை, புரிந்து கொண்டுஎழுந்துகொள்கின்ற வரை கற்களாக இருப்பதைத் தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'ஈழநாதம்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து

# எச்சரிக்கை அவசியம் தேவை

இலங்கை அரசியல் விவகாரத்தில் இந்தியாவின் புலனாய்வுத்துறையான 'றோ' அதிக அக்கறை காட்டி வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. இந்தவகையில் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள், மற்றும் காமினி திஸநாயக்காவின் கொலை தொடர்பான விவகாரங்கள் குறித்தும் மிக அவதானமாகவும், மிக நுணுக்கமாகவும் 'றோ' ஆராய்ந்தும் வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'றோ' வின் இவ் அக்கறை காமினி திஸநாயக்கா கொல்லப்பட்டது தொடர்பான தகவல் சில நிமிடங்களிலேயே டில்லியிலுள்ள றோவின் செயலாளருக்கு அனுப்பப்பட்டதில் இருந்து புரிந்துகொள்ள முடியும். அத்தோடு காமினி கொலை தொடர்பான வீடியோ கசட்டை பல தடவை மீண்டும் மீண்டும் போட்டுப்பார்த்து பல மணித்தியாலங்கள் ஆராய்ந்ததிலிருந்தும் தெரிந்துகொள்ள முடியும்.

ஆனால், இது ஒரு ஆச்சரியமளிக்கும் விடயமல்ல. அண்டையில் உள்ள சிறிய நாடுகளின் அரசியலில் புகுந்து விளையாடுவது பெரிய நாடுகளின் பொதுப்பண்பாகவே உள்ளது. இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து அவமானப்பட்டு வெளியேறிய போதும் 'றோ' வின் கவனம் இலங்கையில் இருந்து திரும்பியிருந்தது என்று கூறுவதற்கில்லை. மறுவளமாக தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்கள் அதன் கவனத்தை அதிகரித்தது என்றே கொள்ளலாம்.

இதேசமயம் காமினியின் கொலையானது 'றோ'விற்குப் பலத்த இழப்பு என்றே கருதவேண்டியுள்ளது. ஏனெனில் இந்திய அரசுடன் நெருக்கமாக உறவைக் கொண்டிருந்தது போன்றே காமினி திஸநாயக்கா இந்திய புலனாய்வுத்துறையான 'றோவுடனும்' நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தார்.

அண்மையில் இடம்பெற்ற காமினி திஸநாயக்காவின் இந்திய விஜயத்தின் போதும் இதனை ஊர்ஜிதப்படுத்தும் சம்பவங்கள் நடந்தே இருந்தன. இப்பயணத்தில் இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரிகளுடன் இலங்கை நிலவரம் பற்றி காமினி திஸநாயக்கா பேசியிருந்தார். இப்பேச்சுக்களில் தமது எதிர்கால அரசியல் திட்டங்கள் குறித்து காமினி தெளிவுபடுத்தியிருந்ததாக அறியவருகிறது. இதேசமயம் இந்தியப் புலனாய்வுத்துறை, காமினி திஸநாயக்காவிற்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாது என இந்தியப் பிரதமருக்கு எச்சரித்து. இதிலிருந்தே காமினி மீது எவ்வளவு நம்பிக்கையை இந்தியப் புலனாய்வுத்துறை கொண்டிருந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆகையினால் சிறீலங்கா இந்திய சமாதான உடன்பாடு தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்தியப் புலனாய்வுத்துறைக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவு காமினியின் கொலை என்று கூறுவதில் தவறு இல்லை. இந்த நிலையில் இலங்கை விவகாரத்தில் இந்தியப் புலனாய்வுத்துறை தனது செயற்பாட்டை முடுக்கி விடுவதில் ஆச்சரியப்பட எதுவுமே இல்லை.

மேலும் சிறீலங்காவின் புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றை காண எடுக்கும் முயற்சிகளை இந்தியப் புலனாய்வுத்துறை தமது விருப்பத்திற்கு விரோதமான செயல் என்று கருதக்கூடும். ஏற்கனவே விடுதலைப்புலிகளுடன் முரண்பாட்டைக் கொண்டுள்ள இந்தியப் புலனாய்வுத்துறை தம்முடன் விரோதமுடையவர்களுடன் சிறீலங்கா அரசாங்கம் உடன்பாடு செய்து கொள்வதையோ, அப்பிராந்தியத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதையோ அதனால் ஏற்றுக்கொள்ள முடியாது போயிருக்கலாம்.

இந்த நிலையில் 'றோ' அமைப்பானது இலங்கையில் நடைபெறும் அரசியல் மாற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிப் பார்த்துக்கொண்டும் ஆராய்ந்துகொண்டும் சும்மா இருக்கும் என்று கருதிவிட முடியாது. இவ்விடயங்களில் தன்னாலான முட்டுக்கட்டைகளையும் தடைகளையும் தோற்றுவித்துக்கொண்டு இருக்கும். தனது நோக்கங்கள், விருப்பங்கள் என்பவற்றிற்கு இடையூறாக உள்ளவற்றை அகற்றவும் அழிக்கவும் அது முனைப்புடன் செயற்படும்.

இந்தவகையில் இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் முழுமனதுடன் தீர்வுகாண விளையுமானால் 'றோ' விடயத்திலும் அது அக்கறை காட்டவேண்டும். இந்திய அரசாங்கத்துடன் சிறீலங்கா அரசு நல்லுறவைப் பேணினாலும் கூட 'றோ' அதனையும் மீறி தனது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்லாம். ஒருநிலையில் இந்தியா - சிறீலங்கா நல்லுறவையே பாதிப்படையவும் செய்யலாம். உலகிலுள்ள பிரபலமான புலனாய்வுத்துறைகள் இதுபோன்ற கைங்கரியங்களைச் செய்துள்ளன.

ஆகையினால் சிறீலங்கா அரசு 'றோ' விடயத்தில் கவனமான செயற்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். இல்லாது போனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் விருப்பத்தையும் மீறி இனப்பிரச்சினைக்கான சமாதான ரீதியிலான தீர்வையும் அமைதியையும் குழப்பி அடித்துவிட அதனால் இயலும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பொங்கிடும் கடலில் புலிமறவீரர்**
**போய்வரக்கூட முடியாதா? - நாம்**
**எந்தையர் கடலில் எழுந்திடக் கூட**
**இந்திய நாடு தடைதானா?**
**தடைதானா.... தடைதானா....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்